முத்தமிழ் மன்றம்

தேதி: | வள்ளுவர் ஆண்டு: | தமிழ் மாதம் :

வினை 1

மின்னொளை

ஆசிரியர்

அ

முன்னோட்ட எச்சரிக்கை:

எனக்கும் கதை எழுதுவதற்கும் காத தூரம் என்பதும் கதை எழுதியதே கிடையாது என்பதும், சுட்டுப் போட்டாலும் கதை எழுத எனக்கு வராது என்பதும் எனக்கே உள்ளங்கை நெல்லிக் கனியென தெரியும்.

எந்த ஒரு ஆக்கத்திற்கும் இரு வகையான தூண்டுகோல்கள் இருக்கும். ஒன்று நேர்மறை தூண்டுகோல். இன்னொன்று எதிர்மறை தூண்டுகோல். நேர்மறை தூண்டுகோல் என்றால், "அவரோட கதையைப் பாருங்கள். என்னமாய் எழுதியிருக்கிறார். எழுதினால் அவரைப் போல் எழுதணும்" என்று எண்ணுவது. எதிர்மறை தூண்டுகோல் என்றால், "அவரோட கதையைப் பாருங்க! அவரே எழுதும் போது நான் எழுதினால் என்ன?" என்று எண்ணுவது.

என்னைப் பொருத்தவரை நேர்மறை தூண்டுகோல்களே என்னைத் தூண்டுகின்றன. அவ்வகை எழுத்தாளர்கள் நம் மன்றத்திலேயே உண்டு. அவர்கள் ராகவன் அண்ணா, மோகன், மற்றும் வெங்கடரங்கன். இவர்களின் கதைகளைப் படித்த பின்பு நானும் எனது கன்னி முயற்சியைத் துவங்கலாம் என்று இருக்கிறேன்.

ஒரு கதையின் கரு மனதில் இருக்கிறது. அதன் தலைப்பு தான் இளமையெனும் பூங்காற்று. பூங்காற்று எவ்வளவு தூரம் வாசம் வீசுமோ தெரியவில்லை!

பூனை புலிகளைப் பார்த்து சூடு போட்டுக் கொண்ட கதையில் பூனையாய் இருக்கிறேன். கடைசியில் சொல்லுங்கள் பூனையா? புலியா? என்று. சரியில்லை என்றால் பாதியிலேயே சொல்லி விடுங்கள். சூடு போட்டுக் கொள்வதாவது மிச்சம்!

இந்த முன்னோட்ட எச்சரிகையையும் மீறி கதையைப் படிக்க நினைப்பவர்கள் வாருங்கள். பூங்காற்றை (சு)வாசிப்போம்.

பாகம்: 1

மதுரை-தேனி சாலையில் இருக்கும் ராகவா பொறியியல் கல்லூரி வளாகம். கல்லூரி மொத்தமும் அழகிய மரங்களால் நிரம்பி இது பொறியியல் கல்லூரியா அல்லது வேளாணமைக் கல்லூரியா என்று சந்தேகம் கொள்ள வைத்திருந்தது. மலையடிவாரத்தில் இருந்ததால் குளிர்ச்சிக்கும் வைகை அணைக்கு அருகில் இருந்ததால் நீர்வளத்திற்கும் கொஞ்சமும் பஞ்சமில்லாமல் வளர்ந்திருந்தன மரங்கள்.

பொறியியல் படிப்பின் தேவையினாலோ அல்லது ஐந்து நட்சத்திர தகுதி பெற்ற கல்லூரி நிர்வாகத்தினாலோ அல்லது முன்னாள் மாணவர்களின் சாதனையாலோ ராகவா பொறியியல் கல்லூரி சர்வதேச அந்தஸ்து பெற்றிருந்தது. இத்தனைக்கும் இங்கு மாணவ மாணவிகளை யாரும் படியுங்கள் என்று கூட சொல்வதில்லை. அவர்களாகவே சிரத்தையெடுத்து படிக்கும் கல்லூரி இது! காரணம் படித்து முடித்ததும் வேலை தேடி யாரும் அலைய வேண்டியதில்லை. வாய்ப்புக்களைச் சுயம்வரம் வைத்து தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு.

வானளாவிய நேர்த்தியான கட்டிடங்கள். நவீன முறையில் வடிவமைக்கப்பட்டு வெளியிலிருந்து காணும் போது கம்பீரத்தையும் உள்ளே காணும் போது கல்வி கற்கும் நல்ல சூழ்நிலையும் கொண்டு திகழ்ந்தன அனைத்து கட்டிடங்களும். மொத்தத்தில் யார் ஒருவரும் நானும் இந்தக் கல்லூரியில் சில நாட்களாவது படிக்க மாட்டோமா என்று ஏங்க வைக்கும் கல்லூரி. இங்கு நன்கொடை கொடுத்தால் சேர முடியாது! பாத்திரம் அறிந்து பிச்சை போட வேண்டும் என்பது கல்விக்கும் உண்டு தானே! அதை மனதில் கொண்டு இயங்கியது கல்லூரி நிர்வாகம்.

அந்தக் கல்லூரியிலேயே சிறப்புமிக்கது கணினித் துறை என்பதைச் சொல்லவும் வேண்டுமோ? வெங்கடாச்சாரி. துறையின் தலைவர். 50 வயதானவர். சிறந்த நிர்வாகி. எந்த சூழ்நிலையையும் தன் வசமாக்கி அதில் ஜெயித்துக் காட்டுபவர். அவருக்குப் பிடித்தது கணினியில் சீட்டு விளையாடுவது! கிரிக்கெட்டைப் பற்றி மணிக்கணக்கில் பேசுவார். மனிதருக்கு எள் என்றால் எண்ணையாக வரும் மாணவர்களை மிகவும் பிடிக்கும். அவருக்கு இருந்த ஒரே வருத்தம் நேற்று வந்த வர்ஷினியை அவருக்கு துணைத் தலைவராக நியமித்தது தான். வர்ஷினி பெயரைப் போலவே நாகரீகம். வயது 30. கணினித் துறையில் மென்பொருள் எழுதுவதில் கரை கண்டவர். அதை எவ்வாறு மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பது என்னும் சூட்சுமம் அறிந்தவர். துறையில் அவரைப் பிடிக்காத மாணவர்களே கிடையாது எனலாம். வெங்கடாச்சாரிக்கு நேர் எதிர். அவருக்கு "சார்' போட்டால் தான் என்னவென்றே பார்ப்பார். வர்ஷினிக்கு "மேம்" போட்டால் என்னவென்றே பார்க்கமாட்டார். வர்ஷினி என்றே மாணவ மாணவிகளும் அழைப்பதையே விரும்புவார்!

இந்தக் கல்லூரியின் இந்த இரண்டு ஆசிரியர்களையும், சில மாணவ மாணவிகளையும் கொண்டு சூறாவளியாய் மாறப்போகும் கல்லூரி வாழ்க்கையை எண்ணி கல்லூரி வாசலும் சிரித்தது அன்று. ஆம் அது கணினித் துறையில் இரண்டாம் ஆண்டுக்குள் உமா அடியெடுத்து வைக்கும் நாள்!

பாகம் - 2

உமா. கணிப் பொறியியல் துறையில் முதல் மதிப்பெண் வாங்கி முதலிடம் வகிக்கும் மாணவி. வெள்ளிக் கரண்டியுடன் பிறந்தார்கள் என்பார்களே அந்த ரகம். வீட்டில் எத்தனை தலைமுறைக்குப் பணம் இருக்கிறது என்பதே தெரியாதவள். பெண்களின் தன்மை போலவே அப்பா செல்லம். அவளது அப்பா மணிமாறன். காலையில் அலுவலகம் சென்றவுடன் அவர் செய்யும் முதல் காரியம் மகளுக்குத் தொலைபேசியில் அழைப்பு விடுப்பது. வீட்டில் இருந்து கிளம்பும் போது தான் இத்தனைக்கும் பேசியிருப்பார். அவள் அம்மா மரகதம் அடிக்கடி அலுத்துக் கொள்வதுண்டு அப்பாவுக்கும் மகளுக்கும் இடையில் அப்படியென்ன ரகசியம் இருக்கிறதோ என்று!

உமாவைப் பொருத்தவரை பணம் எவ்வளவோ இருந்தும் கர்வம் அவ்வளவாய் தலைக்கு ஏறாதவள். அவள் அப்பா பேச்சைத் தட்டுவதே இல்லை. அப்படி தட்டிய ஒன்று தான் இந்தக் கல்லூரிப் படிப்பு. அவளது அப்பா இந்தக் கல்லூரியில் படிக்க வேண்டாம் என்று எவ்வளவோ கேட்டுப் பார்த்தார். ஊஹூம் படித்தால் இங்கு தான் படிப்பேன் என்றாள். சரி உன்னிஷ்டம் என்று விட்டு விட்டார். இதோ சேர்ந்து ஒரு ஆண்டு ஓடி விட்டாலும், இப்போதும் வீட்டில் அடிக்கடி இந்தப் பேச்சு வந்து விடும். "இவள் அந்தக் காலேஜ் பிரின்சிபால் முன்னாடி கையைக் கட்டி நிக்க வச்சிட்டாடி. இது வரைக்கும் நான் எவன் முன்னாடியும் அப்படி நின்னதில்ல" என்று முணங்குவார். அதில் என் மக தான் முதலிடம் என்ற தற்பெருமையும் இருக்கும்!

கல்லூரி வளாகத்திற்குள் கல்லூரி மாணவ, மாணவிகள் யாரும் கார் கொண்டு வரக்கூடாது என்பது அந்தக் கல்லூரியின் சட்டங்களில் ஒன்று! இதுவரை உமா கார் தவிர எதிலும் சென்றதில்லை. இருந்தும் வேறு வழியின்றி கார் கல்லூரி வாசல் வரை கொண்டு வந்து விட்டுச் செல்லும். வாசலிலிருந்து நடை தான். பல மாணவ மாணவிகள் பைக்குகளில் சென்றாலும் அவளது அப்பா அவளை பைக்கில் செல்ல அனுமதிக்கவில்லை.

உமா உம்மணாமூஞ்சிக்காரியுமல்ல, கலகலப்புக்காரியுமல்ல. நடுத்தரம். குறைந்த நண்பர்களையே உடையவள். உமா படிப்பைப் பற்றி சொல்லவே தேவையில்லை படுசுட்டி. வகுப்பில் இருக்கும் மாணவர்களில் முதல் தரம். கற்பூர புத்தி. எள் என்றால் எண்ணையாய் இருப்பாள். அப்படியானால் தெரிந்திருக்குமே வெங்கடாச்சாரிக்கு அவள் தான் கைவாணம் என்று? ஆம் அவளுக்கு எதுவும் காரியம் ஆகவேண்டியிருந்தால் நேரடியாகத் தலைவரையே போய் பார்த்து விடுவாள். வர்ஷினிக்கும் அவளை மிகவும் பிடிக்கும். முதல் ரேங்க் வாங்கும் மாணவரை எந்த ஆசிரியருக்குத் தான் பிடிக்காது? இருந்தாலும் வெங்கடாச்சாரிக்கு அவளைப் பிடித்திருப்பதால் தனக்குப் பிடித்திருப்பதாகக் காட்டிக் கொள்ள மாட்டார்.

கணினித் துறையில் இந்த இருவர் தவிர பத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள், லேப் அசிஸ்டண்டுகள் என்று பலர் இருந்தனர். அனைவரையும் உமா தான் வந்த ஒரே ஆண்டில் கவர்ந்திருந்தாள். பணக்காரி என்ற திமிர் இல்லாமல் பணிவுடன் நடந்து கொள்வாள். அநாவசியப் பேச்சுகளும் கிடையாது.

இதோ வாசலில் இருந்து உமா கல்லூரி வளாகம் செல்வதற்குள் அவளை ஒரு முறை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். இன்றைய நவநாகரீக மங்கை போல் தோற்றம். சிவந்த நிறம். அழகிப் போட்டியில் நின்றாலே பரிசு பெறும் அழகு. பணக்களையும் முகத்திலேயே தெரிகிறதல்லவா? பணக்காரர்கள் எளிய உடை உடுத்தினாலும் பணக்காரர்களின் தோற்றம் மாறாது போலும். உமா இன்றும் சாதாரண சுடிதாரில் தான் வந்திருந்தாள். இருந்தாலும் அவளை ஏக்கத்துடன்

பார்க்காத ஆணும், பொறாமையுடன் பார்க்காத பெண்ணும் இல்லை! ஆம். கல்லூரி முதல் நாளல்லவா? புதிது புதிதாகப் பலர் வந்து போய்க் கொண்டிருந்தனர்.

இதோ அவளது வகுப்பறைக்கு வந்து விட்டாள். எதிரில் வந்த அவள் வகுப்பிலேயே படிக்கும் சித்ராவைப் பார்த்து, "ஏண்டி, கலையை எங்கே காணோம்?" என்றவாறே உள்ளே நுழைந்தாள்.

அது யார் கலை? அவளது உயிர்த்தோழி கலைச்செல்வி.

"இன்னும் வரலைடி" என்று பதில் வந்தது. ப்ச் என்று செல்லமாக உமா அலுத்ததில் கூட ஒரு அழகிருந்தது! இவளது வாழ்க்கை மட்டுமில்லாமல் தன் தோழி கலையின் வாழ்க்கையையும் இந்த இரண்டாம் ஆண்டு மாற்றியமைக்கப் போகிறது என்பதையும் அதற்குத் தானே காரணமாய் இருப்போம் என்பதையும் உமா அறிந்திருக்கவில்லை!

அட! அதோ கலைச்செல்வி வந்துவிட்டாள் போலிருக்கிறதே!

பாகம் - 3

கலைச்செல்வி. உமாவுக்கு நேர் எதிர். அழகிலும் படிப்பிலும் தவிர. தந்தை மதுசூதனன். ஆச்சாரமிக்க பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த ராமர் கோவிலில் அர்ச்சகராகப் பணிபுரிந்தார். மார்கழி மாதம் என்றால் மாலையில் மகாபாரதம், ராமாயணம் மற்றும் புராணங்கள் குறித்து பிரசங்கம் செய்வார். பிரசவம் என்பது குழந்தைக்கு மட்டுமல்ல பிறப்பைத் தருவது. தாய்க்கும் மறுபிறப்பைத் தருவது. கலைச்செல்வியின் தாய் அந்த மறுபிறப்பைப் பெற பாக்கியம் இல்லாதவள் ஆனாள். ஆம், கலைச்செல்வி பிறந்த அன்று தான் அவள் தாய் இறந்தாள். ஆனால் அதற்காக அவள் தந்தை கலங்கவில்லை. நமக்கு விதித்த விதி இது தான் போலும் என்று தாங்கிக் கொண்டார். மறுமணம் புரிய பலர் வற்புறுத்திய போதும் மறுத்து விட்டார். வீட்டில் ஏழ்மை தலைவிரித்து ஆடியது. இருந்தாலும் இவரும் மகளும் தானே? எனவே சமாளித்து விட்டார்! தன்னால் இயன்ற வரை படிக்க வைத்தார்.

இதோ இன்று இந்தக் கல்லூரியிலும் படிக்க வைத்து விட்டார். கலைச்செல்வி பொறுப்புணர்ந்தவள். தன் தாயையே கடவுளாய் நினைத்தாள். தந்தைக்கு ஊன்று கோலாய் இருந்தாள். தன் தாய் இருந்தால் தன் தந்தையை எப்படிக் கவனித்துக் கொள்வாளோ அவ்வாறே தந்தையை கலைச்செல்வி கவனித்துக் கொண்டாள். அவளாக வாய்திறந்து தன் தந்தையிடம் இது வேண்டும் என்று கேட்டதில்லை. அவ்வாறு அவள் கேட்ட ஒன்று எது என்றால் அது இந்த கல்லூரி படிப்பு மட்டுமே. எதையும் கேட்காத மகள் பெயருக்கேற்ற கல்வியைத் தானே கேட்கிறாள் என்று அவள் தந்தை தான் இது வரை ஏதோ சம்பாதித்தது அனைத்தையும் செலவழித்துத் தான் இவளைப் படிக்க வைக்கிறார். மிஞ்சியது அவள் கழுத்தில் எப்போதும் தொங்கும் அவளது தாயின் அந்த 5 சவரன் சங்கிலி மட்டுமே. அவளுக்கு அது தான் தாய்!

கலைச்செல்வியைப் பொருத்தவரை அவளும் படிப்பில் சூரப்புலி தான். அதிலும் உமா வெங்கடாச்சாரியைக் கவர்ந்தவள் என்றால் இவள் வர்ஷினியைக் கவர்ந்தவள். இவள் C மொழியில் ஒரு நிரல் எழுதினால் இது வரை ஒரு Syntax தவறு கூட வந்ததில்லை. அப்படி ஒரு நேர்த்தி. ஒரு முறை உமா கூட எப்படியடி உனக்கு இவ்வாறு எழுத வருகிறது எனக்கும் கொஞ்சம் சொல்லித் தாயேன் என்றதற்கு, அவள், சின்னவயதிலிருந்தே தனது தந்தை தனக்கு வேதம் சொல்லிக் கொடுத்திருப்பதாயும், அதிலும் இவ்வாறே தர்க்க ரீதியாகவும், தத்துவ ரீதியாகவும் வார்த்தைகள் வாக்கியங்கள் அனைத்தும் சரியாக அமைந்திருப்பதைத் தான் கற்றிருந்ததாலேயே இது எளிதாக வருகிறது என்று சொல்லியிருக்கிறாள். எந்தப் பாடத்தையும் இவள் கஷ்டப்பட்டு படித்ததாகவே தெரியாது. வகுப்பில் பக்கத்தில் குண்டே விழுந்தாலும் இவள் காதில் கேட்காது. அவ்வளவு தூரம் ஈடுபாடுடன் கேட்பாள்.

கலைச்செல்வி சாதாரணமாக தமிழ் மீடியத்தில் படித்து வந்தவள். உமாவோ கான்வெண்டில் படித்தவள். உமா நுனிநாக்கில் ஆங்கிலம் பேசுவதை வியக்காதவர்களே கிடையாது. ஆனால் எங்கோ படித்த இவர்கள் இருவருக்கும் எவ்வாறு நட்பு மலர்ந்தது? எப்படி கலைச்செல்வி உமாவின் உயிர்த்தோழியானாள்?

ஒருவேளை இருவரும் சேர்ந்தே வாழ்நாள் முழுதும் வாழவேண்டி வருமோ?

பாகம் - 4

அந்தக் கல்லூரியில் ஒரு நடைமுறை இருந்தது. அதாவது ஒரே பள்ளியில் சேர்ந்து படித்தவர்களும் இருப்பார்கள், ஏற்கனவே அறிமுகமானவர்களும் இருப்பார்கள். அறிமுகமே இல்லாதவர்களும் இருப்பார்கள். இவர்கள் அனைவரும் கலக்க வேண்டும். இல்லாவிட்டால் நண்பர்கள், தெரிந்தவர்கள் என்று ஒரே கூட்டமாக எங்காவது வகுப்பிலேயே தரம் பிரிந்து விடுவார்கள். எனவே இது வெங்கடாச்சாரியின் யோசனை. கணிணியில் சீட்டைக் கலைப்பது போல் கலைத்து விடுவார்! ஆம், முதலாம் ஆண்டு புது மாணவர்கள் வந்ததும் முதல் வகுப்பு அவர் தான் எடுப்பார்! அவரே ஒவ்வொருவர் பெயரையும் ஒரு சீட்டில் எழுதிப் போடுவார். வரிசையாக சீட்டுகளை அவரே எடுப்பார். அந்த வரிசைப்படி தான் அனைவரையும் அமர வைப்பார். பின்னர் நெட்டையான ஆள் முன்னால் அமராமலும், குட்டையான் ஆள் பின்னால் அமராமலும் பார்த்துக் கொள்வார். அவ்வளவு தான். அதில் அவருக்கு ஒரு திருப்தி.

உமா முதலாமாண்டில் அடியெடுத்து வைத்ததிலிருந்தே அவள் தான் அனைவரின் காட்சிப் பொருளாக இருந்தாள். குசுகுசுவென அவளைப் பற்றியே அனைவரின் பேச்சும்! அவளும் அதை அறிந்திருந்தாள். கலைச்செல்விக்கு இதெல்லாம் கவலை இல்லை. தான் தந்தையின் உழைப்பு முழுதையும் உறிஞ்சி இந்தக் கல்லூரியைத் தேர்ந்தெடுத்தது தவறோ என்று எண்ணி ஒரு ஓரமாய் உட்கார்ந்திருந்தாள். முதல் வகுப்பு ஆரம்பித்தது. வெங்கடாச்சாரி வந்து எடுத்த சீட்டுப் படி உமா அருகில் அமர்ந்தவள் தான் நமது கலைச்செல்வி.

முதலில் இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டது கூட இல்லை. தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பாள் கலைச்செல்வி. வகுப்பில் தான் அவள் கவனம் எப்போதும் இருக்குமே. யாராவது பேசினால் கூட அவர்களை முறைப்பாள்.

கலைச்செல்வி எப்போதும் கல்லூரி பேருந்திலேயே வருவாள். கல்லூரி முடிந்ததும் அவளுக்கு ஓட வேண்டும். வீட்டு வேலைகள் செய்ய வேண்டுமே! அரை மணி நேரம் பேருந்தில் பயணம் செய்த பின்னரே வீட்டுக்குச் செல்ல முடியும். உமாவோ காரில் தான் வருவாள். அவள் வீடோ கலை வீட்டுக்கு எதிர்த் திசையில் 10 நிமிட பயணம் தான். இந்நிலையில் முதல் ஒரு மாதத்தில் இருவரும் பேசிக்கொண்டது கூட குறைவு தான். ஹலோ ஹலோ மட்டுமே.

முதல் மாதத் தேர்வுகளும் நடைபெற்றன. அதில் வந்த மதிப்பெண்களில் தான் தெரிந்தது உமா முதல் மதிப்பெண் என்றும் கலை இரண்டாம் மதிப்பெண் என்றும். உமாவுக்கு ஆச்சரியம்! இவளா இரண்டாம் இடம் என்று. கலைக்கும் ஆச்சரியம்! இவளா முதலிடம் என்று! அன்று தான் முதன் முதலில் சிரித்துக் கொண்டனர்! இருந்தாலும் கலை நினைத்துக் கொண்டாள், இவளை முந்தி விட வேண்டுமென்று. உமாவோ, இவளை முந்த விடக்கூடாதென்று நினைத்துக் கொண்டாள். அதை ஓராண்டு முழுதும் கடைப்பிடிக்கவும் செய்து விட்டாள்!

ஆனால், ஓராண்டிற்குள் இவர்களுக்குள் யார் முதலிடம் வந்தாலும் இருவருக்கும் கவலையில்லை என்னும் அளவுக்கு தோழியராகியது எப்படி? அதேசமயம், மூன்றாம் ஆண்டிற்குள் நுழையும் போது இவர்கள் இருவருமே முதலிடத்தில் இருக்கப் போவதில்லை என்பதும் இவர்களுக்குத் தெரியாது தானே!

பாகம் - 5

தஞ்சாவூர். மாலை 6 மணி ஆகியிருந்தது. நகரில் இல்லாமல் ஒதுக்குப்புறமான குடிசைப் பகுதிகள் இருக்கும் பகுதி. அது ஒரு குடிசையா அல்லது ஓட்டு வீடா என்று தரம் பிரிக்க முடியாத ஒரு கட்டிடம். ஒரே ஒரு அறை. அதையே சமையலுக்காக ஒரு சின்ன தட்டி வைத்து மறைக்கப் பட்டிருந்தது. நூறு சதுர அடியே இருந்தாலும் அதற்கு வாடகை 450 ரூபாய் மாதத்திற்கு. இத்தனைக்கும் இரவில் கூட வெளிச்சம் தேவையில்லாத அளவுக்கு நட்சத்திரங்களைக் கூட காண முடிகிற ஓட்டைகள். மழை பெய்தால் அன்றிரவு சிவராத்திரி தான். இருந்தாலும் அது வீடாக இல்லாமல் இல்லமாகவே பரிமளித்தது.

அந்த வீட்டில் வசித்தனர் இருவர். இருவருக்கும் வயதிலோ தகுதியிலோ அல்லது எந்த விதத்திலும் அதிக வித்தியாசம் இல்லை. வளர்ப்பிலும் தான். இருவருமே அனாதைகள். இருவருமே பட்டதாரி இளைஞர்கள். விவேகானந்தா அனாதை ஆசிரமம் மூலமாகவே வளர்ந்து ஆசிரம உதவியிலும், அரசாங்கம் அளிக்கின்ற அத்தனை கல்வி உதவிப் பணத்தையும் பெற்று பட்டம் பயின்ற மாணவர்கள். இருவருக்குமே தன் தந்தை தாய் யாரென்றோ, குலம், கோத்திரம் என்னவென்றோ, மதம் என்னவென்றோ தெரியாது. அவர்களைப் பெற்றவர்கள் செய்த ஒரே நல்ல காரியம் அவர்களை அனாதை ஆசிரமத்தில் கொண்டு சேர்த்தது தான். ஆசிரமத்தில் வளர்ந்ததால் கெட்ட பழக்கங்கள் எதுவும் அண்டவில்லை. கல்லூரிப் படிப்பு முடிந்த பின்னும் கூட ஆசிரமம் அவர்களை வெளியேறச் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் தான் ஆசிரமத்தை விட்டு வெளியேறி வெளி உலகில் தானும் சொந்தக் காலில் நின்று தம்மை வளர்த்த ஆசிரமத்துக்கு நன்றிக் கடன் செலுத்த எண்ணியிருந்தனர்.

ஆனால் இந்த உலகில் தான் நல்லவர்களைக் கடவுள் அவ்வளவு சீக்கிரம் கை தூக்கி விடுவதில்லையே! வேலை கிடைப்பது குதிரைக் கொம்பாக இருந்தது அவர்களுக்கு.

இதோ வேலை தேடிய களைப்பு முகத்தில் தெரிய, சோர்வுடன் வருகிறானே இவன் தான் நந்தன். முழுப்பெயர் விவேகானந்தன். ஆசிரம தலைவர் இவனுக்கு இட்ட பெயர். அனைவரும் அழைப்பதென்னவோ நந்தன் தான். இளநிலை கணிதவியல் பட்டதாரி. அவன் பொறியியல் கல்லூரியில் தான் சேர வேண்டும் என்று நினைத்தான். ஒரு கல்லூரியில் இடமும் கிடைத்தது. ஆனால் பணம்? எனவே கனவுகளைத் துறந்தவன். ஆனால் வெறியை அல்ல. நந்தன் கோபப்பட்டு இதுவரை யாருமே பார்த்ததில்லை. அத்தனை சாதுவானவன். நூறு பேர் இருக்கும் ஒரு இடத்தில் இவன் இருந்தாலும் அந்த இடத்தில் இவன் தனித்தே தெரிவான். அதிகம் பேசியதில்லை. ஆனால் பேசினால் உணர்வு பூர்வமாய் பேசுவான். நூல்களை ஆழ்ந்து படிப்பான். நூல்களுடன் கலந்துரையாடுவான். வெளியிலிருந்து இவன் படிப்பதைப் பார்ப்பதற்கு ஏதோ பைத்தியம் பிடித்தவன் போலும் என்றே எண்ணிக் கொள்வார்கள். பகல் முழுதும் வேலை தேடுவான். மாலையானால் ஒரு தியேட்டரில் வாகன பாதுகாப்புக்கான சீட்டுகள் வழங்கும் பணியில் கூடுதல் ஆளாக இருந்தான். புதுப்படம் ரிலீஸ் ஆன அன்று மட்டும் ஏதோ கிடைக்கும். மற்ற நாட்களில் காண்ட்ராக்ட் தொகை மட்டுமே. மாதம் ஒன்றிற்கு ரூ. 900/- என்று காண்டிராக்ட்.

இந்த இல்லத்தில் சமையல் இவன் செய்வது தான்! வந்ததும் வராததுமாக பாத்திரத்தை உருட்ட ஆரம்பித்து விட்டான். மாதக்கடைசி என்பதால் பாத்திரங்கள் அவனைப் பார்த்துச் சிரித்தன. அரிசியும் புளியும் மட்டும் இருந்தது. சரி தான் இன்று சாதமும் வெறும் ரசமும் வைத்து விட வேண்டியது தான் என்ற முடிவில் சமையலைக் கவனிக்க ஆரம்பித்தான்.

அடிக்கடி கடிகாரத்தையும் பார்த்துக் கொண்டான். இருள் கவிய ஆரம்பித்தது. அங்கு இருந்த ஒரே ஒரு டியூப் லைட்டையும் போட்டான். இன்னும் என்ன ரமேஷைக் காணல என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே ரமேஷ் உள்ளே நுழைந்தான். இப்போத் தான் உன்னைப் பத்தி நினைச்சேன். உனக்கு ஆயுசு நூறுடா என்று சிரித்துக் கொண்டே சொன்னான். ரமேஷ் சோகம் கலந்த ஒரு புன்னகையைத் தவழவிட்டான். கோட் சூட் மட்டும் மாட்டி விட்டால் ரமேஷைப் பார்க்க ஒரு கதாநாயகன் போல் தான் இருப்பான் என்று எண்ணிக் கொண்டான் நந்தன். என்னடா படம் எடுக்கப் போறியா என்று சிரித்துக் கொண்டே கேட்டான் ரமேஷ். "சரித் தான்" என்று பதிலளித்த நந்தன், போன காரியம் என்னடா ஆச்சு? என்றான். ரமேஷ் "ஆமா அத வேற என் வாயால சொல்லணுமாக்கும். போவானா?" என்று சலித்துக் கொண்டான். ரமேஷ் படிப்பதைப் பார்த்ததும் ஆசிரமவாசிகள் அனைவருமே அவனை எப்படியாவது மருத்துவருக்குத் தான் படிக்க வைக்க வேண்டும் என்று வற்புறுத்துவார்கள். ஆனால் ரமேஷுக்கோ கட்டிடம் கட்டுவதில் தான் ஆர்வம் அதிகம். ஒரு சிவில் இஞ்சினியர் ஆக வேண்டும் நாம் கற்பனை செய்த கட்டிடத்தை 3 மாதங்களில் கட்ட வேண்டும். இந்த ஊர் முழுதும் நாம் கட்டும் கட்டிடம் தான் இருக்க வேண்டும் என்று கற்பனை செய்து கொண்டே இருப்பான். பத்தாம் வகுப்பு முடித்ததுமே ஆசிரம தலைவரை சந்தித்து தன்னை பாலிடெக்னிக்கில் சிவில் பிரிவில் சேர்த்து விடுமாறு நச்சரித்தான். "பி.இ. சிவில் படிக்க வேண்டியது தானே? பொறு" என்று தலைவர் சொன்னதைக் கூட நிராகரித்து நேரடியாக பாலிடெக்னிக்கில் சிவில் பிரிவில் டிப்ளமோ பயின்றான்.

ஆனால் பாவம், வெளி உலகிற்கு வந்ததும் தான் தெரிந்தது இவனைக் கொத்தனார் வேலைக்குக் கூட யாரும் எடுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பது. இவனும் ஒரு இஞ்சினியரின் கீழ் வேலை பார்க்கின்றான். மாதம் ரூ.1500 சம்பளம். கட்டிடத்தின் படம் வரைவது மட்டும் இவன் வேலை. இவன் வரைந்தால் வரைந்தது தான். கட்டிடமே எழுப்பி விட்டதைப் போல் இருக்கும் படம்! கணினியிலும் படம் வரையக் கற்றுக் கொண்டான் இவன் வேலை பார்த்த இஞ்சினியரிடம். இவன் வரையும் வேகத்தையும் நேர்த்தியையும் கண்டு ஒரு பெரிய தொழில் நிறுவனர் ஒரு நாள் ஆச்சரியப்பட்டுப் போனார். உன் திறமையைப் பார்த்தால் நீ இங்கிருக்கக் கூடாது. என் நண்பர் ஒருவர் பல பிளாட்டுக்களைக் கட்டி விற்பவர். அவருக்கு உன்னை மாதிரி ஒருவர் தான் தேவைப்படுகிறது. அவருக்கு மட்டும் நீ சரியாக வாய்த்து விட்டால் அவ்வளவு தான் எங்கேயோ போய் விடலாம் என்றார். அவர் சொன்னதைக் கேட்டு இன்று காலையில் அவரைச் சந்திக்கச் சென்றான் ரமேஷ். அதைப் பற்றித் தான் இப்போது நந்தன் கேட்டுக் கொண்டிருந்தான். ரமேஷ் ரொம்ப நேரம் அமைதியாக இருந்து விட்டு நாமெல்லாம் ரொம்ப பாவம் செய்திருக்குறோம்னு நினைக்கிறேண்டா, அந்த கட்டிடக் கம்பெனி முதலாளி உன் ஜாதி என்னன்னு சொல்லு என்று கேட்டாண்டா. நான் என்னன்னு சொல்லுவேன். விவேகானந்தா ஆசிரமத்தில் தான் வளர்ந்தேன்னு சொன்னதும், அனாதையான்னு கேட்டுட்டு ஒரு பார்வை பார்த்தான் பாரு. அப்பவே தெரிஞ்சு போச்சு எனக்கு வேலை கிடைக்காதுன்னு. சரி சரி. இன்னைக்கு என்ன சமையல்? என்றான். "வடைபாயாசத்தோட விருந்து! இந்தா என்று சாதத்தையும் ரசத்தையும் ஊற்ற, இருவரும் ஒன்றும் பேசிக் கொள்ளாமலேயே சாப்பிட்டனர்.

ரமேஷுக்கு ஏனோ தூக்கம் வரவில்லை. மணி இரவு மூன்று. புரண்டு புரண்டு படுத்துப் பார்த்தான். இப்போதே எழுப்பி நந்தனிடம் அந்த உண்மையைச் சொல்லிவிடலாமா என்று கூட நினைத்தான். பாவம் அவனாவது தூங்கட்டுமே, காலை எழுந்ததும் சொல்லிக் கொள்வோம் என்று கண்களில் நிரம்பிய நீரைத் துடைத்து விட்டுக் கொண்டான்.

பாகம் - 6

நந்தன் எப்போதும் காலை எழும் போது ரமேஷ் தூங்கிக் கொண்டு தான் இருப்பான். ஆனால் இன்றோ இவனுக்கு முன்னால் எழுந்திருந்தது ஆச்சரியமாகத் தான் இருந்தது. "என்னடா இன்னைக்கு மழை வரும் போலிருக்கு, சீக்கிரமா எழுந்திட்ட?" என்றான் நந்தன். ரமேஷ், "தூங்கினால் தானே எழணும்?" என்றான். உடனே நந்தன் ,"என்ன? தூங்கவே இல்லையா? ஏன்? நேத்து அந்த கம்பெனிக்காரன் சொன்னதை நினைச்சிக்கிட்டு இருந்தியாக்கும்? இதுக்கெல்லாம் கவலைப்பட்டா வாழ்க்கையில பொழைக்க முடியுமாடா? இதே கம்பெனிக்காரன் நீ வளர்ந்து நின்னதும் கால்ல வந்து விழுவான் பாரு" என்று சமாதானப் படுத்தினான்.

"போடா! நான் அதுக்காக கவலைப்பட்டு முழிச்சிருக்கல. ஆனா நேத்து கம்பெனிக்காரனைப் பார்த்ததும் 12 மணி போல தான் ஆபீசுக்குப் போக முடிஞ்சது. அதுக்குள்ள அந்த இஞ்சினியருக்கு யாரு சொன்னாங்கன்னு தெரியல. வந்ததும் வராததுமா நீ அங்கே போய் நின்னியாமே அப்படீன்னாரு!". நான் என்ன ஏதுன்னு சொல்றதுக்குள்ள,"நீ இனிமேல் வேலைக்கு வேண்டாம், நீ எப்போ எங்கே போவேன்னு தெரியாம நான் உனக்கு எந்த வேலையையும் கொடுக்க முடியாது. இன்னைக்கு தேதி 25. ஆனா ஒனக்கு முழு மாத சம்பளமும் இதோ ஆயிரத்தைநூறு ரூபா தாரேன். ஆளை விடு சாமி"ன்னு சொல்லி கையில பணத்தைக் கொடுத்தாரு.

நானும் எவ்வளவோ கேட்டுப் பார்த்தேண்டா. அவரு மசியிற மாதிரி தெரியல. நானும் மனுசன் தானே. எனக்கும் வீராப்பு வந்திருச்சு. போங்க சார். நான் உழைச்ச நாளைக்கு மட்டும் சம்பளத்தை எடுத்துக்கிறேன். மீதி 5 நாள் சம்பளம் ரூபாய் இருநூற்றம்பது இந்தாங்கன்னு கொடுத்துட்டு இதோ 1250 ரூபாயோட வந்துட்டேன். சாயங்காலம் வரை எனக்குத் தெரிந்த இஞ்சினியர், கொத்தனார் கிட்ட எல்லாம் கேட்டுப் பார்த்தேன். இந்த உலகம் நல்லா உச் மட்டும் கொட்டுதுடா. ஆனா உதவின்னு கேட்டுப் பார்த்தா தான் தெரியுது ஒவ்வொருத்தன் உள் மனசும். ஹூம். அடுத்த மாச செலவுக்கு என்ன செய்யப் போறோமோ? அதான் தூக்கமே வரல என்றான் ரமேஷ். நல்ல காரியம் செஞ்சேடா, இல்லாட்டி அந்த இஞ்சினியர் 5 நாள் சம்பளம் கூடக் கொடுத்ததை ஏதோ அவர் சொத்தையே எழுதி வச்சதாக் கூடசொல்லுவாரு என்று வாய் வார்த்தையால் சொன்னான் நந்தன்.

நந்தனுக்கும் இது பயங்கர அதிர்ச்சி தான், இவன் வாங்கும் 900 ரூபாயில் வாடகையும், கரண்ட் பில்லும், சமையல் எரிபொருளும் சரியாய் போகும். மற்ற அனைத்துப் பொருட்களுமே ரமேஷின் பணத்தில் தான் வாங்க வேண்டும். ஆசிரமத்திலிருந்து வெளியேறிய ஆறு மாதத்தில் இவ்வளவு சிரமங்கள் இவர்கள் பட்டதில்லை. சரிடா இந்த ஒரு மாசம் ஓடட்டும். அதுக்குள்ள உனக்கு ஏதாவது வேலை கிடைக்காமலா போகும்? அப்படியே கிடைக்காட்டாலும் ஒரு மாச வாடகையை தள்ளிக் கொடுப்போம். சமாளிச்சிடலாம்டா. எனக்கென்னவோ இது கடவுள் நமக்குக் கொடுத்த சந்தர்ப்பமாத் தான் தோணுது. இல்லாட்டி 1500 ரூபா சம்பளத்துல நீயும் எத்தனை நாள் தாண்டா வாழமுடியும். ஏதாவது மாற்றம் வேண்டாமா? நீ வேணும்னாலும் பாரேன், என் கண்ணு முன்னாடியே நீ பெரிய ஆளா வருவேடா. நாம் யாருக்கும் கஷ்டம் நினைக்கல. அப்படி இருந்தும் நமக்குக் கஷ்டம் வரணும்னா, பின்னாடி ஏதோ பெரிசா நல்ல காரியம் நடக்கப் போவுதுன்னு தாண்டா அர்த்தம் என்று தத்துவம் பேச ஆரம்பித்துவிட்டான் நந்தன்.

பாவம் இவர்கள் வாழ்க்கையில் இன்னும் வளர்ச்சிப் பாதைக்கே திரும்பவில்லை என்பதை

என்று தான் உணர்வார்களோ? அந்தப் பாதைக்கு இவர்களைத் திருப்ப விதியும் என்னென்ன விளையாட்டு தான் விளையாடவேண்டி உள்ளதோ?

பாகம் - 7

முதல் மாதத்தில் பெற்ற மதிப்பெண்கள் உமா, கலை இருவரையும் அறிமுகம் செய்து வைக்கமட்டுமே உதவியது. மற்றபடி மதியம் உணவருந்தும் போது கூட இருவரும் சேர்ந்து உணவருந்தியது இல்லை. மணிமாறனின் நண்பர் மகேசனுடைய மகன் கமலனும் இவர்கள் வகுப்பில் தான் படித்தான். இவளுக்கு வேறு யாரையும் தெரியாததால் உமா கமலனுடனேயே கடந்த ஒரு மாதமாக மதியம் உணவருந்தினாள். ஆனால் இதையே அவள் கமலன் மேல் கொண்ட காதலாய் அவன் தோழர்கள் பேச ஆரம்பிக்க, கமலன் மிதக்க ஆரம்பித்தான். கமலனைப் பொருத்தவரை அவனிடம் பணம் இருக்கிறது என்பதை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய ஒரு செய்தி என்பதாகவே நடந்து கொள்வான். சரியான பந்தா பேர்வழி. அந்தக் கல்லூரியில் சரியாகப் படிக்காதவர்கள் தான் யாரும் இல்லையே. இவனும் நன்றாகப் படிப்பவன் தான். ஆனால், குணத்தில் இன்னும் கமலன் மொட்டாகவே இருந்தான்! எதற்கெடுத்தாலும் உமா என்று தான் வந்து நிற்பான். இவளும் விகல்பமில்லாமல் பழகினாள். இதோ இரண்டு மாதங்கள் ஓடிவிட்டன. ஒருநாள் தற்செயலாக கவனித்தவள் கலை யாருடனும் பேசாமல், தனியாக மரத்தடியில் கீழே அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருப்பதைக் கண்டாள். இவளுக்கே ஆச்சரியமாக இருந்தது. என்ன இவளுக்கும் தெரிந்தவர்கள் யாருமே இல்லையா? இல்லை யாருடனும் நட்பு கொள்ள மாட்டாளா? என்று எண்ணிக் கொண்டாள்.

மறுநாளும் அவ்வாறே அவள் சாப்பிடுவதைப் பார்த்தாள். இவளுக்கே பொறுக்கவில்லை. நானும் உன்னோடு சேர்ந்து சாப்பிடலாமா? என்ற படி வந்து பக்கத்தில் நின்ற படி கேட்டாள். கலைச்செல்வி சிரித்துக் கொண்டே வாங்களேன் சாப்பிடலாம், ஆனால் நான் எப்போதும் கீழே உட்கார்ந்து சாப்பிட்டு தான் பழக்கம். உங்களைப் போல் டேபிளில் சாப்பிட்டு பழக்கமில்லை என்றாள். முதலில் இந்த வாங்க போங்க சொல்வதை நிறுத்து, நானும் உன் வயது தானே என்றவள் அதனாலென்ன நானும் கீழேயே உட்கார்ந்து சாப்பிடுகிறேனே என்றாள். இருவரும் அன்று பொதுவாகவே பேசிக் கொண்டிருந்தனர். கொஞ்சமாய் நட்புப் பூவும் மலர ஆரம்பித்தது. கீழே உட்கார்ந்து சாப்பிட்ட உமாவால் சட்டென எழ முடியவில்லை. பார்த்தியா உங்களுக்கு பழக்கமில்லை என்று சொன்னேனே என்ற படி கலை கலாய்த்தாள்! சரி சரி பழக்கப் படுத்திக் கொள்வோம் என்றாள் உமா! அன்று முதல் இருவரும் மரத்தடியில் தான் ஒன்றாக உணவருந்தினர். இது கமலனுக்குப் பிடிக்கவில்லை.

ஒருமுறை கலைச்செல்வியின் தந்தை மதுசூதனன் வேலை செய்யும் கோவிலுக்கு உமா தாய் தந்தையுடன் வந்தாள். அதே சமயம் மதுசூதனனுக்கு ஏதோ கொடுப்பதற்காக கலைச்செல்வியும் கோவிலுக்கு வந்திருந்தாள். இவளைப் பார்த்ததும் உமா குதூகலத்துடன், "என்ன இந்தப் பக்கம்? அடிக்கடி இங்கே வருவாயா?" என்றாள். கலைச்செல்வி சிரித்துக் கொண்டே அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "இங்கே அப்பா தான் அர்ச்சகர்." என்று அவள் தந்தையை அறிமுகம் செய்து வைத்தாள். உமாவுக்கு மிக்க சந்தோசம் கலையைப் பார்த்ததில். உங்கள் வீடு அருகில் தானா? என்றாள். இதோ அடுத்த சந்து தான் என்றாலும் அவளை வா என்று அழைக்கவில்லை கலை! ஆனாலும் உமா விடவில்லை. தன் தந்தையிடம் அவளை அழைத்துச் சென்றாள். அப்பா, இவள் தான் கலை. என்னுடன் தான் கல்லூரியில் படிக்கிறாள். இவள் தான் இரண்டாம் ரேங்கில் இருக்கிறாள். இவள் வீடு பக்கத்தில் தான் இருக்கிறதாம். எனக்கு வீட்டில் இன்று போரடிக்கிறது. நான் இவளுடன் இவள் வீட்டிற்கு சென்று ஒரு மணி நேரம் இருந்து விட்டு வருகிறேன். காரை நீங்கள் இறங்கிக் கொண்டு உடனே கோவிலுக்கே அனுப்பி வையுங்கள். என்று ஒரே கட்டளையாக இட்டு விட்டு கிளம்பி விட்டாள். கலைக்கு ஆச்சரியம். இவள் தந்தையிடம் இப்படி வேலை வாங்குகிறாளே என்று.

இருவரும் பேசிக் கொண்டே கோவிலை விட்டு வெளியேறி வந்தனர். படகு போன்ற காரைப் பார்த்ததும் கலைச்செல்விக்கு அதிசயமாக இருந்தது! இதோ கோவிலின் அடுத்த சந்திலிருந்த கலைச்செல்வியின் வீட்டுக்குள் நுழைந்தனர் இருவரும். உள்ளே சென்றதும் அந்த வீட்டின் எளிமையும், தெய்வீக மணமும், சுத்தமும், நேர்த்தியும் தான் மீண்டும் ஒரு கோவிலுக்குள் வந்து விட்டோமோ என்ற எண்ணத்தை உமாவுக்கு ஏற்படுத்தியது. கலையின் வீடு மூன்றே அறைகளை உடையது. ஒன்று சமையலறை, இன்னொன்று பூஜையறை, அடுத்தது வரவேற்பறை, படுக்கையறை என்று அனைத்து உபயோகங்களுக்குமான அறை! கொல்லைப்புறத்தில் சிறிய திறப்பு இருந்தது. வீட்டில் சுற்றிப் பார்க்க என்று எதுவும் இல்லை. இருந்தும் உமா ஒவ்வொன்றாக பார்த்து ரசித்தாள். இவ்வளவு சிறிய வீட்டில் எப்படி வாழ முடிகிறது இவர்களால்? என்ற கேள்வியுடன், கலைச்செல்வி பயபக்தியுடன் துளசிச்செடிக்குத் தண்ணீர் ஊற்றுவதைப் பார்த்துக் கொண்டாள். ஆமா, வீட்டில் உங்கம்மா இல்லையா? வெளியே போயிருக்காங்களா என்றாள். கலைச்செல்வி உமாவின் தோளில் கை வைத்துக் கொண்டே, இது வரை நான் என் பிறந்த நாளைக் கொண்டாடியதே இல்லை உமா. ஏன் தெரியுமா? அன்று தான் நான் என் தாயை விழுங்கிய நாள் என்று கண்களில் நீர் கோர்க்க சொல்ல முடியாமல் சொன்னாள். அன்றே உமாவின் மனக்கோட்டைக்குள் நட்பென்னும் செங்கோல் கொண்டு ஆட்சி செய்ய ஆரம்பித்து விட்டாள் கலைச்செல்வி. இந்த வீட்டையும் நிர்வகித்துக் கொண்டு, தந்தையின் வேலைகளுக்கும் உதவியாக இருந்து கொண்டு, பாடத்திலும் சிறப்பாகப் படிக்கும் கலையின் உழைப்பைப் பார்த்து பார்த்து உமா ஆச்சரியப்பட்டுப் போனாள். இவளுக்கு ஏதோ தான் மட்டுமே கஷ்டப்பட்டு படிப்பது போல் தோன்றும். ஆனால் கலையின் கஷ்டங்களைக் கண்ட பிறகு, தானெல்லாம் முதலிடத்தில் இருப்பது சும்மா தான், உண்மையில் கலை தான் முதலிடம் என்று நினைத்துக் கொண்டாள். பின்னாளில் இதை அவளிடம் சொன்ன போது, கலை சிரித்துக் கொண்டே, நாம் இருவரில் யார் முதலிடத்தில் இருந்தால் என்ன? இருவரும் ஒன்று தானே!" என்ற படி உமாவைக் கட்டியணைத்துக் கொண்டாள்!

கலைச்செல்வியும் ஒருநாள் உமா வீட்டுக்குச் சென்றாள். அதுவே அவள் உமாவின் வீட்டுக்குச் சென்றது முதலும் கடைசியும் ஆனது!

பாகம் - 8

அன்று வர்ஷினி ஒரு கேள்வியைக் கொடுத்து அதற்கான C நிரலை மறுநாள் எழுதிக் கொண்டு வரச்சொன்னார். ஏற்கனவே வர்ஷினிக்கும் உமாவுக்கும் ஆகாது! அதனாலேயே அவளுக்கு C என்றாலே உதறலெடுக்கும். ஆனால் கலைச்செல்விக்கோ C என்றாலே அல்வா மாதிரி. சும்மா பிய்த்து வாங்குவாள். மாலை வகுப்புகள் முடிந்தவுடன் உமா கலைச்செல்வியிடம் நீயும் என் வீட்டுக்கு வாயேன். இருவரும் சேர்ந்தே இந்த நிரலை எழுதலாம். எனக்கும் சொல்லிக் கொடுத்த மாதிரி இருக்கும். நீயும் என் வீட்டைப் பார்த்தது மாதிரியும் இருக்கும். இன்னைக்கு கண்டிப்பா வர்ற என்று அவள் தந்தைக்கு கட்டளை இடுவது போலவே கட்டளை இட்டாள். அத்துடன் நில்லாமல், நானே காரில் வந்து உன்னை வீட்டில் விடுகிறேன், சரியா? என்றும் சமாதானப்படுத்தினாள். உமாவும் சரி, மிஞ்சி மிஞ்சிப் போனால் ஒரு கால் மணிநேரம் ஆகும். பேருந்தில் செல்வதை விட காரில் செல்லும் போது அதே கால்மணி நேரத்தைச் சரி செய்து விடலாம் என்று எண்ணியவளாய் சரி சொல்லிவிட்டாள்.

காரில் ஏறியவுடன் ஆரம்பித்த பிரமிப்பு மீண்டும் அவள் வீட்டுக்குத் திரும்பும் வரை நீடித்தது! ஆம், ஒரு புது உலகத்துக்குள் நுழைந்த அனுபவம் அவளுக்கு. சொர்க்கம் இது தானோ? இப்படித் தான் இருக்குமோ என்று எண்ணிக் கொண்டாள். ஒரு வீட்டுக்குள் சேச்சே ஒரு அரண்மனைக்குள் இத்தனை வசதிகளா என்று அதிசயித்தாள். நீச்சல்குளமும் இருந்தது, டென்னிஸ் மைதானமும் இருந்தது. உமாவின் பாத்ரூமே இவர்கள் வீட்டை விட பெரியதாக இருந்தது! உமாவின் அறை முழுதும் பஞ்சு பஞ்சாய் பொம்மைகளும், புத்தகங்களும் இறைந்து கிடந்தன! அவள் அறைக்கென்று தனியே டி.வி. மற்றும் கணினி இருந்ததைப் பார்த்து இவளுக்கு பேச்சே வரவில்லை. உமாவின் தாயைப் பார்த்ததும், அவர் இவளைக் கோவிலில் பார்த்த பெண் தானே என்று அடையாளம் கண்டு கொண்டதும், இவள் பாதங்களில் விழுந்து நமஸ்காரம் செய்ததும் அடுத்தடுத்து நிகழ்ந்தன. மீண்டும் இருவரும் உமாவின் அறைக்குள் நுழைந்தனர். கணினி அருகில் அமர்ந்ததும் சிறிது நேரத்திலும் இருவரும் விவாதித்துக் கொண்டே வர்ஷினி கொடுத்த நிரலைப் பூர்த்தி செய்தனர்.

அதற்குப் பின்னர் தான் ஆரம்பித்தது வினை! இருவரும் பேசிக் கொண்டே இருந்ததில் இரண்டு மணி நேரங்களுக்கும் மேல் ஓடியிருந்தது! திடுக்கென கடிகாரம் பார்த்த கலைச்செல்விக்கு தந்தை ஞாபகம் வந்து விட்டது. என்னை உடனே என் வீட்டில் கொண்டு போய் விடு என்றாள். சரியென்று உமாவும் அவளை அழைத்துக் கொண்டு கோவில் வாசலில் இறக்கி விட்டாள். வீட்டுக்குள் நுழைந்ததுமே கலைச்செல்விக்கு இது வரை தான் காணாத தந்தையைக் காணப் போகிறோம் என்று தெரியவில்லை. புயலுக்கு முன்பே அங்கே அமைதி நிலவியது! தந்தை ஏற்கனவே வீட்டுக்கு வந்திருந்தார். எப்போதும் சரியாக எட்டு மணிக்கெல்லாம் சாப்பிட்டு விட்டு ஒன்பது மணிக்கே தூங்க ஆரம்பித்து விடுவார்கள். தூக்கத்தைக் கெடுக்கத் தான் தொலைக்காட்சியோ வேறு பொழுது போக்கு சாதனங்களோ அவர்கள் வீட்டில் இல்லை. மேலும் அதிகாலை நான்கு மணிக்கே எழுத்து கோவிலுக்குச் செல்வார் மதுசூதனன். அன்றோ எட்டு மணிக்குத் தான் கலைச்செல்வி உள்ளேயே நுழைந்தாள். எங்கே போயிருந்தாய் என்று கேட்டார். கலையும் உமா வீட்டுக்கு அப்பா என்று சொல்லிவிட்டு சமையலறைக்குச் செல்லப் பார்த்தாள். விரலுக்குத் தகுந்த வீக்கம் தான் வேணும் தெரிஞ்சுக்கோ. அவா இருக்குற உசரத்துலயும், நாம் இருக்குற நிலமையிலயும் பெரிய இடத்து வெவகாரம் நமக்கெதுக்கு? நாம இருந்தோமா, நம்ம வேலயப் பார்த்தோமான்னு இருக்கணும். ஆட்டுக்குக் கூட பகவான் வால அளந்து தான் வச்சுருக்கான். நீ புத்திசாலி. அவ்ளோ தான் சொல்லுவேண்டியம்மா. அப்புறம் உன் இஷ்டம் என்று கொஞ்சம் கடு கடுவென்று சொல்லிவிட்டார். இது வரை இப்படி ஒரு பேச்சை தந்தையிடம் கலைச்செல்வி கேட்டதே இல்லை.

அன்றே முடிவு செய்து விட்டாள், தான் இனி உமா வீட்டுக்கே செல்வதில்லை என்று. அதை மறுநாளே அவளிடமும் சொல்லிவிட்டாள். உமாவுக்குத் தான் அதில் சிறு வருத்தம். இருந்த போதும் அதனாலெல்லாம் நம் நட்பு கெடாது! நான் உன் வீட்டுக்கு இனி அடிக்கடி வருவேன் சரியா என்று கேட்டதுடன், அடிக்கடி வரவும் ஆரம்பித்தாள். கொஞ்ச நாளில் உமாவும் மதுசூதனனும் நன்றாகப் பேசிக் கொள்ள ஆரம்பித்தனர்! அவளின் பயபக்தியைப் பார்த்து மதுசூதனனே வியந்து போனார். இவளிடம் கர்வம் கொஞ்சம் கூட இல்லடி செல்வி. நான் தான் தப்பா நினைச்சுண்டேன் என்றார் ஒருநாள். இருந்தும் கலைச்செல்வி உமா வீட்டுக்கு மீண்டும் சென்றதே இல்லை!

இப்படியே வாழ்க்கைசென்றிருந்தால் நன்றாகத் தான் இருந்திருக்கும். ஆனால், செல்வம் குறுக்கிட்ட பின்?

பாகம் - 9.

இரண்டாம் ஆண்டு ஆரம்பித்து ஒரு வாரம் ஓடியிருந்தது. மீண்டும் அனைவரும் படிப்பில் கவனம் செலுத்த ஆரம்பித்து இருந்தனர். இந்த ஆண்டிலேயே பிராஜக்டுகளைக் கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள் என்றதால் ஒரு எதிர்பார்ப்பும், ஆர்வமும் மாணவ மாணவிகள் கண்களிலும், நடவடிக்கைகளிலும் தெரிந்தது!

அன்று வெங்கடாச்சாரி விடுமுறை எடுத்திருந்தார். துறைத்தலைவருக்கு அழைப்பு வந்தது கல்லூரி முதல்வரிடம் இருந்து. தலைவர் இல்லாததால் துணைத்தலைவராக வர்ஷினி அங்கே சென்றார். உள்ளே நுழைந்ததும் முதல்வருக்கு வணக்கம் சொல்லிவிட்டு பணிவுடன் நின்றார். எதிரே இருந்த இருக்கையில் அமருமாரு பணித்தார் முதல்வர். இன்று வெங்கடாச்சாரி சார் விடுமுறையில் இருக்கிறார் என்று சொன்னதும் தலையசைத்து அதைக் கேட்டுக் கொண்டவர், அழைப்பு மணியை அழுத்தினார்.

எண்ணெய் காணாத தலை, ஒடுங்கிய முகம், பத்து நாள் வயதான தாடி, இஸ்திரி என்றாலே என்னவென்று பார்த்திராத சட்டை, குதிகால் தெரியும் பாண்ட், பழைய செருப்பு சகிதமாக ஒருவன் உள்ளே நுழைவதை வர்ஷினி பார்த்தார். யாரையோ அழைக்க யாரோ வருகிறார்கள் போலும் என்று நினைத்த படி யார் நீங்க? யாரு உங்கள உள்ளே வுட்டது என்ற படி எழுந்து அவனை வெளியே அனுப்பும் பாங்கில் நடையெடுத்தார். நான் தான் அவனை வரச் சொன்னேன் என்ற முதல்வர், இவன் இனி உங்கள் துறையில் தான் படிக்கப் போகிறான். இரண்டாம் ஆண்டில் இணைத்துக் கொள்ளுங்கள். இதைச் சொல்லத் தான் உங்களைக் கூப்பிட்டேன் என்றார். வர்ஷினிக்கு வந்ததே ஆச்சரியம். இது வரை இரண்டாம் ஆண்டில் பாதியில் யாரையுமே அவர் வந்த ஐந்தாண்டுகளில் இணைத்ததே இல்லை! சார்! என்று ஏதோ பேச வாயெடுத்த வர்ஷினியிடம், இவனை உடனே சேர்த்துக் கொள்ளச் சொல்லவில்லை. இவனுக்கு அதற்கான தகுதி இருக்கிறதா என்று சோதித்துச் சொல்லுங்கள். நிர்வாகம் இவனைச் சேர்க்கச் சொல்லி வலியுறுத்துகிறது என்றார்.

சரி வாங்க, என்று அவனை அழைத்துக் கொண்டு துறைக்குச் சென்றார் வர்ஷினி. அங்கே அவனிடம் கண்களை மூடிக் கொண்டு சில கேள்விகள் கேட்டார். அதற்கான பதில்களைக் கேட்டதும், கண்ணால் காண்பது பொய் என்று பெரியவர்கள் சொன்னது சரி தான் போலும் என்று எண்ணிக் கொண்டாள். இதற்கு முன் எங்கே படித்தீர்கள்? என்றார். அவனும், டென்த் முடிச்சதும் பாலிடெக்னிக்கில் கணினித் துறையில் டிப்ளமோ படிச்சேன். அதுக்கப்புறம் தான் இஞ்சினியரிங் காலேஜுலயும் பாதியிலயும் சேரலாம்னு தெரிஞ்சிக்கிட்டேன். அதான் சேர வந்தேன் என்றான். இனி பிராஜக்டுகள் எல்லாம் செய்யணுமே பிக்கப் செய்வீங்களா? என்று கேட்ட வர்ஷினிக்கு பொத்தாம் பொதுவாக தலையாட்டினான். சரி நாளை, துறைத்தலைவர் வந்து விடுவார். நாளைக்கே வகுப்பில் சேரலாம் என்று சொல்லிவிட்டு வாங்க பிரின்ஸியப் பார்ப்போம் என்று மீண்டும் முதல்வர் அறைக்கே அழைத்துச் சென்று, சேத்துக்கலாம் சார் என்றார் விபரீதம் உணராமல்.

மறுநாள் காலை இரண்டாமாண்டு வகுப்பு. வெங்கடாச்சாரி லாஜிக் மற்றும் அல்காரிதம் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பொதுவாகவே அவர் வகுப்பில் யார் தலையிட்டாலும் அவருக்கு அது பிடிக்காது. பியூன் கூட ஏதேனும் செய்தி சொல்லவேண்டும் என்றால் அவர் பாடம் நடத்தும் போது வரமாட்டான். ஆனால், புதிதாய் வகுப்பில் சேரும் அவனுக்கு அது தெரியுமா? வெளியே வந்து நின்று சார் என்றான். யெஸ் என்று சற்று எரிச்சலுடன் அவனைப் பார்த்த வெங்கடாச்சாரி என்ன என்று பார்வையிலேயே அவனை எரித்தார். நான் புதிதாய்

இந்தத் துறையில் படிக்க வந்திருக்கேன் சார், என்ற படி முதல்வர் கொடுத்த அனுமதியை நீட்டினான்!

அதற்குள் மொத்த வகுப்பும் அவனை பாதாதிகேசம் அளந்து விட்டது. முதல்வர் கையொப்பத்துக்கு மேல் துறைத்தலைவர் என்னுமிடத்தில் வர்ஷினியின் கையெழுத்தைப் பார்த்ததும் அவருக்கு மேலும் ஆத்திரம் வந்தது. முதல்வரின் கையெழுத்து மட்டும் இல்லையென்றால் அன்று நடந்திருக்கும் கதையே வேறு!

சரி சரி. உன் பெயரென்ன சொன்னாய்? என்றார். செல்வம் என்றான். இங்கே பாருங்கப்பா இப்ப தான் லாஜிக் பத்தி பார்த்துக்கிட்டு இருக்கோம். லாஜிக் இல்லாம எப்படியெல்லாம் பேரு வைக்கிறாங்க பாரு. வெள்ளையப்பன்னு கருப்பா இருக்குறவனுக்கு பேர் வைக்கிற மாதிரி என்று சொன்னவுடன், வகுப்பே கொல்லென்று சிரித்தது! படபடவென பெஞ்ச்சைத் தட்டி ஆர்ப்பரித்தது. எங்கே சென்று அமர்வது என்று அவரையே கேட்டான் செல்வம். ஆமா, கடலோரக் கவிதையில வர்ற சின்னப்பதாஸ் மாதிரி ஆள் மட்டும் வளந்தா போதுமா? உன் உயரத்துக்கு உன்னை முத பெஞ்சிலயா உட்காரச் சொல்லுவாங்க. கடைசி பெஞ்சுக்கு போ. இது ஒழுங்கா படிக்கிறவங்க படிக்குற காலேஜு. ஹும் என்றொரு பெருமூச்சு விட்டார்.

ஆனால் செல்வம் இதையெல்லாம் கண்டு கொண்டதாய்த் தெரியவில்லை. மொத்த வகுப்புக்கும் அவனைப் பிடிக்கவில்லை. வர்ஷினிக்கு மட்டும் அவனைப் பிடித்திருந்தது.

பாகம் - 10

செல்வம். வெங்கடாச்சாரி சொன்னது போல் லாஜிக் இல்லாமல் வைக்கப்பட்ட பெயரில்லை. இருந்தும் அவனுக்கு அவர் மேல் கோபம் ஏதும் வரவில்லை. காரணம் இவர் போல் எத்தனையோ மனிதர்களைப் பார்த்துப் பண்பட்டுப் போனது அவன் மனம்.

செல்வத்தின் தாயார் ராஜாத்தி. பெயரைப் போலவே ராஜாத்தியாகத் தான் வளர்ந்தாள். பெரும் பணக்காரக் குடும்பம். அவளும் மணி என்ற ஒரு தம்பி மட்டுமே அந்தக் குடும்பத்தின் வாரிசுகள். ஆனால் காதல் அந்தஸ்து பார்த்து வருவதில்லையே. செல்வத்தின் தந்தை ராமையா அவர்கள் வீட்டில் கார் ஓட்டுநராக வேலை பார்த்து வந்தர். ராமையாவின் அழகு, பேச்சு சாதுர்யம், நடவடிக்கைகளில் மனம் மயங்கி காதல் மலர்ந்தது இருவருக்கும். அரசல் புரசலாக ராஜாத்தியின் தந்தை காதுக்கு இவர்கள் காதல் வந்த போது, இவள் தந்தை இது தகாத காதலாகும், உடனே மறந்து விட்டால் அனைவருக்கும் நலம் என்றதுடன், ராமையாவையும் வேலையை விட்டு நிறுத்தி விட்டார்.

ஆனால் ராஜாத்தியால் அவரை மறக்க முடியவில்லை. ஒரு நாள் கட்டிய சேலையுடன் தாய் தந்தையை வணங்கி சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி விட்டாள். அன்றே அவளைத் தலை முழுகியது அவள் குடும்பம். கோவையில் ராமையாவும் ராஜாத்தியும் நல்லதொரு இல்வாழ்க்கை நடத்தி வந்தனர். அவர்களுக்குக் கிடைத்த செல்வம் தான் இந்த செல்வம். செல்வத்தின் மேல் உயிரையே வைத்திருந்தனர் இருவரும். ராமையா ஒரு டாக்ஸி ஓட்டி வந்தார். காரின் உரிமையாளரிடம் விசுவாசமாக இருந்தார். அதனால் மொத்த கணக்கையும் உரிமையாளர் அவரிடமே ஒப்படைத்தார். தெளிந்த நீரோடையாக ஓடிக் கொண்டிருந்தது இவர்கள் இல்வாழ்க்கை.

ஆனால், விதி இவர்களைச் சும்மா விடவில்லை. ஒரு நாள் ராமையா வீட்டுக்கு வந்தார் பொட்டலமாகக் கட்டப்பட்டு. ஆம், ராமையா ஓட்டி வந்த காரும், ஒரு போலீஸ் வேனும் நேருக்கு நேர் மோதி சம்பவ இடத்திலேயே ராமையா உயிரிழந்தார். அப்போது செல்வத்துக்கு வயது 10. 6 ம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தான் செல்வம். எந்தத் துறை முதல் தகவல் அறிக்கையைப் பதிய வேண்டுமோ அந்தத் துறையே தவறு செய்தால் பின் எவ்வாறு கேஸைப் பதிவார்கள்? ராமையா குடித்து விட்டு வண்டி ஓட்டி வந்திருந்ததாகவும் அவர் மேலேயே தவறிருந்ததாகவும் இருந்தது அறிக்கை. பாவம் குடிப்பழக்கமே இல்லாத ராமையா குடிகாரராகி விட்டார். இருந்தும் ராஜாத்தி துவண்டு விடவில்லை. இன்சூரன்ஸ் பணம் 1 லட்சம் வந்தது. அதை வைத்தும், தனது அயராத உழைப்பினாலும் செல்வத்தை முடிந்த வரை படிக்க வைத்தாள்.

பலகாரச் சீட்டு பக்கத்தில் உள்ளவர்களிடம் பிடித்து திருவிழா சமயங்களில் அவர்களுக்கு அதை வழங்கி ஏதோ அவர்கள் வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. செல்வம் ஏற்கனவே அதிகம் ஆசைப்படுபவன் இல்லை. தாயின் கஷ்டங்களைத் தானும் தூணாய்த் தாங்கிக் கொண்டான். அவனது ஒரு நாளின் 24 மணிநேரத்தில் 8 மணி நேர உழைப்பு, 8 மணி நேர படிப்பு, ஆறு மணி நேர தூக்கம் என்று கழிந்து கொண்டிருந்தது. அவன் செய்யாத வேலை இல்லையெனலாம். காலையில் பேப்பர் போடுவது அவனுக்குப் பிடித்த ஒரு வேலை. செய்திகள் அனைத்தையும் இலவசமாகவே தெரிந்து கொள்ளலாம். அதிகாலையிலேயே சைக்கிளை எடுத்துக் கொண்டு ஊர் சுற்றலாம். சர்வர் வேலையும் பார்த்ததுண்டு. வேலையில் என்ன இருக்கிறது? ஈடுபாட்டில் தானே இருக்கிறது அனைத்தும். படிக்கும் போது கல்வி, வேலை செய்யும் போது வேலை என்று செய்கின்ற காரியங்களில் ஈடுபாடுடன் இருந்தது அவனுக்கு வெற்றியைத் தந்தது.

பத்தாவது முடித்ததும் பாலிடெக்னிக்கில் படிக்க ஆரம்பித்தான். இவன் நிலையையும் படிப்பதையும் பார்த்து அதன் முதல்வர் பாலிடெக்னிக் நிர்வாகியிடம் சொல்ல அவர் தனது உயிர் நண்பரான ராகவா கல்லூரியின் நிர்வாகியிடம் சிபாரிசு செய்ய, அதனாலேயே இவனுக்கு ராகவா கல்லூரியில் இடமும் கிடைத்தது. ஆனால், இவனும் ராஜாத்தியும் கோவையிலிருக்க முடியாத நிலை. எனவே இருவருமே தேனி வந்தனர். இனி இங்கேயே ஒரு இடம் பிடிக்க வேண்டும், வேலை தேடவேண்டும் என்று பல பணிகள் காத்திருந்தன செல்வத்துக்கு. அதோடு படிக்கவும் வேண்டும். ஒரே ஆண்டில் முதலிடம் வாங்கிக் காட்டுவேன் என்ற சவாலை ராஜாத்திக்கு விட்டிருந்தான் செல்வம்.

படிக்க முடிந்ததா இவனால்? உமாவையும் கலையையும் அவனால் அவ்வளவு எளிதில் முந்த முடியுமா?

பாகம் - 11

இரண்டாம் மாத மதிப்பெண்கள் பட்டியலிலும் உமாவும் கலையும் தான் முதலிரண்டு இடத்தைப் பிடித்திருந்தனர். செல்வத்துக்கு முதலில் தலையும் புரியவில்லை, வாலும் புரியவில்லை. அவனுக்கும் கணினித்துறை பிடித்த துறைதான் என்றாலும், ஒரு பெரிய சிக்கலான நூல்பந்தைக் கொடுத்து அதன் நுனியைக் கண்டுபிடிக்கவேண்டும் என்று கேட்டது போல் இருந்தது அவனுக்கு. தினம் தினம் பாடங்கள் நடத்த நடத்த மேலும் மேலும் சிக்கலானது பந்து! அந்த நுனியைக் கண்டறிய அவனுக்கு உதவியவர் தான் வர்ஷினி.

தேனியில் இவனுக்குப் பிடித்த வேலையான பேப்பர் போடும் வேலையே முதலில் கிடைத்தது. மாதம் 500 ரூபாய் சம்பளம். வீடொன்றும் வாடகைக்குக் கிடைத்தது. மாதம் 500 ரூபாய்க்கே! அவன் தாயாருக்கு அங்கே யாரையும் பழக்கம் இல்லை என்பதால் வெளியே சீட்டு எதுவும் பிடிக்க முடியவில்லை. இருவரும் சேமிப்பைக் கரைத்துக் கொண்டிருந்தனர் கொஞ்சம் கொஞ்சமாய். மாலையில் ஒரு இடத்தில் கணக்கு எழுதிக் கொடுத்தான் செல்வம். அதில் கொஞ்சம் வரும்படி வந்தது. சின்னச் சின்ன வேலைகள் எதுவானாலும் தயங்காமல் செய்யும் செல்வத்துக்கு வேலைக்குப் பஞ்சமே வந்ததில்லை! தேனீ கூட சுறுசுறுப்பை இவனிடம் தான் கற்றுக் கொள்ள வேண்டும்.

பேப்பர் போடும் வேலை மட்டுமல்ல, மாதம் ஒருமுறை பில்லைக் கொடுத்து அதற்குப் பணம் வசூலிக்கும் வேலையையும் அவனுக்கே கொடுத்திருந்தனர்! ஒரு வீட்டில் இப்படித் தான் வசூலிக்க வெளியே நின்று மணியடித்தான். வீட்டுக்காரர் வெளியே வந்து இவனைப் பார்த்து விட்டு நியூஸ்பேப்பர் பையனா? இதோ பணம் கொண்டு வருகிறேன் என்று உள்ளே சென்றார். சிறிது நேரம் நின்று பார்த்தான். யாரையும் காணவில்லை. மறுமுறை மணியடித்தான். இந்த முறை வெளியே வந்தது வர்ஷினி!

அதிகாலையில் இவனைப் பார்த்ததும் அவருக்கு ஆச்சரியம்! வா செல்வம். உள்ளே வா. என்ன விசேஷம்? என்றார், அவன் யாரென்று தெரியாமல். அவனும் சிரித்துக் கொண்டே, "நான் தினமும் இங்கே வர்றேன். உங்கள் வீடா இது?" என்று கேட்டான். அதே நேரம் வர்ஷினியின் கணவர் பணத்தோடு வெளியே வந்தார். வர்ஷினி அவனைத் தன் கணவரிடம் அறிமுகப்படுத்தி வைத்தார். இவன் பேரு செல்வம். என் கிட்டத் தான் படிக்கிறான். நல்ல பையன். கேட்ட கேள்விக்கெல்லாம் எப்படிப் பதில் சொன்னான்னு கேட்கிறீங்க? என்று சொன்னவுடன், வர்ஷினியின் கணவர், இவனை நியூஸ் பாய்னு நினைச்சேன், நைஸ் பாய்னு சொல்ற நீ! என்று சொல்லியபடி பணத்தைக் கொடுத்தார் அவனிடம்.

வர்ஷினிக்கு இவன் பேப்பர் போட்டுக் கொண்டே படிப்பது ஆச்சரியத்தைத் தந்தது. இது தான் அவனை வர்ஷினிக்குப் பிடிக்கக் காரணம். ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமை மாலை வர்ஷினியின் வீட்டுக்கு செல்வம் வந்திருந்தான். தயங்கித் தயங்கி மணியை அடித்தான். வெளியே வந்த வர்ஷினி சந்தோசத்துடன் வா செல்வம், இப்போ உள்ளே வரலாமே என்ற படி அழைத்துச் சென்று காபியும் கொடுத்தாள்.

செல்வம் ஆதியோடந்தமாய் அவன் கதை முழுதும் சொன்னான். எப்படிப் படிப்பது என்னும் சிக்கலில் தான் இருப்பதையும் சொன்னான். வர்ஷினியும் அவனுக்கு உதவுவதாக ஒப்புக் கொண்டார். ஞாயிற்றுக் கிழமை மாலைகளில் வர்ஷினியின் வீடு குருகுலமானது.

அதன் பயனோ என்னவோ? இந்த முறை செல்வம் மூன்றாவது இடத்துக்கு வந்து விட்டான்!

வகுப்பில் இதனாலேயே அவனை யாருக்கும் பிடிக்கவில்லை. இத்தனைக்கும் செல்வம் கலகலப்பானவன். அது வர்ஷினிக்கு நன்றாகத் தெரியும். அவன் இருந்தால் அந்த இடமே கலகலப்பாகிவிடும். அவன் மனம் எப்போதும் நீர் போல் இருக்கும். எந்தப் பாத்திரத்தில் ஊற்றுகிறோமோ அந்தப் பாத்திரத்தின் வடிவத்தை எடுத்துக் கொள்ளும். எனவே அவனால் எந்த ஒரு சூழ்நிலையையும் சமாளிக்கும் மனப்பக்குவம் இருந்தது. ஆனால் அவன் தோற்றம் அவனுக்கு நண்பர்களைச் சேர்த்துத் தரவில்லை.

உமாவுக்கு இவனைச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. வெங்கடாச்சாரிக்கும் இவனைப் பிடிக்காது! அதுவும் வர்ஷினி இவனுக்கென்று தனிக்கவனம் செலுத்துவதைக் கண்டு ஆத்திரமடைந்தார்கள் இருவரும். கலைச்செல்விக்கு செல்வத்தைப் பார்த்தால் வித்தியாசமாக உணர்ந்தாள். ஆள் தோற்றத்துக்கும் படிப்புக்கும் திறமைக்கும் சம்பந்தமே இல்லையே என்று நினைத்தாள். அவளுக்கு செல்வத்தின் கூடப் பேச ஆசை தான். ஆனால் அது தெரிந்தால் உமா இவளைக் கொன்றே போட்டு விடுவாள். இருக்கும் இரண்டாவது இடமும் தட்டிப் பறிக்கப் படுமோ என்ற பயமும் வந்துவிட்டது கலைக்கு!

அதே நேரம் செல்வத்துக்கோ இவர்களை எப்படி வெற்றி கொள்வது என்ற கவலை தான்! அவர்கள் வியூகம் தெரிந்தால் தானே வெற்றி கொள்ள முடியும். பார்த்தாலே தலையைச் சிலுப்பிக் கொள்கிறார்களே என்று எண்ணிக் கொண்டான். இருந்தும் எப்படியாவது முதலிடத்தைப் பெற்று விட வேண்டும் என்று வெறியாய் இருந்தான்.

இப்படியே விட்டிருந்தால் உமாவே எப்போதும் முதலிடத்தில் இருந்திருக்கலாம். ஆனால் அவள் ஒரு தவறு செய்து விட்டாள். செல்வத்தின் மேல் பொறாமைப் பட்டாள். போட்டி இருக்கலாம் தவறில்லை. பொறாமை வந்த அன்று? சரிவு தானே! இவளால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை. எப்போது புத்தகத்தைத் திறந்தாலும் செல்வம் கையை உயர்த்தி சிரித்துக் கொண்டே கட்டைவிரலைக் காட்டுவது போலவே தோன்றியது அவளுக்கு. இதுவே அவளை வீழ்ச்சியடையச் செய்தது.

அடுத்த மதிப்பெண் பட்டியலில் செல்வம் முதலிடத்துக்கு வந்தே விட்டான்!

பாகம் - 12

நிலைமை மிகவும் மோசமாகிக் கொண்டே வந்தது இருவருக்கும்.

ரமேஷ் வேலை தேடாத இடமில்லை தஞ்சாவூரில். அவனுக்கு ஏற்ற வேலை கிடைத்த பாடில்லை. வேறு வேலை பார்க்கவும் இவனுக்கு இஷ்டம் இல்லை. ரமேஷ் ஒரு நாள் நந்தனைப் பார்த்து, "எனக்கு வெறுத்துப் போச்சுடா. ஒருத்தனாச்சும் உனக்கு வேலை செய்யத் தெரியுமான்னு கேக்க மாட்டேங்கிறான். உன் அப்பா, அம்மா யாரு? என்ன செய்றாங்க? என்ன ஜாதி? எத்தனை வருச எக்ஸ்பீரியன்ஸ்? யாரு சிபாரிசு? கேட்டுக் கேட்டு அலுத்துப் போச்சுடா. இந்த சமூகத்துக்கு மேலேயே வெறுப்பு வந்திருச்சு. சே. வேறெங்காவது வெளியூருக்குப் போவோமா?" என்றான்.

நந்தனுக்கும் ஆசை தான். அவனென்ன இங்கே கலெக்டர் உத்தியோகமா பார்க்கிறான். துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு கிளம்பலாம் தான். ஆனால் சோற்றுக்கு வழி? இப்போதே மூன்று வேளை ஏதோ சாப்பிட்டது இப்போது ஒன்றரை வேளையாகச் சுருங்கி விட்டது. இப்போது அடிக்கடி புதுப் படங்களும் அதிகம் வருவதில்லை. இவன் படித்த இளநிலை கணிதவியல் பட்டத்திற்கு என்று இனிமேல் தான் வேலை உருவாக்க வேண்டும் போலும். சரி வாடா பெரிய கோவில் வரைக்கும் போய்ட்டு வருவோம். திக்கற்றவங்களுக்கு தெய்வம் தாண்டா துணை என்றபடி இருவரும் கோவிலுக்குக் கிளம்பினர்.

ஏற்கனவே இரண்டு மாத வாடகை பாக்கியாகி விட்டது. வீட்டு உரிமையாளரிடம் என்ன சொல்வது என்றே புரியவில்லை. வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையும் பொய்த்துக் கொண்டே வந்தது. ரமேஷ் கொஞ்சம் கொஞ்சமாய் மிருகமாய் மாறிக் கொண்டிருந்தான். நந்தன் ஒருவன் தான் அவனைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தான்.

ஆனால், பட்ட காலிலே படும் என்பது போல வந்தது காலச் சக்கரம் இவர்கள் மேல் ஏற்றிச் செல்ல. ஆம், நந்தன் வேலை பார்த்த தியேட்டர் முதலாளி காம்ப்ளக்ஸ் கட்டுவதற்காக மொத்த தியேட்டரையும் ஒரு நாள் விலை பேசிவிட்டார். நந்தனுக்கு வந்த கோபம் அந்த மட்டுக்கு இல்லை. அதற்காக, இவனிடம் கேட்டு விட்டா தியேட்டரை விற்க முடியும்? அவரால் நடத்த முடியவில்லை, அவருக்கும் கட்டவில்லை. எனவே விற்று விட்டு கிளம்பிவிட்டார்.

ஒரே நாளில் இருவரும் நிராதரவாக, பிறந்த அன்று எப்படி இருந்தார்களோ அதே போல் சமூகத்தால் அனாதையாக்கப் பட்டார்கள். நந்தன் அதை வந்து ரமேஷிடம் சொன்னதும் பேய்ச்சிரிப்புச் சிரித்தான் ரமேஷ்.

பாகம் - 13

இனிமேல் சத்திய சீலர்களாய் வாழ்வதில் அர்த்தமே இல்லைடா. நாம் வாழ்வது ஒன்னும் பழைய யுகம் இல்ல. கலியுகம். இங்கே நல்லதுக்குக் காலமில்லைன்னு பகவானே சொல்லி வச்சிருக்காண்டா. அப்படீன்னா என்ன அர்த்தம். நீ நல்லவனா இருந்தா உனக்குக் காலமில்லன்னு தானே அர்த்தம். இனிமேலும் நாம நல்லவனா இருந்தா நம்ம லட்சியம் நிறைவேறாது என்றான் ரமேஷ். இத்தனை நாள் எதைக் காத்து வந்தார்களோ அந்த நல்ல எண்ணங்களே மாறும் நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் இருவரும்.

ரமேஷ் இத்தனை பேசிய பிறகும் வெகுநேரம் நந்தன் எதுவும் பேசவில்லை. யோசனையில் ஆழ்ந்திருந்தான் பின்னர் நந்தன் சொல்ல ஆரம்பித்தான். நீ சொல்வது வாஸ்தவம் தாண்டா. எவ்வளவு நாள் தான் பொறுத்துப் பார்ப்பது? ஆனா நம்மால யாரும் பெரிய அளவுல பாதிக்கப்படக் கூடாது. ஒரே முறை தான் தப்பு செய்யணும். அத வச்சு நாம வாழ்க்கையில செட்டில் ஆகிடணும். நாம செஞ்ச தப்புக்கு நாமே பரிகாரம் தேடிக்கணும். என்ன சொல்ற? என்று ரமேஷைப் பார்த்துக் கேட்டான்.

ரமேஷும் இதற்குத் தான் காத்திருந்தவன் போல, நா நினைச்சேன் நீ சொல்லிட்டடா. கவலையே படாத நாமும் ஒரு நாள் இந்த உலகின் உச்சியில் நிற்கலாம்டா, உலகே எனக்குச் சொந்தம் என்று கத்தலாம்டா. அதுக்கு இந்த ஒரு தப்பு உதவி செய்யும்னா அதைச்செய்றதுல தப்பே இல்லன்னு தான் எனக்கும் தோணுது என்று பேசிக் கொண்டே அன்று இரவு தூங்கச் சென்றனர்.

அன்று முழுதும் நந்தன் தூங்கவில்லை. பல வழிகளை யோசித்துப் பார்த்தான், தப்பு செய்வதும் அவ்வளவு சுலபம் இல்லை என்பது அவனுக்குத் தெரிய வந்தது. எதைச் செய்ய வேண்டும் என்றாலும் குறைந்த பட்ச முதலீடு என்பது வேண்டியிருந்தது! எனவே முதலே இல்லாமல் வருமானம் வர அவர்கள் தேர்ந்தெடுத்த வழி வழிப்பறிக் கொள்ளை. இதற்குத் தேவை இரண்டு கத்திகளும் மனதில் தைரியமும் மட்டுமே. சரி தான். இது தான் சிறந்த வழி. யாராவது பணக்காரர்கள் போகும் பாதையில் நின்று வழிப்பறி செய்து விட வேண்டியது தான், என்று எண்ணிக் கொண்டே அவனும் தூங்க ஆரம்பித்தான்.

இதோ, விதியும் இவர்களை வளர்ச்சிப் பாதையில் திருப்பி விட்ட சந்தோசத்தில் பூரிப்பது போல் இருக்கிறதே?

பாகம் - 14

இப்படியே ஓராண்டு சென்றிருந்தது. உமா இப்போதெல்லாம் செல்வத்தைப் பார்த்து அலட்டிக் கொள்வதில்லை. பொறாமை குணத்திலிருந்து மீண்டிருந்தாள். அதற்கு ஒரு வழியில் கலைச்செல்வியும் காரணம். நீ ஏன் அவனைப் பத்தி நினைக்கிற. நீ முதலிடத்துக்கு வரணும்னா நீ தான் படிக்கணுமே ஒழிய, அவன் படிக்கக் கூடாதுன்னு ஏன் நினைக்கனும் என்று சொல்லி சொல்லியே அவளைக் கொஞ்சம் மாற்றி விட்டாள். இருந்தாலும் உமாவும் செல்வமும் பேசிக் கொண்டதே இல்லை.

ஓராண்டாக மாணவர்கள் கொஞ்சம் கொஞ்சமாய் செல்வத்துடன் பேச ஆரம்பித்து இருந்தனர். அவர்களுக்குத் தேவையான சிறு சிறு பாட சம்மந்தமான உதவிகளை செல்வம் செய்து வந்தான். எனவே அவன் ஒதுக்கத் தகுந்தவன் அல்ல என்ற முடிவுக்கு மாணவர்கள் அனைவரும் வந்திருந்தனர். மாணவிகளுடன் அவன் அவ்வளவாகப் பேசுவதும் இல்லை, அவனுக்கு அதற்கான நேரமும் இல்லை. கல்லூரி முடிந்ததும் உடனே வெளியேறிச் சென்று விடுவான். வேலை செய்ய வேண்டுமல்லவா? மேலும் காலையிலும் சரியான நேரத்திற்குத் தான் வருவான். மதியம் உணவருந்தியவுடன் நூலகத்துக்குள் செல்பவன் தான், மீண்டும் வகுப்புகள் ஆரம்பிக்கும் மணியடித்ததும் தான் உள்ளே வருவான்.

மற்றவர்கள் போல் பிராஜக்டுக்களுக்காக இவனால் நேரம் செலவழிக்க முடியவில்லை, மேலும் பணமும் செலவழிக்க முடியவில்லை. மொத்தத்தில் ஒரே ஒரு முறை மட்டுமே அவனால் முதலிடம் பெற முடிந்தது. மீண்டும் உமா முதலிடத்துக்கே சென்று விட்டாள். ஆனால், செல்வம் இரண்டாம் இடத்தைத் தக்க வைத்துக் கொண்டான்.

இதற்குள் கலைச்செல்வி அவனுடன் பேசிக் கொள்ள ஆரம்பித்தாள். காரணம் இவளும் அவனும் கல்லூரி பேருந்தில் சென்ற காரணத்தால். இவன் சீக்கிரமே இறங்கிக் கொள்வான். அவ்வப்போது புன்முறுவலுடன், இவர்கள் நட்பு ஆரம்பித்தது.

கமலன் இப்போதெல்லாம் உமாவிடம் அதிகம் பேச முடிவதில்லை. இருந்தும் இருவருக்கும் அப்படி ஒன்றும் சண்டையும் இல்லை. பொதுவாகவே மாணவர்கள் தாமாகவே படிக்க வேண்டியிருப்பதால் காதலுக்கு அவ்வளவாக அங்கே வேலை இருந்திருக்க வில்லை.

மூன்றாம் ஆண்டு ஆரம்பித்தது. மாணவ மாணவிகளின் தலைவியாக உமா தேர்ந்தெடுக்கப் பட்டாள். செல்வமும் சேர்ந்து தான் கைதட்டினான். ஆனால் அவனைக் கண்டுகொள்ளவே இல்லை உமா. உமாவுக்குப் பிறந்த நாள் வந்த சமயம் வகுப்பில் படிக்கும் அனைவருக்கும் விருந்து கொடுத்தாள் ஒரு நட்சத்திர ஓட்டலில். ஆனால் செல்வத்துக்கு மட்டும் அழைப்பில்லை. வெங்கடாச்சாரியும் வர்ஷினியும் கூட வந்திருந்தனர். ஆனால் வர்ஷினி அதிக நேரம் இருக்கவில்லை. ஒரு வேலை இருந்ததால் சீக்கிரமே கிளம்பி விட்டார் வாழ்த்துச் சொல்லி விட்டு. ஆனால், செல்வம் வராததால் தான் வர்ஷினி சீக்கிரம் கிளம்பி விட்டார் என்று உமாவிடம் சொல்வதற்குத் தான் ஆட்கள் அதிகம் இருந்தனர். போனால் போகட்டும் அவளும் என்று மனதுள் நினைத்துக் கொண்டாள் உமா.

எல்லோருக்கும் மூன்றாமாண்டில் அதிக வேலை ஆரம்பித்தது. வீட்டு நினைப்பு கூட இல்லாமல் படிக்க ஆரம்பித்தனர். இந்நிலையில் திடீரென யார் ஆரம்பித்தார்கள் என்று தெரியவில்லை சுற்றுலா சென்றால் என்ன? எத்தனை நாள் தான் கணினியும் புத்தகமுமாய் இருப்பது. மூன்று நாட்கள் எங்காவது சென்று வந்தால் புத்துணர்ச்சியுடன் இருக்க முடியுமே என்று வகுப்பில்

பேச்சு ஆரம்பித்தது. அனைவருக்குமே ஒரு மாற்றம் தேவைப்பட்டதால் ஒரு இன்பச் சுற்றுலா செல்வது என்று முடிவெடுத்தனர். உமாவுக்கும் வெங்கடாச்சாரிக்கும் பிரச்னை ஏதுமில்லாததால் சுற்றுலா திட்டம் உடனே அனுமதிக்கப்பட்டது.

ஒவ்வொருவரும் ரூ.1000 கட்ட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. செல்வம் மட்டும் நான் வரவில்லை என்று சொல்லத் தொடங்கினான் நண்பர்களிடம். இது காட்டுத்தீயாய் உமா காதுக்குச் சென்றது! அவ்வளவு தான் பொங்கி எழுந்து விட்டாள். வரானோ வரலியோ பணத்தை ஒழுங்கா கட்டச் சொல்லு. அந்த ரூபாயையும் சேர்த்துத் தான் கணக்குப் பார்த்திருக்கோம். அதென்ன, எல்லோரும் சரின்னும் போது முட்டுக் கட்டை போட்டுக்கிட்டு என்று பொரிந்து தள்ளி விட்டாள் சொன்னவனிடம்.

ஆனால், செல்வம், உமா சொன்னதாலா வரவில்லை என்றான்? இன்பச்சுற்றுலா செல்ல அவனிடம் அவ்வளவு பணம் உடனே ஏது?

பாகம் - 15

டூர் எங்கே செல்வது என்பதைப் பற்றிய விவாதம் நடந்து கொண்டிருந்தது! கொடைக்கானலில் ஆரம்பித்து ஊட்டி என்று மலைவாசஸ்தலங்களெல்லாம் சுற்றி கடைசியில் சென்னையில் வந்து நின்றது! சென்னையையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்ப்பது என முடிவு செய்து கொண்டனர். மொத்தம் மூன்று நாட்கள், நான்கு இரவுகள். போகும் மற்றும் வரும் இரவுகள் தவிர, மற்ற இரு இரவுகள் மட்டும் ஏதேனும் கல்யாண மண்டபமாகப் பார்த்து தங்கிக் கொள்வது என்றும் முடிவு செய்தனர். இவர்கள் வகுப்பில் மொத்தமே 30 பேர்கள் தான் என்பதால் இரண்டாமாண்டு மாணவ மாணவிகளையும் சேர்த்து ஒரு பேருந்தில் போகுமளவுக்கு ஆள் சேர்த்தாயிற்று.

அன்று காலை பேப்பர் போடும் போதே வர்ஷினி செல்வத்தைப் பிடித்துக் கொண்டார். ஏன் டூருக்கு வரமாட்டேன் என்கிறாய்? என்றார். பணம் தான் காரணம் என்றான் செல்வம். 1000 ரூபாய் தானே நானே தாரேன். நீ கொண்டு போய்க் கொடு. நாமென்ன அடிக்கடியா இது போல் செல்லப் போகிறோம். நீயும் வந்தால் நன்றாக இருக்கும் என்றார். எனக்கும் வர ஆசை தான். ஆனால் அம்மாவை நான்கு இரவுகள் தனியே விட்டு நான் எங்கும் இதுவரை சென்றதில்லை என்ற செல்வம், பின்னர் வர்ஷினியின் வற்புறுத்துதலின் பேரில் தானும் வரச் சம்மதித்தான். பணத்தை நானே புரட்டி விடுகிறேன். என்ன கொஞ்சம் அதிகம் உழைத்தால் போகிறது என்று முடிவு செய்து கொண்டான். அன்று இரவே தன் தாயிடம் விஷயத்தைச் சொன்னான்.

ராஜாத்திக்கு தன் மகனைப் பொறியியல் கல்லூரியில் படிக்க வைத்து விட்டோம் என்ற திருப்தி மனதில் இருந்தது. மகன் படித்து நல்ல நிலைக்கு வந்து விடுவான். அதைப் பார்ப்பதற்குத் தான் இவன் தந்தைக்குக் கொடுத்து வைக்கவில்லை என்று அடிக்கடி நினைப்பார். இன்று அவன் கல்லூரி மாணவ மாணவிகளுடன் சேர்ந்து சுற்றுலா செல்வதற்கும் மகிழ்ச்சியுடன் சம்மதித்தாள். பணத்தைப் பற்றி கவலைப்படாதே, இந்தா நான் சேர்த்து வைத்த சேமிப்பு பணம் என்று ஆயிரத்தைநூறு ரூபாயை அவன் கையில் கொடுத்தாள். அவனுக்கே ஆச்சரியம். இவ்வளவு பணம் ஏது அம்மா? என்றான். எல்லாம் காய்கறி வாங்கும் போது கடைக்குப் போகும் போது மிஞ்சும் சில்லறையைப் போட்டு வைத்த பணம் என்று சொன்னாள். இவனும், என்றாவது நம் பையில் கிடக்கும் சில்லறையை சேமிக்கும் பழக்கம் நமக்கு வரவில்லையே என்று நினைத்துக் கொண்டான். எங்கோ தூரத்தில் "சேத்த பணம் அத்தனையும் செலவு பண்ண பத்திரமா அம்மா கையில குடுத்துப் போடு செல்லக்கண்ணு. அவங்க ஆற நூறு ஆக்குவாங்க சின்னக் கண்ணு" என்று எங்கோ டி.எம்.எஸ். படித்துக் கொண்டிருந்தார்!

மறுநாள் வந்து பணத்தைக் கட்டிவிட்டான் செல்வம். அப்போதும் உமாவுக்கு அவன் மீது வெறுப்பாகத் தான் இருந்தது! இவன் வரமாட்டான் சந்தோசமாக, நிம்மதியாகச் செல்வோம் என்று நினைத்தேனே, வந்து விட்டானா கடன்காரன் என்று நினைத்துக் கொண்டாள்! அனைத்து பிரயாண விஷயங்களையும் அவளே பார்த்துக் கொண்டாள். பேருந்து பிடிப்பதிலிருந்து, விடுதி பிடிப்பது, வழியில் எந்தெந்த ஊர்களுக்குச் செல்வது, எந்த இடங்களையெல்லாம் சுற்றிப் பார்ப்பது என்று! சில பெரிய கணினி மென்பொருள் மற்றும் அவுட் சோர்சிங் நிறுவனங்களையும் தொடர்பு கொண்டு அங்கே இருந்த கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் மூலம் அனுமதி வாங்கி அங்கே பொழுதைப் பயனுள்ளதாகக் கழிக்கவும் ஏற்பாடு செய்திருந்தாள். கோவில்களையும் விட்டு வைக்கவில்லை. சாந்தோம் சர்ச்சைக் கூட ஒரு இடமாகக் கணக்கில் வைத்திருந்தாள். அவளது பயணத் திட்டத்தைப் பார்த்து வெங்கடாச்சாரிக்கு மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்பட்டது.

பாவம், அவர்களுக்கெங்கே தெரியப் போகிறது, இந்தப் பயணம் இவர்கள் வாழ்க்கையை அப்படியே மாற்றி எழுதும் எழுதுகோல் என்று?

பாகம் - 16

ரமேஷும் நந்தனும் முதல் வேலையாக வீட்டைக் காலி செய்தனர். சென்னையில் தங்களுக்கு நல்ல வேலை கிடைத்ததாகவும், முதல் சம்பளம் வாங்கியதும் வாடகைப் பணம் பாக்கியை உடனே அனுப்பிவைப்பதாகவும் உறுதி கூறினர். அவர்கள் வீட்டை நல்லமுறையில் வைத்திருந்ததையும், அவர்களின் நல்ல குணங்களையும் அறிந்திருந்த வீட்டின் உரிமையாளர் நீங்கள் சென்னையில் எந்தக் கம்பெனியில் வேலை செய்கிறீர்கள் என்று கூடக் கேட்கவில்லை. சும்மா இருந்த வீட்டுக்கு இனி இவர்களைப் போல வேறொரு குடித்தனத்தைப் பார்க்க வேண்டுமே என்னும் வருத்தம் தான் அவருக்கு. வாடகை பாக்கி எப்படியும் தனக்கு வந்து விடும் என்று நம்பினார்.

திருச்சி செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்தனர். திருச்சி அருகில் இறங்கிக் கொண்டனர். அவர்களுக்கென்று பெரிய சுமை எதுவும் இல்லை. ஒரு பாழடைந்த மண்டபத்தில் அன்று இரவைக் கழித்தனர். அன்று முழுதும் எப்படி வழிப்பறி செய்யலாம் என்று திட்டமிட ஆரம்பித்தனர்.

நந்தன் தான் முழுத்திட்டமும் மனதில் வைத்திருந்தான். இருவரும் புத்தம் புதிய கத்தி வைத்திருந்தனர். துப்பாக்கி இருந்திருந்தால் காரியம் சுலபமாக நடக்கும் தான். ஆனால் அவ்வளவு மெனக்கெட அவர்கள் விரும்பவில்லை. விளக்கமாக நந்தன் சொல்ல ஆரம்பித்தான். ஆட்கள் அதிகம் நடமாடும் பகுதியில் இருந்து குறைந்தது 10 கி.மீ. தூரத்தில் காத்திருக்க வேண்டும். ஏதேனும் திருப்பத்தில் காத்திருக்க வேண்டும். அப்போது தான் வாகனங்கள் மெதுவாகத் திரும்பும். அந்த நேரத்தில் சாலைக்கு நடுவில் சென்றால் வாகனத்தை நிறுத்தியே ஆக வேண்டும். எளிதில் மிரட்டி பணமோ நகையோ வேறு என்ன விலைமதிப்பற்ற பொருள் இருந்தாலும் அபகரித்துக் கொள்வது என்றும் முடிவு செய்து கொண்டனர். ஆனால் ஒரு விஷயத்தில் மட்டும் இருவரும் உறுதியாக இருந்தனர். அதாவது தாம் கத்தி வைத்திருப்பது பயமுறுத்தத் தானே ஒழிய யாருக்கும் சிறு கீறல் கூட ஏற்படுத்தக் கூடாது என்பது தான் அது. மேலும் எந்த வாகனத்தைத் தேர்ந்தெடுப்பது என்பதைப் பற்றியும் விவாதிக்க ஆரம்பித்தனர். விலை அதிகமுள்ள படகு போன்ற கார் ஏதாவது சென்றால் அதை நிறுத்த வேண்டும் என்றும், முக்கியமாக பெண்கள் உள்ளே இருந்தால் பயமுறுத்துவது எளிது என்றும், மேலும் அவர்களிடம் தான் நகைகளும் இருக்கும் என்றும் நந்தன் சொல்ல அதை ரமேஷ் ஏற்றுக் கொண்டான்.

இவ்வாறாக மறுநாள் பகல் முழுதும் தோதான இடத்தைத் தேடி அலைந்தனர். அவர்களுக்குத் தோதான சாலை மதுரையிலிருந்து மேலூர் வழியாகத் திருச்சி செல்லும் பாதை என்பதைக் குறித்துக் கொண்டனர். அவர்கள் நினைத்ததற்கு ஏற்ப அந்தப் பாதை நிறைய வளைவுகளைக் கொண்டிருந்தது. ஆள் அரவமற்ற ஒரு திருப்பத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். மாலை 6 மணி முதலே காத்திருக்க ஆரம்பித்தனர்.

மெல்ல மெல்ல ஆதவன் இவர்கள் செய்யும் செயலைக் காண விருப்பமில்லாது மேற்கு மலைச் சாரலுக்குக் கீழே மறைந்து கொண்டான். இருள் கவியத் துவங்கியது. ரமேஷுக்கும் நந்தனுக்கும் அவர்களது இருதயத் துடிப்பை அவர்களே கேட்கும் அளவுக்கு தடக் தடக் என்றது!

அவர்களுக்குத் தெரியுமா? ஒரு கொள்ளை நடத்துவது என்பது அவர்கள் நினைக்குமளவுக்கு அவ்வளவு எளிதல்ல என்பதும், மாட்டிக் கொண்டால் நடைபெறும் விபரீத விளைவுகள் என்னென்ன என்பதும்? கற்றுக் குட்டியாக நடந்து கொண்டு இவர்கள் மாட்டிக் கொள்ளப் போவதை நினைத்துத் தான் விண்மீன்கள் கண் சிமிட்டுகின்றனவோ?

பாகம் - 17

கலைச்செல்வியும் தந்தையைப் பிரிந்து இவ்வளவு நாட்கள் இருந்ததில்லை. தந்தையிடம் அனுமதி பெறும் வேலையை ஆனால் உமா தான் பார்த்துக் கொண்டாள். உமா கேட்டதும் மதுசூதனன் எதுவும் சொல்லவில்லை. பேஷா போய்வாங்க என்று கூறினார். மதுசூதனனுக்கு உமா மேல் அவ்வளவு பிரியம் ஏற்பட்டிருந்தது. ஆனால் அது அவளிடம் இருக்கும் பணத்தினால் அல்ல. பணத்தைப் பற்றி அவர் ஒரு நாளும் கவலைப் பட்டதே இல்லை என்று ஏற்கனவே கலை உமாவுக்கு சொல்லி இருக்கிறாள். அர்ச்சகராய் இருந்தாலும், பணம் தட்டில் அதிகம் போட்டு விட்டார் என்பதற்காக, ஒருவருக்கென தனி சலுகை எதுவும் செய்ய மாட்டார் அவள் தந்தை. எல்லோரும் அவரைப் பொருத்த வரை சமம் தான்.

கலைக்கு தான் நான்கு நாட்கள் தந்தை எவ்வாறு சாப்பிடுவார் என்ற கவலை. இங்கே பாரம்மா, இவள் சமைப்பதே 15 வயதுக்குப் பிறகு தான். இவள் பிறந்ததில் இருந்து 15 வயது வரை என் சமையலைத் தான் சாப்பிட்டு வளர்ந்தா என்று கிண்டலுடன் அவர் கூற, ஆமா, இவர் சமைப்பதை இனிமேலும் சாப்பிடக் கூடாதுன்னு தான் நான் 15 வயசிலேயே சமைக்க ஆரம்பித்து விட்டேன் என்று கலை சிரித்துக் கொண்டே கூற, அந்த இல்லத்தில் வெகு நாட்களுக்குப் பிறகு கலகல என்று சிரிப்போசை கேட்டது.

சுற்றுலா கிளம்பும் நாளும் வந்தது. அனைவரும் இரவு 8 மணியளவில் கல்லூரிக்கு வரவேண்டுமென்று கட்டளையிட்டிருந்தாள் உமா. அனைவரும் அதே நேரத்துக்குள் வந்து சேர்ந்து விட்டனர். ஆனால் கிளம்ப வேண்டிய பேருந்து சரியான நேரத்துக்கு வரவில்லை. என்ன இது கிளம்பும் போதே சகுனத் தடையாக இருக்கிறதே என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டாள் கலைச்செல்வி.

8 மணிக்கெல்லாம் வரவேண்டிய பேருந்து இரவு 11 மணிக்குத் தான் வந்தது. இதற்குள் உமா அந்தப் பேருந்து உரிமையாளரை பிடி பிடியென்று பிடித்து விட்டாள். சரி மூன்று மணிநேரம் தானே தாமதம்? அதைப் போகும் வழியில் சரி செய்து கொள்ளலாம் என்று வர்ஷினி கூற, பேருந்தைச் சுற்றிலும் அவர்கள் கல்லூரியின் பேனர் போன்றவற்றைக் கட்டினர். அனைவரும் பேருந்தில் ஏற பேருந்து 11.30 மணிக்கெல்லாம் புறப்பட்டது.

உமா தான் நடத்திச் செல்பவள் என்பதால் டிரைவருக்குப் பின்னால் இருந்த சீட்டில் அமர்ந்து கொண்டாள் ஜன்னல் அருகே. அவளுக்கு அருகில் வேறு யார் அமர்வார்கள்? கலைச்செல்வி தான் அமர்ந்திருந்தாள். அவர்களுக்குப் பின்னால் மற்ற மாணவ மாணவிகள் அமர்ந்திருந்தனர். செல்வத்துக்கு மட்டும் சீட் இல்லை! எனவே அவன் டிரைவர் சீட்டுக்கு எதிர்புறம் நடத்துநர் அமரும் இடத்தில் அமர்ந்து கொண்டான். அது வீடியோ கோச் என்றாலும் அவனால் வீடியோ பார்க்க முடியாது! அதைப் பற்றியெல்லாம் அவன் கவலை கொள்ளவில்லை. ஓட்டுநருக்கு அருகில் அமர்ந்து வருவதையே அவனும் விரும்பினான். வீடியோவில் படம் பார்ப்பது அவனுக்குப் பிடிக்காது. ஓட்டுநருடன் கதைத்துக் கொண்டே வந்தான்.

ஓட்டுநர் படு ஜாலியான மனிதர். கல்லூரி மாணவ மாணவிகளாக வந்ததும் அவருக்கும் இளவயது ஞாபகம் வந்து விட்டது போலும். செல்வம் தான், யாரையும் கணப்பொழுதில் பேசிக் கவிழ்த்து விடுவானே! மேலூரில் ஓட்டுநர் டீ சாப்பிட வேண்டும் என்று சொல்ல, இவனே கீழே இறங்கி டீ வாங்கி வந்து ஓட்டுநருக்குக் கொடுத்தான். ஓட்டுநருக்கே ஆச்சரியம். ஒரு கல்லூரி மாணவனாவது, டீ வாங்கித் தருவதாவது என்று.

உமா தான் ஏதோ சிடியைக் கொண்டு வந்து கொடுத்து, அதைப் போட வேண்டும் என்று

ஓட்டுநரிடம் சொன்னாள். அந்தப் படம் ஓட்டுநருக்குப் பிடிக்கவில்லை போலும். செல்வத்துக்கும் தான். இருவரும் அதன் வசனத்தைக் கேலி செய்து கொண்டே ரசித்துச் சிரித்தனர்!

மணி 12.30. வண்டி மேலூரைத் தாண்டி திருச்சி சென்று கொண்டிருந்தது. பல வித திருப்பங்கள் கொண்டிருந்த சாலை என்பதால் மெதுவாகவே ஒட்டிக் கொண்டிருந்தார் ஓட்டுநர்.

அப்போது.

பாகம் 18

மணி 8 ஆகியிருந்தது. ரமேஷும் நந்தனும் வாங்கி வந்திருந்த இரவு உணவைச் சாப்பிட்டு விட்டு மீண்டும் சாலையிலேயே காத்திருக்க ஆரம்பித்தனர். நேரம் செல்லச் செல்ல இருவருமே பொறுமையிழக்கத் துவங்கினர். வண்டிகளின் வரத்து முதலில் குறைந்தபாடில்லை. மதுரை திருச்சி சாலையில் இவ்வளவு வாகனங்கள் தொடர்ந்து வரும் என்று இவர்கள் கணக்குப் போடவில்லை. அங்கேயே ஆரம்பித்தது இவர்களுக்கு வினை.

நேரம் செல்லச் செல்ல வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்ததே அன்றி குறைந்த பாடில்லை. மணி 12 ஐக் கடந்ததும் தான் சடாரென வாகனங்களின் வரத்து குறைய ஆரம்பித்தது. அப்போது தான் அவர்களுக்குப் புரிந்தது, செல்லும் வாகனங்கள் அனைத்தும் சென்னைக்கு விடியும் நேரத்தில் சென்று சேரவேண்டும் என்னும் அவசரத்தில் செல்கின்றன. இங்கிருந்து 7 மணி நேரப் பயணம் சென்னைக்கு. எனவே இனி வாகனங்கள் அதிகம் வராது என்று நம்பிக்கை கொண்டனர்! அதுவே அவர்களுக்கு உற்சாகத்தை அளித்தது.

அதே சமயத்தில் சென்னையிலிருந்து கிளம்பும் வண்டிகளும் மதுரை செல்லும் அல்லவா? விடியும் போது மதுரைக்குச் செல்ல வேண்டுமென்றால் அதிகாலை 4 மணிக்குப் பிறகு மீண்டும் இதே அளவு வாகன எண்ணிக்கை அதிகரித்து விடும் என்பதையும் நந்தன் சொல்ல ரமேஷ் ஆமோதித்தான். எனவே அவர்களுக்குக் கிடைத்த நேரம் இரவு 12 மணி மேல் 4 மணிக்குள்.

நேரம் 12.30 ஆனது. அவர்கள் பார்த்த வரை எந்த ஆடம்பரக் காரும், பெண்ணுடன் செல்லவே இல்லை! அப்போது தான் நந்தன் சொன்னான், நாம் போட்ட திட்டமே முட்டாள் தனமானதோ? நிறைய பணம் இருப்பவன், ரயிலிலும், விமானத்திலும் அல்லவா செல்வான். அதுவும் பெண்களைக் கூட்டிக் கொண்டு அதிக பணம் அல்லது நகையோடு இந்த அர்த்த ராத்திரியில் யார் ஆடம்பரக் காரில் செல்லப் போகிறார்கள். அதற்கான வாய்ப்பு மிகக் குறைவாயிற்றே என்று நினைத்துக் கொண்டிருக்கும் போதே அவன் கண்களில் பிரகாசம்.

அதோ தூரத்தில் ஒரு பேருந்து வருகிறது. முன்புறம் ஏதோ கல்லூரி பேனர் எல்லாம் கட்டி இருக்கிறதே! சுற்றுலா செல்கிறார்கள் போலும். நாங்களே இங்கே படித்து வேலையில்லாமல் இருக்கிறோம். இதில் இவர்கள் வேறு படித்து என்னத்தைச் சாதிக்கப் போறாங்களோ? இவங்க பெற்றோர் சம்பாதித்த பணத்தைச் சூறை போடப் போறாய்ங்க பாரு என்று கொஞ்சம் சத்தமாகவே சொன்னான் நந்தன். உடனே ரமேஷ், ஏண்டா நாம் ஏன் இவ்வளவு காத்திருக்கனும்? இந்தப் பஸ்ஸைக் கொள்ளையடிச்சாப் போதும், எப்படியும் செலவுக்கு அவ்ளோ பசங்களும் கையில காசு வச்சிருப்பாய்ங்க. அதுவே எப்படியும் ஆளுக்கு 1000 வைத்தாலும் 50000 தேரும்டா. இது போக நகை போட்டிருந்தா அதெல்லாம் போனஸ் தான் என்று கடகடவெனப் பேசி விட்டு, ஆனா ஒன்னு இதத் தான் நாம கொள்ளையடிக்கப் போறோம். ஆட்கள் ரொம்ப இருப்பாங்க. ஆனாலும் சின்னப் பசங்க தான. கத்தியக் காமிச்சா பதறிருவாய்ங்க. நான் டிரைவர் பக்கம் நிக்கிறேன், நீ எல்லாத்துகிட்டயும் அள்றத அள்ளு, சரியா என்று சொல்லிக் கொண்டிருக்கும் போதே பஸ் திருப்பத்தை நெருங்கியது. அது ஒரு அதிகம் வளைந்த திருப்பம் என்பதால் பேருந்து கிட்டத்தட்ட நிற்கும் நிலைக்கு வந்தது. அது தான் சமயம் என்று நந்தன் குறுக்கே பாய்ந்தான்!

ரமேஷ் பஸ்ஸின் கதவைத் திறக்குமாறும் பக்கத்து ஊரில் இறங்கிக் கொள்வதாகவும் செல்வத்திடம் கேட்டான். பார்ப்பதற்கு அப்பாவிகளாய்த் தெரிந்ததால் ஓட்டுநரைச் செல்வம் பார்க்க, அவரும் ஜாலியான மூடில் இருந்ததால் ஏத்திக் கிடுவோம் பசங்கள. ஏறுங்கப்பா என்று

சொல்ல, செல்வம் வந்து பஸ்ஸின் கதவைத் திறந்து விட்டான்!

மீண்டும் பஸ் கிளம்பியது. ரமேஷ் திட்டப்படி ஓட்டுநரை நோக்கி நகர, நந்தன் பைக்குள் இருந்த கத்தியின் பிடியை இறுக்கிக் கொண்டு மெல்ல வெளியே எடுக்க ஆரம்பித்தான்.

பாகம் - 19

ரமேஷ் தன்னிடம் உள்ள கத்தியை ஓட்டுநரின் கழுத்தில் அழுத்தி வைத்ததும் தான் அவருக்கே விபரீதம் புரிந்தது. யோவ் நான் சொல்ற வரைக்கும் வண்டிய எங்கயாவது நிறுத்தின, அப்புறம் உன் உசிரு உங்கிட்ட இருக்காது பாத்துக்கோ என்று சொல்லிவிட்டு, கொஞ்சம் மெதுவாவே போகணும் என்ன? வேகத்தைக் குறை கொஞ்சம் என்று அதட்டினான். வேகம் மட்டுப் படுவதைக் கண்டதும், நந்தன் நிம்மதியுடன், ரமேஷ் வேலை செய்ய ஆரம்பித்து விட்டான். இனி நம் வேலையை ஆரம்பிக்க வேண்டியது தான் என்று எண்ணிக் கொண்டான்.

மணி 12.45 ஆகி விட்டதால், எல்லோரும் தூங்கிக் கொண்டிருந்தனர் அமைதியாக. அவர்களுக்கு வண்டி நின்றதோ இவர்கள் இருவரும் ஏறியதோ தெரியாது! முதன் முதலாக உட்கார்ந்திருந்த கலைச்செல்வி தான் நந்தனின் கண்களுக்கு முதலில் தென்பட்டாள். அவள் கழுத்தில் தான் நந்தன் தனது கத்தியை அழுத்தினான்! திடுக்கென விழித்த கலைச்செல்விக்கு முதலில் எதுவுமே புரியவில்லை.

வெகு அருகில் ஒருவன் தன் கழுத்தில் கத்தியை வைத்து அழுத்தியிருப்பதைக் கண்டதும் கூச்சலிட முனைந்தாள். இதை எதிர்பார்த்திருந்த நந்தன், சட்டென தன் கையைக் கொண்டு அவள் வாயைப் பொத்தினான். அவளுக்கு மிக அருகில் குனிந்து அவள் காதில் விழும் வண்ணம், சத்தம் கித்தம் போட்ட, அப்புறம் உன்னைப் பாடையில தான் சுமந்துக்கிட்டு போகணும். ஒழுங்கு மரியாதையா உங்கிட்ட இருக்கிற பணம், நகை எல்லாத்தையும் எடு முதல்ல என்று கத்தியை அழுத்திய வண்ணம் சொன்னான்.

கலைச்செல்விக்குத் தலையைச் சுற்றியது! உமாவை எழுப்பலாம் என்று நினைத்தாள். ஆனால் அது நடக்குமா என்று தெரியவில்லை. ஆனால், அப்போது தான் அவள் அன்னை நினைவாக தன் கழுத்தில் இருக்கும் சங்கிலி ஞாபகம் வந்தது! அய்யோ! இதைப் பறித்து விடுவான் போலிருக்கிறதே என்று பயத்தில், என்னிடம் இருப்பதே இந்த ஒரு சங்கிலி தான் என்னை விட்டு விடு என்று கண்களில் நீருடன் அழ ஆரம்பித்தாள். இவள் காரியத்தையே கெடுத்து விடுவாள் போல இருக்கிறதே, இப்படியே போனால் இத்தனை ஆட்களிடமும் நாம் எப்படி பணத்தைப் பிடுங்க முடியும் என்று நினைத்த நந்தன், வாழ்நாளிலேயே தான் இதுவரை கொண்டிராத கோபத்தைக் காட்டினான் கலைச்செல்வி மேல். இப்போ தரப்போறியா இல்லை கொன்னுட்டுத் தான் எடுக்கணும்னா அதையும் செய்யத் தயார் என்னும் போதே, உமா விழித்துக் கொண்டாள். ஏதோ விபரீதம் நடக்கிறது என்பதைப் புரிந்து கொண்டாள். கத்தினால் தன் தோழிக்கு என்ன ஆகுமோ என்று அவளும் பயந்து விட்டாள்.

இந்த நகையைக் கேட்காதே, இது மட்டும் தான் என்னிடம் இருக்கிறது என்று அழுதுவிட்டாள் கலைச்செல்வி. கொடுத்துடேண்டி கலை என்று உமாவும் வற்புறுத்த, அவளோ ஆவேசம் வந்தவளாய் என்னைக் கொன்னுட்டு அந்த நகையை எடுத்துக்கோ என்று சவால் விட்டு விட்டாள். அதற்கு மேல் நந்தனுக்குப் பொறுமை இல்லை. இனிமேலும் நாம் சும்மா இருந்தால் நடப்பது நமக்குச் சாதகமாக இருக்காது என்று எண்ணியவாறே மீண்டும் கத்தியை கலைச்செல்வியின் கழுத்தில் அழுத்தினான்.

எந்தத் தவறை இருவரும் செய்யவே கூடாது என்று நினைத்தார்களோ அதையே செய்யத் துணிந்தான். ஆம். கலைச்செல்வியின் அழகிய கழுத்திலிருந்து இரத்தம் வரத் துவங்கியது. வலியின் காரணமாய் அவள் கூச்சலிட, கீழே கொஞ்சம் குனிந்து என்ன நடக்கின்றது என்று ரமேஷ் நந்தனைப் பார்க்க, அவன் கலையின் கழுத்தில் இரத்தம் வருமாறு வெட்ட ஆரம்பித்து

விட்டதை உணர்ந்த ரமேஷ், டேய் என்ன காரியம் செய்றடா என்று கேட்க, ஓட்டுநர் அது தான் சமயம் என்று பிரேக்கைப் பிடிக்க, செல்வம் ரமேஷ் மேல் பாய்ந்து அவனைப் பிடிக்க, அவன் கையிலிருந்த கத்தி ரமேஷ் தோளிலும், செல்வம் தோளிலுமாக எசகு பிசகாகக் குத்தி ரத்தம் பெருக்கெடுத்து ஓட, மற்ற விழித்துக் கொண்ட மாணவ மாணவிகள் அனைவரும் சேர்ந்து கலைச்செல்வியைக் காப்பாற்ற நந்தன் மேல் விழ இவையனைத்தும் ஒரே கணத்தில் நிகழ்ந்தது. அங்கே ஒரு யுத்தம் ஆரம்பமாயிருந்தது.

பாகம் - 20

பேருந்து நடுவழியிலேயே நிறுத்தப்பட்டது. ரமேஷும் நந்தனும் அவர்கள் வாழ்நாளிலேயே வாங்கியிராத அடியையும், அவமானமும் பெற்றனர். மாணவிகள் பலர் செருப்பால் அடித்தனர். மாணவர்களைச் சொல்லவே வேண்டியதில்லை. அவர்களை அடிக்காதவர்கள் சில பேர் மட்டுமே. அவர்கள் செல்வம், உமா, கலைச்செல்வி, வெங்கடாச்சாரி, வர்ஷினி. மற்றவர்கள் எல்லாம் தர்ம அடி கொடுத்தனர்.

செல்வம் அவனது கைகளில் வழிந்து கொண்டிருந்த ரத்தத்தை தன் கைக்குட்டையை நீரில் நனைத்து அங்கே கட்டுப் போட்டுக் கொண்டிருந்தான். உமாவும் வர்ஷினியும் கலைச்செல்விக்கு முதலுதவி அளித்துக் கொண்டிருந்தனர். வெங்கடாச்சாரி ஏதும் செய்ய இயலாமல் மாணவர்களை ஒதுக்கி விட்டுக் கொண்டிருந்தார்.

சிறிது நேரம் கழிந்ததும், அனைவருக்கும் ஆத்திரம் தீர்ந்தது. குற்றவாளிகள் இருவரும் சட்டைகள் கிழிந்த நிலையில் அலங்கோலமாகக் கிடந்தனர். ஓட்டுநர் மாணவிகள் இருவரிடம் துப்பட்டாவை வாங்கி அதனால் ரமேஷ் நந்தன் இருவரின் கைகளை பின்புறமாகக் கட்டி பேருந்தின் இரு தூண்களில் கட்டி வைத்தார். பேருந்து நடுக்காட்டில் நின்று கொண்டிருந்ததால் திருச்சி சென்று பார்த்துக் கொள்வோம் என்று பேருந்தைக் கிளப்பினார்கள்.

பேருந்து சிறிது நேரம் சென்றதும் தான் செல்வம் அவர்கள் இருவரையும் கவனித்தான். ரமேஷ் நந்தன் இருவருமே தலை குனிந்த வண்ணம் இருந்தனர். இருவரிடமும் எந்த சலனமும் இல்லை. இருவர் கண்களிலும் வழிந்தோடிய கண்ணீரைப் பார்த்ததும் தான் செல்வத்துக்கு வித்தியாசமாய் உணர்ந்தான். இவர்கள் இந்தத் தொழிலுக்குப் பழக்கமில்லாத ஆட்களாய் இருக்கிறார்களே. முகத்தில் கவலை தென்படுகிறதே! அதில் பணம் கிடைக்கவில்லையே என்பதை விட, அவமானத்தில் தான் கூனிக் குருகுவதாகத் தெரிகிறதே என்று நினைத்தான்.

அவனுக்கு ஒரு ஐந்து நிமிடம் தான் தேவைப்பட்டது. பின் விருட்டென தனது சீட்டில் இருந்து எழுந்து பேருந்தை நிறுத்தும் படி ஓட்டுநரிடம் சொன்னான். மெல்ல பேருந்துக்குள் சென்றான். கிட்டத்தட்ட பேருந்துக்கு நடுவில் நின்று கொண்டான். தெளிந்த குரலில் பேச ஆரம்பித்தான்.

நண்பர்களே, நமக்கு நிகழ்ந்த இந்த துரதிருஷ்டமான நிலை வருந்தத் தக்கது தான். இவர்களை நாம் என்ன செய்யலாம் என்று முதலில் முடிவு செய்து கொள்ள வேண்டும். இவர்களை என்ன செய்யலாம்? என்று பொத்தாம் பொதுவாகக் கேட்டான். அனைவருமே வண்டி நேராக பக்கத்தில் இருக்கும் போலீசுக்குச் செல்ல வேண்டும் என்றும், இவர்களை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் ஆவேசமாகப் பதிலளித்தனர்.

செல்வம் உடனே, இதில் பல நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன நண்பர்களே. நீங்கள் நினைப்பது போல் அவ்வளவு எளிதல்ல. பக்கத்தில் உள்ள காவல் நிலையத்தில் நீங்கள் உடனே உங்கள் கம்ப்ளைண்டை பதிவு செய்ய முடியாது. குறைந்தது 4 மணி நேரமாவது ஆகும். அது வரை அனைவரும் காத்திருக்க வேண்டும். அது போக கலைச்செல்வி தான் புகார் கொடுக்க முடியும். யார் புகார் கொடுக்கிறார்களோ அவர்கள் இந்த வழக்கு விசாரணை முடிந்து நீதிமன்றத்தில் தீர்ப்பு வழங்கும் வரை அடிக்கடி இங்கு வர வேண்டியிருக்கும். அது ஒரு 4 ஆண்டுகள் கூட ஆகலாம். அதனால் நடப்பது என்ன? நமக்குத் தான் வீண் அலைச்சல்.

இன்னொன்றும் சொல்கிறேன் கேளுங்கள். இவர்கள் இருவரும் ஒன்று பழக்கமான

கொள்ளையர்களாக இருக்க வேண்டும், அல்லது இப்போது தான் திருட வந்தவர்களாக இருக்க வேண்டும். இவர்கள் வயது, பாவனைகளைப் பார்த்தால் இப்போது தான் திருட ஆரம்பித்தவர்கள் போல் இருக்கிறார்கள். பழக்கப்பட்டவர்கள் என்றால் ஏற்கனவே காவல் துறைக்குத் தெரிந்தவர்களாகத் தான் இருப்பார்கள். அவர்களுக்கு அங்கே செல்வதில் கவலையோ பயமோ கிடையாது. ஆனால் இப்போது தான் முதன் முதலாகப் புதிதாகத் திருடுபவர்களை நாம் காவல்துறையில் ஒப்படைத்தால் அதனால் இவர்கள் திருந்தும் வாய்ப்புக் கொடுக்கப்படும் என்று நினைக்கிறீர்களா? இல்லை. இவர்கள் ஒரு பெரும் குற்றவாளிகளாக மாற வேண்டுமானால் சந்தர்ப்பம் இருக்கிறது. இவர்களை உள்ளே விட்டதில் எனக்குத் தான் மிகுந்த பங்குண்டு. அதற்கான தண்டனையையும் இவர்களே எனக்குக் கொடுத்து விட்டார்கள்.

நாம் எதை இழந்து விட்டோம்? ஒன்றும் இழக்கவில்லை. அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்டனையையும் நாம் நிறைவேற்றி விட்டோம். எனக்கென்னவோ இவர்களை மன்னிக்கலாம் என்றே தோன்றுகிறது. மேலும் அப்படியே நாம் இவர்களைக் காவல் நிலையத்தில் ஒப்படைக்கலாம் என்றால் கூட இங்கே ஒப்படைக்க வேண்டாம். சென்னை சென்று விடுவோம். நாம் விடுதிக்குச் சென்று அனைவரும் கிளம்புவதற்குள் ஒரு நான்கு பேர் மட்டும் காவல் துறைக்குச் சென்று கம்ப்ளைண்ட் செய்யலாம். நம் டூர் புரோகிராமும் பாதிக்காது. எனவெ சென்னை செல்லும் வரை பொறுப்போமே?

சென்னை சொல்லும் வரை பொறுக்கலாம் என்று நினைப்பவர்கள் கையைத் தூக்குங்கள் என்றான்.

இவன் இவ்வளவும் பேசுவதற்குள் அனைவருமே அவன் பேசுவதையும் ரமேஷ் நந்தன் இருவரையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டார்கள். எல்லோருக்கும் அவர்கள் மேல் இப்போது கொஞ்சம் அனுதாபம் வந்திருந்தது. அனைவரும் மௌனமாகவே இருந்தனர். என்ன முடிவு எடுப்பது என்பதில் அனைவருக்கும் தடுமாற்றம் இருந்தது. வர்ஷினி தான் எழுந்து, செல்வம் சொல்வதில் உண்மை இருக்கிறது. நாம் கொஞ்சம் பொறுமையாகச் செயல்படுவதே நல்லது என்று சொல்லிவிட்டு உமா நீ தான் இந்த டூர் புரோகிராம் தலைவி, நீ என்ன நினைக்கிறாய் என்று கேட்டார்.

உமா கலைச்செல்வியை ஒரு முறை பாவத்துடன் பார்த்தாள், செல்வத்தை முறைத்துக் கொண்டே பேச ஆரம்பித்தாள்.

பாகம் - 21

உமாவைப் பொருத்தவரை ஆரம்பம் முதல் நடந்தது எதுவுமே பிடிக்கவில்லை. பேருந்து தாமதமாக வந்ததிலிருந்தே அவள் அப்செட்டாகி இருந்தாள். ரமேஷுக்கும் நந்தனுக்கும் பேருந்து கதவைத் திறந்து விட்டது செல்வம் என்றதும் அவளுக்கு கோபம் அதிகமாகியது! கலைச்செல்விக்கு இப்படி ஆனதும் அவளுக்கு ஒரு கவலை.

எல்லாவற்றையும் மனதில் வைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தாள்.

எனக்கு இங்கு நடந்தது எதுவுமே சரியாத் தோணல. எங்கப்பாவுக்குத் தெரிந்த பல பெரிய போலீஸ் அதிகாரிகள் இருக்காங்க. அதனால இவன் சொல்ற மாதிரி காவல் நிலையத்தில் எந்தப் பிரச்னையும் ஆகாம பாக்க முடியும். இருந்தாலும் கலைக்கு எந்த நோவும் இதனால் வராமப் பார்த்துக்கணும். ஏற்கனவே அவள் நொந்து போயிருக்கா.

தப்பு செஞ்சவங்க அதற்குண்டான தகுந்த தண்டனையை அனுபவிக்கணும்னு தான் நான் நினைக்கிறேன். இருந்தாலும் இதனால நம்ம சுற்றுலாவுக்கு எந்த ஒரு தடையும் வரக்கூடாது. அதுக்காகத் தான் சென்னை வரை பொறுக்கலாம்னு நானும் நினைக்கிறேன், என்று கடைசியாக செல்வம் சொன்ன யோசனையை அவளும் ஏற்றுக் கொண்டது வர்ஷினிக்கும், ஏன் செல்வத்துக்குமே ஆச்சரியமாகத் தான் இருந்தது.

உமா பேச்சை யாருமே எதிர்த்துப் பேசவில்லை. மௌனம் சம்மதம் என்று எண்ணிக் கொண்டு, ஓட்டுநரிடம் சென்று பேருந்தை நேராகச் சென்னை கொண்டு செல்லுமாறு சொன்னான் செல்வம்.

எந்தக் கலைச்செல்வியின் கழுத்தில் ரத்தம் வருமாறு காயம் ஏற்படுத்தினானோ அதே கலைச் செல்வியின் காலடியிலேயே கைகள் கட்டப்பட்ட நிலையில் இருந்தான் நந்தன். அவன் மனமெல்லாம் ரணமாகி இருந்தது. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு என்பது சரியாகி விட்டதே. நாம் என்ன படித்து என்ன? இப்படித் தரம் தாழ்ந்து போனோமே, சே! நாளை நமது புகைப்படத்துடன் இந்தச் செய்தி பத்திரிகையில் வந்தால் நம் ஆசிரமத்தின் பெயர் என்னாவது? நாம் செய்தது மாபெரும் முட்டாள்தனம். நல்ல வேளை நாம் தவறு செய்யாமல் கடவுள் காப்பாற்றி விட்டான். பாவம் அந்தப் பெண். அவளுக்கு ரத்தக் காயம் நம் கையாலேயே ஏற்படக் காரணமாகி விட்டோமே. அதற்கே என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டியது தான். அதே சமயம் இந்தப் பையன் எவ்வளவு அறிவு பூர்வமாக அலசி ஆராய்கிறான் என்றும் நினைத்துக் கொண்டான்.

ரமேஷின் நிலையோ மிகவும் மோசமாகி இருந்தது. அவன் கையிலும் ரத்தம் வடிந்தோடிக் கொண்டிருந்தது. அதைக் கூட அவனால் கவனிக்க இயலவில்லை. அவன் கனவெல்லாம் புதைக்கப்பட்டதே அது தான் அவனுக்கு மிகுந்த மனவருத்தம். அவனும் நாம் செல்லவிருந்த பாதை தவறானது என்பதைப் புரிந்திருந்தான். நான் திருந்தி விட்டேன் என்று கத்த வேண்டும் போல் இருந்தது. ஆனால், காரியம் கை மிஞ்சி விட்டதே. சரி நடப்பது நடக்கட்டும் என்ற நிலைக்கு வந்திருந்தான்.

கலைச்செல்விக்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது. அவள் அன்னையின் சங்கிலி அவளை விட்டுச் செல்லவில்லை அல்லவா? அதனால் அவளுக்கு ஏற்பட்ட காயத்தினாலான வலி கூட அவளுக்குத் தெரியவில்லை. நந்தனை அவள் ஏறிட்டும் பார்க்கவில்லை. அவளுக்கு நிகழ்நத

அவமானத்தையும் தாங்க முடியவில்லை. ஒரு அந்நிய ஆடவன் கழுத்தில் கை வைத்து விட்டானே என்று தான் வருத்தமடைந்தாள். அவன் தன் காலடியிலேயே கிடப்பதை நினைத்து ஆண்டவன் தகுந்த தண்டனை நிறைவேற்றிவிட்டான் என்று எண்ணிக் கொண்டாள். செல்வம் 4 ஆண்டுகள் நீதிமன்றம் செல்ல வேண்டும் என்று சொன்னதிலிருந்து அவள் நாம் எக்காரணத்தைக் கொண்டும் உமா சொன்னாலும் புகாரில் கையொப்பமிடக் கூடாது என்று நினைத்துக் கொண்டாள்.

இருவரையும் மௌனமாக ஆனால் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த செல்வம், மெல்ல ரமேஷ் மற்றும் நந்தன் இருவருக்கும் நடுவில் தரையில் வந்து அமர்ந்தான்.

பாகம் - 22

ரமேஷிடம் தான் முதலில் பேச்சுக் கொடுத்துப் பார்த்தான் மெதுவாக. ஆனால் அவன் கொஞ்சமும் பேசத் தயாராக இல்லை. எனவே கையில் கொண்டு வந்திருந்த இன்னொரு ஈரக் கைக்குட்டை கொண்டு அவன் கையிலும் காயம் வந்த இடத்தில் கட்டுப் போட்டான் செல்வம். அதற்கும் ரமேஷ் மறுப்பேதும் சொல்லவில்லை. மரக்கட்டையாய் மாறி இருந்தான்.

சரி இவனிடம் பேசிப் பயனில்லை என்று உணர்ந்து கொண்ட செல்வம், நந்தன் அருகில் வந்தான். உன் பெயர் என்ன என்று தான் கேட்டான். சோகத்துடன் செல்வத்தைக் கண்ணீருடன் ஏறெடுத்துப் பார்த்த நந்தன் வெகு நேரம் கழித்து நந்தன் என்று பெயரைச் சொன்னான். எந்த ஊரு என்று கேட்டான் அடுத்ததாக. தஞ்சாவூர் என்று மட்டும் சொன்னான் நந்தன்.

என்ன படிச்சிருக்கே? என்று கேட்டான். பி. எஸ். சி. என்று தலையைக் குனிந்து கொண்டே சொன்னான் நந்தன். பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் கதையனைத்தையும் தெரிந்து கொண்டான் செல்வம். அவனுக்கே மிகவும் பாவமாக இருந்தது. எப்பாடு பட்டாயினும் இவர்கள் இருவரையும் காவல்துறையிடம் ஒப்படைக்க விடக்கூடாது என்று முடிவெடுத்துக் கொண்டான்.

பின் மெதுவான குரலில், இங்கே பாருங்க, எனக்கும் உங்களைக் காவல் நிலையத்தில் ஒப்படைப்பதில் விருப்பமில்லை. நீங்க சொல்வதில் எத்தனை சதவீதம் உண்மை இருக்கிறதோ தெரியவில்லை. இருந்தும் உங்களை அப்படியே நான் நம்புகிறேன். வண்டி சென்னை வந்து சேர்ந்ததும் நேராக விடுதிக்குத் தான் செல்லும். அனைவரும் கீழே இறங்குவார்கள். அப்போது உங்கள் கைகளின் கட்டுகளை நான் அவிழ்த்து விடுகிறேன். உங்க அருகில் ஒரு சிறு பை ஒன்றையும் வைப்பேன். அதில் என்னுடைய சட்டைகள் இரண்டும், என் விலாசமும், வழிச்செலவுக்குப் பணமும் இருக்கும். அதை எடுத்துக் கொண்டு சென்று விடுங்கள்.

உங்களை ஏதேனும் வேலைக்குச் சேர்ப்பது என் பொறுப்பு. வேலை செய்து சம்பாதிக்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தால் என் விலாசம் உங்களுக்கு உதவும். அங்கே என் அம்மா இருப்பார்கள். என் பெயரான செல்வம் அனுப்பினேன் என்று சொன்னால் போதும். கவலை வேண்டாம். அப்படித் தேவையில்லை நாங்கள் வேறு வேலை பார்த்துக் கொள்வோம் என்றாலும் என் விலாசம் உங்களுக்குத் தேவையில்லை கிழித்துப் போட்டு விடுங்கள். ஆனால், மீண்டும் கொள்ளையடிக்க நினைத்தீர்களேயானால், மீண்டும் ஒரு செல்வம் உங்களுக்குக் கிடைக்க மாட்டான், என்று சொல்லிவிட்டு அவன் இடத்திற்குச் சென்று விட்டான்.

மறுநாள் காலை சென்னைக்கு வண்டி 10 மணிக்குத் தான் சென்று சேர்ந்தது. அனைவரும் சுற்றுலா மூடுக்கு வந்திருந்தனர். செல்வம் சொன்னது போலவே ஒரு பையில் சுற்றுலாவுக்குக் கொண்டு சென்ற சட்டைகள் இரண்டையும், கொண்டு வந்த பணமான 500 ல் 400 ரூபாயையும், அவன் விலாசத்தை ஒரு தாளிலும் எழுதி வைத்து விட்டு அவர்கள் கட்டைத் தளர்த்தி விட்டு ஓட்டுநருடன் வெளியே கதைத்துக் கொண்டிருந்தான்.

இருவரும் வெளியேறிச் சென்ற பின் இவனும் நிம்மதியுடன் விடுதிக்குள் சென்றான்.

பாகம் - 23

ரமேஷ் நந்தன் இருவருக்கும் தப்பி வந்ததில் ஒரு சந்தோசம் தான். கிழிந்த சட்டையைத் தூக்கி எறிந்து விட்டு செல்வம் கொடுத்த சட்டையைப் போட்டுக் கொண்டனர். ரமேஷுக்கு மட்டும் கொஞ்சம் டைட்டாக இருந்தது சட்டை. கையில் வெறும் 400 ரூபாயுடனும், செல்வத்தின் விலாசத்துடனும் சென்னை சாலையில் நடந்து சென்றனர் இருவரும். அவர்களின் சர்டிபிகேட்டுகள் எல்லாம் அந்த திருச்சி சாலையில் அவர்களைப் போலவே அனாதையாய்க் கிடந்தது. இனி அதை எவ்வாறு எடுக்க இயலும்? இனி எந்த வேலைக்குப் போவது? மீண்டும் திருடுவது என்ற எண்ணமே அவர்களுக்கு வரவில்லை.

தற்கொலை செய்து கொண்டால் என்ன என்று கூட நினைத்தார்கள். ஆனால், அவர்களை ஆசிரமம் அவ்வாறு வளர்க்கவில்லை. வாழ்க்கையின் அடிமட்டம் வரை சென்று விட்டோம். மீண்டும் போராடிப் பார்ப்பது என்ற முடிவுக்கு வந்தார்கள்.

செல்வத்தின் விலாசமே தங்கள் எதிர்கால வாழ்க்கைக்குத் திறவுகோல் என்று புரிந்து கொண்டனர். விலாசத்தைப் பார்த்தனர். ஊர் தேனி என்றிருந்தது. மதுரைக்கு ஒரு பேருந்து கிளம்பிக் கொண்டிருந்தது. காலை 11 மணியளவில் மதுரை பேருந்தில் ஏறினர். பேருந்து சீட்டுக்கே 300 ரூபாய் ஆகி விட்டது. இன்னும் 100 ரூபாய் தான் இருந்தது. தேனி செல்வதற்கே அது சரியாய்ப் போய்விடும்.

இருவரும் முந்தைய நாள் இரவு 8 மணிக்குச் சாப்பிட்டது. பசி வயிற்றைக் கிள்ளியது. என்ன செய்ய? ஒரு நாள் சாப்பிடாமல் இருந்தால் ஒன்றும் செத்து விட மாட்டோம் என்று எண்ணிக் கொண்டனர். வாழைப்பழம் மட்டும் வாங்கிக் கொண்டு தண்ணீர் மட்டும் குடித்துக் கொண்டனர். அன்று பகல் முழுதும் வண்டி ஓடியது. வண்டி திருச்சி தாண்டி மதுரை நோக்கிச் செல்கையில் நந்தனுக்குத் தன்னையுமறியாமல் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இரவு 10 மணிக்குத் தான் மதுரை வந்து சேர்ந்தனர்.

தேனிக்குக் கடைசிப் பேருந்து கிளம்பிக் கொண்டிருந்தது. ஓடிச் சென்று அதில் ஏறிக் கொண்டனர். 12 மணியளவில் தேனி சென்று சேர்ந்தனர். ராஜாத்தி அம்மாளை இந்த நேரத்தில் போய் தொந்தரவு செய்வதா? என்று எண்ணினார்கள் முதலில். இருந்தாலும் வேறு வழியில்லை. எனவே விலாசத்தைத் தேட ஆரம்பித்தனர்.

அவர்கள் விலாசத்தை ரொம்ப நேரம் தேடவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. இதோ, செல்வத்தின் வீடு. செல்வம் தானே வேலைக்கு அவர்களைச் சேர்த்து விடுவதாகக் கூறியவுடன் ஏதோ செல்வம் பெரிய ஆள் போல என்று நினைத்துக் கொண்டிருந்தனர். ஆனால், அங்கே சென்றவுடன் தான் தெரிந்தது செல்வத்தின் வீடும் இவர்கள் முன்பிருந்த வீடு போல் தான் என்று!

தயங்கித் தயங்கி கதவைத் தட்டினர். இந்த நேரத்தில் யார் கதவைத் தட்டுகிறார்கள் என்ற ஆச்சரியத்துடன் ராஜாத்தி அம்மாள் கதவைத் திறந்தார். இரு இளைஞர்களை வாடிப் போன முகத்துடன் கண்டார். என்ன விஷயம் என்றார். செல்வம் அனுப்பி வைத்ததாகச் சொன்னதும் அவர்களை முதலில் உள்ளே வாங்கப்பா என்று அழைத்தார். முதலில் இவர்கள் இருவரும் செல்வத்துடன் படிப்பவர்கள் என்றே நினைத்தார்.

நந்தன் தான் இங்கும் பேசினான். தாங்கள் கொள்ளையடிக்க முயற்சி செய்த விபரத்தைக்

கூறவில்லை. தாங்கள் செல்வத்தைச் சென்னையில் சந்தித்ததாகவும், வேலை விஷயமாகப் பேசியதாகவும் அவன் தான் விலாசத்தைக் கொடுத்து இங்கே அனுப்பி வைத்ததாகவும் சொன்னான். விலாசத்தாளைப் பார்த்ததும் தன் மகனின் கையெழுத்து தான் என்று புரிந்து கொண்டார். இன்னொன்றையும் அவர் கவனிக்கத் தவறவில்லை. அவர்கள் போட்டிருந்தது செல்வத்தின் சட்டைகள் என்பது பெற்ற அன்னைக்குத் தெரியாமல் இருக்குமா? சரி, செல்வம் தான் ஏதோ காரணத்துக்காக இவர்களை இங்கே அனுப்பி வைத்திருக்கிறான் என்று எண்ணிக் கொண்டு, அவன் வர இன்னும் இரண்டு நாட்கள் ஆகுமே. சரி பரவாயில்லை. மேலே மொட்டைமாடியில் படுத்துக் கொள்ளுங்கள். அவன் வரட்டும் பேசிக் கொள்வோம் என்று பேசிக் கொண்டே ஏதோ ஞாபகம் வந்தவராக, ஆமா சாப்டீங்களா என்று கேட்டார்.

இருவரும் பதிலேதும் சொல்லவில்லை. என்ன பசங்களோ என்று முணுமுணுத்துக் கொண்டே, இங்கே கொஞ்சம் பழைய சோறு இருக்கு, பசியில வந்தவங்க போல இருக்கு சாப்டு படுங்க. சரியா? என்று சொன்னதுடன் நிற்காமல், இரண்டு தட்டுகளில் பழைய சோறைப் பரிமாறினார்.

ஒரு நாள் முழுதும் சாப்பிடாதவர்களுக்கு அது தேவாமிர்தமாய் இருந்தது. அது மட்டுமல்ல, அதில் ஒரு அம்மாவின் பாசமும் கலந்திருந்ததல்லவா?

பாகம் - 24

அங்கே இருந்ததே ஒரு வேளைக்கு ஒரு ஆளுக்கான பழைய சோறு. அதையே இருவரும் உண்டனர். இவர்கள் உண்டதைப் பார்த்த ராஜாத்தி அம்மாள், சாப்பிட்டு ஒரு வாரம் ஆகியிருக்கும் போல என்று எண்ணிக் கொண்டார். சாப்பிட்டு வந்ததும் பாய், தலையணை எடுத்துக் கொடுத்தார். மொட்டைமாடிக்கு படியெல்லாம் கிடையாது! திடகாத்திரமா தானே இருக்கீங்க, அந்த சின்ன ஏணி தான். அது வழியா தான் ஏறணும். பாத்து ஏறுங்க. என்று சொல்லிவிட்டு இவர்களை வெளியேறச் சொல்லி கதவைப் பூட்டி விளக்கை அணைத்து விட்டு தூங்கச் சென்று விட்டார்.

இருவரும் ஏணி வழியே மேலே ஏறி மொட்டைமாடிக்குச் சென்றனர். அப்படியே விரித்து மல்லாந்து படுத்தனர். அவர்கள் வாழ்வில் ஒரு நாளில், ஒரே நாளில் சம்பவங்கள் அவர்களை எங்கெங்கோ, எந்தெந்த நிலைக்கோ இழுத்துச் சென்றதை அசை போட்டுப் பார்த்தபடியே தூங்கிப் போயினர். விதியென்னும் நூலில் விளையாடும் பொம்மைகளாய் இருந்த அவர்களை எழுப்ப சூரியன் காத்திருந்தான்.

மறுநாள் காலை மணி 8. சுள்ளென்று அடித்த வெயில் அவர்களை எழுப்பியது. மெல்ல எழுந்தார்கள். பாயைச் சுருட்டி விட்டு மீண்டும் கீழே இறங்கினார்கள். நல்லா தூங்குனீங்களா? என்று கேட்ட ராஜாத்தி அம்மாள், போய்க் குளிச்சுட்டு வாங்க, சாப்பிட்டுகிட்டே பேசலாம் என்று சொல்லிவிட்டு, நீங்க டிரஸ் எதுவும் எடுத்து வந்த மாதிரி தெரியலியே, இதுல செல்வத்தோட கைலியும் சட்டையும் வச்சிருக்கேன் எடுத்துக்கங்க, என்று சொன்னாள். இருவருக்கும் ஆச்சரியமான ஆச்சரியம். நம்மை நம்பி எப்படி இதெல்லாம் தர்றாங்க என்று?

குளித்து முடித்து வந்ததும் சாப்பிட உட்கார்ந்தனர். காலையிலேயே தும்பைப் பூ போல் சாதம் வடித்திருந்தார் ராஜாத்தி அம்மாள். ஒரு நாளைக்குத் தேவையான சாதத்தை ஒரே வேளையில் ஆக்கி விடுவது அவர் வழக்கம். எரிபொருள் மிச்சப்படுமே. இவர்கள் இருவரும் சாப்பிட்டதும், வட்டிலைக் கழுவிவிட்டு அவரும் சாப்பிட்டு முடித்தார். முடித்து விட்டு பராக்குப் பார்த்து உட்கார்ந்து கொண்டிருக்கும் இருவரையும் பார்த்து, சொல்லுங்க, செல்வத்தை எப்படித் தெரியும் என்று முதல் கேள்வியைக் கேட்டார்!

ரமேஷ் நந்தனைப் பார்த்தான், நந்தன் ரமேஷைப் பார்த்தான். யாராவது ஒருத்தர் சொல்லுங்க என்றார் ராஜாத்தி அம்மாள். ரமேஷ் நந்தனைப் பார்த்து நீயே சொல்லு என்று கண்களாலேயே சொன்னான். அதில் உண்மை அனைத்தையும் சொல்லிவிடு என்ற பொருளும் இருந்தது. நந்தன் சிறிது நேரம் பொறுமையாக இருந்தான். பின் மெதுவாக தங்கள் ஆசிரம வாழ்க்கையிலிருந்து ஆரம்பித்தான். இவர்கள் கதையைச் சொல்ல ஆரம்பித்தவன், தஞ்சாவூரில் வேலை பறி போனது வரை மெதுவாகச் சொன்னான். சொல்வதற்குள் பல முறை உணர்ச்சிவசப் பட்டான். அதை ராஜாத்தி அம்மாளும் கவனிக்கத் தவறவில்லை. சரிப்பா அப்புறம் எப்போ எங்கே செல்வத்த பார்த்தீங்க என்று மீண்டும் கேட்டார். நந்தன் தயக்கத்துடன், தாங்கள் கொள்ளையடிக்க முடிவு செய்ததில் ஆரம்பித்து, செல்வம் தங்களைக் காப்பாற்றி வழியனுப்பி வைத்தது வரை சொல்லி முடிக்கும் போது மூவர் கண்களிலுமே கண்ணீர் ஓடியது. அம்மா நான் தெரிந்து செல்வத்தின் கையில் கத்தியால் குத்தவில்லை. இருந்தாலும் என்னை மன்னிக்க வேண்டும் என்று காலில் விழுந்தான் ரமேஷ். எல்லாம் விதிவசம் என்று சொன்ன அம்மா, அவன் கையில் காயம் ரொம்பப் பலமா? என்று தான் கேட்டார். இவனளவு தான் அவனுக்கும் என்று நந்தன் சொன்னான். என்ன? உனக்கும் காயமா என்றார் ராஜாத்தி. ஆமாம், பஸ் பிரேக் போட்டதில் கத்தி இருவர் மேலும் பட்டு விட்டது என்றான் நந்தன். சொல்லிவிட்டு சட்டையைக் கழற்றி காயத்தைக்

காட்டச் சொன்னான். கத்தி கொஞ்சம் ஆழமாகத் தான் பட்டிருந்தது. என்னப்பா இது, இவ்வளவு ஆழமா இருக்கு, இன்னும் மருந்தே போடாம வச்சிருக்கீங்களே. இதே அளவு தான் அவனுக்கும் பட்டிருக்கா? அய்யோ, அவன் மருத்துவமனைக்குப் போய் பார்த்திருப்பானா? என்று செல்வத்தைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டே தேங்காய் எண்ணையும் மஞ்சளும் கொண்டு வந்து ரமேஷின் கையில் இருந்த காயத்துக்கு மருந்து போட ஆரம்பித்தார். ரமேஷுக்கு வலியெல்லாம் இல்லை. ஆனால் தன் மகன் கையில் கத்தியால் குத்தியவனுக்கும் சிகிச்சை செய்யும் தாயின் உன்னதத்தை நினைத்தான். தன்னைப் பெற்ற தாயும் இருந்திருந்தால் இதை எனக்குச் செய்வாளே என்று எண்ணினான், அவனால் பீறிட்டு வந்த அழுகையை அடக்க முடியவில்லை.

காயத்துக்குக் கட்டுப் போட்ட பின் ராஜாத்தி அம்மாள் ஆறுதலாக அவர்களுடன் பேச ஆரம்பித்தார்.

பாகம் - 25

உங்க கதயப் போலத் தான் எங்க கதயும் என்று பேச ஆரம்பித்தார் ராஜாத்தி அம்மாள். தான் செல்வச் செழிப்பு மிக்க குடும்பத்தில் பிறந்ததிலிருந்து காதலித்தது, கணவரை இழந்தது, செல்வத்தைப் படிக்க வைத்தது வரை சொன்னவர், கவலைப் படாதீங்க, செல்வத்துக்கு நிறைய ஆட்கள் பழக்கம் உண்டு. எந்த வேலையையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வான். அதனால உங்களுக்குத் தகுந்த வேலை ஏதாவது வாங்கிக் கொடுப்பான். ஆனா, அது வரை கிடச்ச வேலையை முதல்ல ஈடுபாட்டோட செய்யணும். இங்கே மொட்டைக் காரையில் நீங்க படுத்துக்கலாம்ல என்று கேட்டாள்.

இருவரும் ஏம்மா எங்க மேல் உங்களுக்குக் கோவமே வரலியா என்று கேட்டனர். அதற்கு அவர், இதுவரை நாங்க அனுபவிச்சது தான் அதிகம்னு நினைச்சிக்கிட்டிருந்தேன், உங்க கதையக் கேட்டதும், அட, நமக்கு எவ்ளோ சுகத்தைக் கொடுத்து இருக்கான் ஆண்டவன்னு நினைக்கத் தோணுது. நீங்க செஞ்சதுக்கு என் மகனே உங்க மேல கோவப்படலியே. நாம இருக்குறதே கொஞ்ச நாளு இந்த பூமியில. ஏதோ நம்மால முடிஞ்சத இங்கே செஞ்சுட்டுப் போணுமே ஒழிய நாம இங்கிருந்து எதையும் எடுத்துட்டுப் போக முடியாதுப்பா. இதுவர செல்வத்த ஒத்தப் புள்ளயாப் பெத்துட்டோமேன்னு தான் கவலைப்பட்டுக்கிட்டு இருந்தேன். இப்போ தான் நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து மூனு புள்ளங்கப்பா எனக்கு. யார் கேட்டாலும் பயமில்லாமச் சொல்லுங்க, எங்கம்மா பேரு ராஜாத்தி, அப்பா பேரு ராமையான்னு. சரியா என்று சொல்லிவிட்டு, நான் அந்தக் காலத்துலேயே காலேஜ் படிச்சவ. ஒரு ஆங்கிலப் பழமொழி உண்டு. உங்க கஷ்டத்தைப் பகிர்ந்துகிட்டா அது பாதியாகிடும். உங்க சந்தோசத்தைப் பகிர்ந்துகிட்டா அது இரண்டு மடங்காயிரும்னு. அப்படி நம்ம கஷ்டத்த எல்லாம் பகிர்ந்துக் கிட்டோம் இப்போ எல்லாமே பாதியாயிருச்சி. இனி சந்தோசத்தையும் பகிர்ந்துக்கிவோம் இரண்டு மடங்காய் ஆகட்டும்னு ஆண்டவன வேண்டிக்கங்க என்று சொன்னாள்.

ரமேஷுக்கும் நந்தனுக்கும் பேச்சே வரவில்லை. நா தழுதழுத்தது. ஒரு நல்ல ஆசிரமத்தில் வளர்ந்து, நன்றாகப் படித்த நமக்கு ஏன் இந்தக் கொள்ளையடிக்கணும்னு புத்தி போச்சுன்னு நாங்க கூட நினைச்சிக்கிட்டே இருந்தோம்மா, ஆனா இப்படி ஒரு அம்மா கிடைப்பாங்கன்னு தெரிஞ்சா எத்தனை தடவை வேணும்னாலும் தர்ம அடி வாங்கலாம் என்றனர். சரி சரி மதியம் சாம்பார் மட்டும் ரெடி பண்ணனும் என்று எழுந்தார். அம்மா, இனி நானும் உங்களுக்கு சமையல்ல உதவி செய்றேன் என்ற படி நந்தனும் அடுப்பருகே வந்தான். அட! உன் சமையலத் தான் அவன் சாப்பிட்டானா? என்று கேலியாகக் கேட்டுக் கொண்டு, அந்த கத்தரிக்காயை நறுக்கு பாப்போம் என்று வேலையில் மும்முரமாகி விட்டார்.

அந்த இரண்டு நாட்களும், இல்லாத வீடாக இருந்தாலும் அது ஒரு சொர்க்கமாகவே இருந்தது ரமேஷுக்கும் நந்தனுக்கும். மாலையானதும் மதுசூதனன் வேலைபார்த்த கோவிலுக்குச் சென்று ஆண்டவனுக்கு நன்றி சொல்லி வந்தனர். ஆம், அந்தக் குடும்பத்தில் அவர்களும் தூண்களாக மாறிவிட்டனர்.

ரமேஷுக்கும் நந்தனுக்கும் செல்வத்தால் வேலை வாங்கித் தர முடிந்ததா? இவர்கள் தூண்களாக இருந்து சுமை தாங்கினார்களா, அல்லது சுமையானார்களா?

பாகம் - 26

கட்டி வைத்திருந்த இருவரையும் காணவில்லை என்றதும் விடுதியே பரபரப்பானது! உமாவுக்கு வந்த கோபம் எல்லை மீறியது. கலைச்செல்வி கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டாள். அவள் புகாரில் கையொப்பம் இனிப் போடத் தேவையில்லையே! இருந்தாலும் நன்றாகக் கட்டி வைத்த இருவர் எவ்வாறு தப்பிச் செல்ல முடியும் என்று கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டனர். ஓட்டுநர் தனக்குத் தெரியாது என்று கையை விரித்து விட்டார். அவருக்கும் அவர்கள் எப்படித் தப்பினார்கள் என்று சொல்லத் தெரியவில்லை. இவர் லாரி ஓட்டிக் கொண்டிருக்கும் போது லோடுமேன்கள் போடும் முடிச்சைப் போட்டிருந்தார். அதை அவிழ்க்க வேண்டுமானால் அதை ஒரு லோடுமேன் வேலை பார்த்தவனால் தான் முடியும்! ஆனால் இங்கே யாருக்கு அதை அவிழ்க்கத் தெரியும்? அவர்களே அவிழ்த்துக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பே இல்லை என்று நினைத்துக் கொண்டார். செல்வம் தான் எல்லா வேலையும் பார்த்தவனாயிற்றே!

சிறிது நேரம் கழித்து, வெங்கடாச்சாரி, சரி, தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சு என்று சொல்லிவிட்டு, கலைச்செல்வியைப் பார்த்து, உனக்கு அடி பலமா அம்மா என்றார். அவள் இடவலமாய் தலையசைத்து இப்போ பரவாயில்லை என்றாள். சரி எல்லோரும் கிளம்புங்க, டூரைக் கவனிப்போம் என்றார். வர்ஷினிக்கு ஆரம்பத்திலேயே செல்வத்தின் மீது சந்தேகம் வந்திருந்தது. அவன் அவர்கள் இருவருக்கும் நடுவில் அமர்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்ததையும் இதையும் இணைத்துப் பார்த்து, அவன் தான் அவர்களை முதலிலேயே மன்னிக்க வேண்டும் என்று சொன்னவன். எனவே அவன் தான் அவிழ்த்து விட்டிருக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார். ஆனால் அதை பொதுவில் கேட்டால், அவனும் மறுக்க மாட்டான், ஒப்புக் கொள்வான். அது தேவையில்லாமல் வீண் பிரச்னையைத் தான் வளர்க்கும் என்றும் நினைத்துக் கொண்டார்.

முதலில் எல்லோரும் வடபழனி முருகன் கோவிலுக்குச் சென்று முருகனை வழிபட்டு டூரை ஆரம்பிப்போம் என்று நினைத்தனர். பிரகாரம் சுற்றி வரும்போதே வர்ஷினி செல்வத்தைப் பிடித்துக் கொண்டார். நீ தானே அவிழ்த்து விட்டாய் என்று கேட்டார். அவனும் ஆமோதித்தான். அவுங்க கதையக் கேட்டதும் பாவமாப் போச்சு. அதான் அவிழ்த்து விட்டேன். தவிர அவர்கள் செய்த தவறுக்கு நாம் செருப்பாலெல்லாம் அடித்ததே பெரிய தண்டனை தானே என்றான். திடீரென நினைவு வந்தவராய் ஆமா உன் கையிலயும் ரத்தம் வழிந்ததே, உனக்கு ஒன்னும் இல்லியே? எங்கே கையைக் காட்டு பாக்கலாம் என்றார். காயம் அதிகமில்லை என்று சொல்லி விட்டு தேங்காய் எண்ணையும் மஞ்சளும் வைத்து அப்பி இருப்பதாகச் சொல்லிவிட்டு, என் அம்மா இப்படித் தான் செய்வார். மூன்றே நாளில் எல்லாம் சரியாய் போய்விடும் என்றான்.

அவனுக்கு இருந்த ஒரே கவலை இருப்பது இன்னும் ஒரே சட்டை தான். கையிலிருந்ததும் 100 ரூபாய் தான். எப்படி இன்னும் இரண்டு நாட்கள் சமாளிப்பது சாப்பாட்டுக்கு என்று! சரி இரண்டு நாள் தானே, நம்ம கிட்ட தான் ஈரத்துண்டு சாப்பாடு இருக்கே என்று நினைத்துக் கொண்டான். இரவு அனைவரும் தூங்கியதும் இன்று போட்ட சட்டையைத் துவைத்துப் போட்டான். கைலி உடுத்திப் படுத்துக் கொண்டான். வழக்கம் போல் அனைத்து மாணவர்கள் போல் சுற்றுலாவை ரசிக்க ஆரம்பித்தான். இவர்கள் இருவரும் வீட்டுக்குச் சென்றார்களா? அம்மாவைப் பார்த்திருப்பார்களா? பார்த்திருந்தால் அம்மா என்ன சொல்லியிருப்பாரோ என்ற எண்ணமும் அடிக்கடி வந்தது.

சுற்றுலா கோஷ்டி ஊர் திரும்பியது!

பாகம் - 27

செல்வம் வந்ததும் வராததுமாக அவனது தாய் முதலில் அவனது காயத்தைப் பற்றித் தான் கேட்டார். காண்பித்தான். ரொம்ப வலிக்குதா என்று கேட்டார். சிரித்துக் கொண்டே அதெல்லாம் சீக்கிரம் ஆறிவிடும்மா என்று சொல்லிக் கொண்டே அவர்கள் இருவரையும் பார்த்தான். என்ன பாக்குற? அவங்க இரண்டு பேரும் இப்போ நம்ம வீட்டுல ஒருத்தர் ஆகிட்டாங்க! உனக்கு அண்ணன்கள் இரண்டு பேரு வந்துட்டாங்கன்னு நினைச்சுக்கோ என்றார். செல்வம் இந்த வார்த்தைகளிலேயே நிம்மதியடைந்தான்.

அவன் கல்லூரிக்கும் போய்க்கொண்டே இத்தனை வேலைகளைப் பார்த்துக் கொண்டு இருப்பதைப் பார்த்து அவர்களும் உத்வேகம் கொண்டனர். எந்த வேலையையும் பார்க்கத் தயார் என்றனர். கொஞ்சம் பொறுங்கள் ஒரு வாரத்திற்குள் அதற்குண்டான வேலைகளைப் பார்க்கிறேன் என்று சொன்னான் செல்வம்.

வழக்கம் போல் கல்லூரி வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. அனைவரும் சுற்றுலா சென்று வந்த கதைகளைப் பேசிக் கொண்டும், புகைப்படங்களைப் பகிர்ந்து கொண்டும் இருந்தனர். கலைச்செல்வி சகஜ நிலைக்கு வந்திருந்தாள். அவள் தந்தை காயம் பற்றிக் கேட்டதற்கு தாம் ஜன்னல் அருகே அமர்ந்திருந்ததாகவும், தூங்கிக் கொண்டிருக்கும் போது பேருந்து பிரேக் போட்ட போது முன்னால் இருந்த சிறிய கம்பி இழுத்து விட்டதாகவும், வலி இப்போது இல்லையென்றும் சமாளித்தாள்.

செல்வம் கல்லூரியில் எல்லோரையும் மதித்துப் பழகுவான். அதுவும் டீ குடிக்கும் கேண்டீனில் கல்லூரி துப்புரவுப் பணியாளர்கள் வந்து அருந்தினால் அவர்களுடன் சென்று பேச ஆரம்பித்து விடுவான். அவர்களைப் பற்றி, குடும்பத்தைப் பற்றி எல்லாம் பேசுவான். அவர்களும் அவனுடன் தோழமையுடன் பழகினார்கள். அப்போது தான் தெரிந்தது அங்கே துப்புரவுப் பணியாளர்களுக்கு ஒரு காலியிடம் இருப்பது. எனக்குத் தெரிந்தவன் ஒருவன் இருக்கிறான், அவனை இந்த வேலைக்கு சேர்த்து விட முடியுமா என்று கேட்டான் செல்வம். தாராளமாக சேத்துக்கலாம் செல்வம். நீ சொன்னா பையன் எப்படி இருப்பான்னு தெரியும். ஆனா வேலை ரொம்ப அதிகமா இருக்கும்பா. இங்க படிக்கிறவங்க அங்கங்க குப்பையப் போடுவாங்க. நம்ம தான் அத்தனையும் அள்ளணும். என்ன தான் படிப்பாங்களோ தெரியல என்றார் வயதில் மூத்த ஒரு பணியாளர். சம்பளம் எவ்வளவு கொடுக்கிறாங்க என்று செல்வம் கேட்டதற்கு அது கொடுப்பாங்க ஒழுங்கா வேலை செஞ்சா ஆயிரத்துக்கும் மேல என்றார்கள். செல்வத்துக்கு திருப்தியாய் இருந்தது. ஆனால் இருவரில் யார் சம்மதிப்பார்கள் இந்தப் பணிக்கு என்று எண்ணிக் கொண்டே வீட்டை அடைந்தான்.

அன்று இரவு சாப்பிட்டு முடித்ததும், இருவரையும் அமரச் செய்து மெல்ல நிலையை விளக்கினான். எங்க கல்லூரியில துப்புரவுப் பணிக்கு ஒரு காலியிடம் வருது. சம்பளம் ஆயிரமாவது தருவாங்கன்னு நினைக்கிறேன். உங்கள்ல யாராவது அந்த வேலை செய்யலாம்னு நினைச்சீங்கன்னா காலையில எங்கிட்ட சொல்லுங்க, நானே கூட்டிக் கொண்டு போய் சேர்த்து விடுறேன் என்றான் செல்வம். காலை வரைக்கும் எதுக்கு காத்திருக்கணும். நானே அந்த வேலை செய்றேன் என்றான் நந்தன் முந்திக் கொண்டு! ரமேஷும் எந்த வேலை கொடுத்தாலும் எனக்குக் கவலையில்லை செல்வம். இரண்டு பேரையும் வேண்டுமானாலும் சேர்த்து விடு! தொழிலில் இல்லை இழிவு என்பது எங்களுக்குத் தெரியும் என்றான். இருந்தாலும் இது ஒருவர் மட்டுமே சேர்க்கலாம் என்பதால், நந்தனையே முதலில் சேர்த்து விடுகிறேன் என்றான்.

மறுநாள் காலை கொஞ்சம் சீக்கிரமாகவே சென்றார்கள் இருவரும் கல்லூரிக்கு. துப்புரவுப் பணி கல்லூரி ஆரம்பிக்க 2 மணி நேரங்களுக்கு முன்னதாகவே ஆரம்பிக்கும் என்றும், காலை 7 மணிக்கே வேலைக்கு வரவேண்டுமென்றும், காக்கி நிறச் சீருடையும் தைத்துக் கொள்ள வேண்டுமென்றும் கூறி அவன் கையில் ஒரு ஆளுயரத் துடைப்பத்தைக் கொடுத்து கூட்டச் சொல்லி விட்டார்கள். மரத்தடி முழுதும் கூட்ட வேண்டும் என்றும் சருகுகள், குப்பைகளை கொஞ்சம் கொஞ்சமாக ஓரத்தில் சேர்த்து வைத்து பின்னர் மொத்தமாக வண்டி வைத்து அள்ளவும் சொல்லிக் கொடுத்தார்கள். முதலில் நந்தனுக்கு மிகவும் களைப்பாக இருந்தது. ஒரே நாளில் அதிலுள்ள சூட்சுமத்தைப் புரிந்து கொண்டான். இந்த வேலையைச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை வந்தது. இவனுக்கு காலை 9.30 மணிக்கெல்லாம் வேலை முடிந்து விடும். மீண்டும் மாலை 5 மணிக்கு மேல் ஒவ்வொரு அறையாகச் சுத்தம் செய்ய வேண்டும். இரவு 9 மணியாகி விடும் திரும்ப.

பாவம், எந்த கலைச்செல்விக்கு காயம் ஏற்படுத்தினானோ அதே கலைச்செல்வி படிக்கும் கல்லூரியிலேயே துப்புரவுப் பணி செய்கிறோம் என்பதை மறந்து போனான்!

பாகம் - 28

ரமேஷுக்கும் ஒரு வேலை வாங்கிக் கொடுத்தான் செல்வம். கேஸ் சிலிண்டர் சப்ளை செய்யும் வேலை. ஒரு மீன்பாடி வண்டியில் சிலிண்டர்களை அடுக்கி, தேவைப்படும் வீடுகளுக்கு டெலிவரி செய்யும் வேலை. மாதம் 1500 ரூபாய் சம்பளம். பழைய சம்பளம் கிடைத்ததில் ரமேஷுக்கும் மகிழ்ச்சி. அதோடு மட்டுமல்லாமல், ராஜாத்தி அம்மாள் அவனிடம், நீ பணமே தரவேண்டாம் செலவுக்கு என்றும் ஏதேனும் சிவில் காண்டிராக்டுகளின் டெண்டர்கள் வருகின்றதா என்று பேப்பரில் பார்த்து அதற்குக் கட்டுவதற்கு வைத்துக் கொள் என்றார்கள். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது ரமேஷுக்கு. கனவும் மெய்ப்படும் என்று நினைத்துக் கொண்டான். வேலையை ஈடுபாடுடன் செய்து வந்தான்.

தங்கள் முதல் சம்பளத்தைக் கொண்டு வந்த இருவருமே ராஜாத்தி அம்மாளின் காலில் வைத்து விழுந்து ஆசீர்வாதம் வாங்கி அவர் கையிலேயே கொடுத்தார்கள். அவரும் மனப்பூர்வமாக ஆசி வழங்கினார். இவ்வாறாக ஆறு மாதங்கள் சென்றன.

கணினித் துறையில் இருந்து இருவரை பெங்களூரிலுள்ள ஒரு பெரிய நிறுவனம் கண்காட்சி ஒன்றிற்கு அழைத்தது. அங்கு நடந்த கருத்தரங்கில் கலந்து கொள்ளவும், மென்பொருளில் அவர்கள் கல்லூரி மாணவர்கள் செய்த பிராஜக்டுகள் பற்றிய சமர்ப்பித்தலும் செய்யலாம் என்ற அறிவிப்பு இருந்தது. கல்லூரி முதல்வர் வெங்கடாச்சாரியை அழைத்து முதல் இரண்டு ரேங்க்கில் உள்ள மாணவர்களை அனுப்புமாறு கூறிவிட்டு, செலவைக் கல்லூரியே ஏற்றுக் கொள்ளும் என்றும் கூறினார். முதலிரண்டு ரேங்க் என்றால் உமாவும் செல்வமும் தானே! இருவரும் முறைத்துக் கொண்டு நிற்பவர்களாயிற்றே! இருவரையும் சேர்த்து அனுப்புவதாவது? என்று நினைத்துக் கொண்டே சார், முதல் ரேங்க் மாணவி, இரண்டாம் ரேங்க் மாணவன், மூன்றாம் ரேங்க் மாணவி. முதல் ரேங்க் எடுத்த உமாவும், மூன்றாம் ரேங்க் எடுத்த கலைச்செல்வியும் இதைச் சரியாகச் செய்வார்கள் என்று நினைக்கிறேன் என்றார் வெங்கடாச்சாரி. சார் நீங்க எந்த யுகத்தில் இருக்கீங்க? மாணவியும் மாணவனுமே செல்லட்டும். அப்போ தான் நல்லாருக்கும் என்று முடித்துக் கொண்டார் முதல்வர்.

வெங்கடாச்சாரி இருவரையும் அழைத்தார். அப்போது வர்ஷினியும் துறையில் இருந்தார். உமாவுக்கும் செல்வத்துக்கும் அந்த அறிவிப்பைக் காட்டிய வெங்கடாச்சாரி இது இருவருக்குமே மிகவும் அரிய வாய்ப்பு எனவும், கல்லூரி மானத்தையும் பெருமையையும் கட்டிக் காக்க வேண்டிய பொறுப்பு இருப்பதாகவும், இவர்கள் இருவரையே கல்லூரி நிர்வாகம் தேர்ந்தெடுத்திருப்பதாகவும், செலவைக் கல்லூரியே ஏற்றுக் கொள்ளும் என்றும் கூறினார். இருவருமே அமைதியாக ஏற்றுக் கொண்டனர். இருவருக்குமே இது எப்படி நடக்கப் போகிறது என்று தெரியவில்லை! இருவரும் ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டது கூட இல்லை. உமா தான் முதலில் பேசினாள், சார் என் தோழி ஒருத்தியின் வீடு அங்கே இருக்கிறது. நான் அங்கேயே தங்கிக் கொள்கிறேன். போக வர எனக்குப் பணமெல்லாம் ஒன்றும் வேண்டாம். சரியாக குறிப்பிட்ட நாளில் அந்த நிறுவனக் கண்காட்சியில் குறிப்பிட்ட நேரத்தில் இருப்பேன் என்றாள். சரி, அங்கே சாப்பிடுவதற்கு மற்றும் சில்லறைச் செலவுக்கென்று பணம் தரச் சொல்கிறேன், இருவரும் நமது கல்லூரியின் பெயரைக் காப்பாற்ற வேண்டும் என்று சொல்லிவிட்டு அதற்கான ஆயத்தங்களைச் செய்யுங்கள் என்றார்.

உமா, கலைச்செல்வி, செல்வம் மூவரும் அமர்ந்து எவ்வாறு இந்தக் கண்காட்சியில் கலந்து கொள்வது என்று ஆலோசித்தனர். உமாவும் செல்வமும் அவ்வளவாகப் பேசிக் கொள்ள வில்லை. அதை எடு, இதை வை என்று மட்டும் பேசிக் கொண்டனர். அதுவும் உமாவாகக்

கேட்டால் மட்டுமே செல்வம் பதில் சொன்னான். கருத்தரங்கிற்காக இருவருமே நன்றாகத் தயார் செய்து கொண்டனர். அழகாக ஒரு பவர்பாயிண்ட் பிரசெண்டேசன் தயார் செய்தனர். சரியான கால அளவில் அதுவாகவே ஓடுமாறும் வைத்துக் கொண்டனர். இருவரும் இணைந்து வெங்கடாச்சாரிக்கும் வர்ஷினிக்கும் ஒரு லெக்சர் கொடுத்தனர். இருவருமே அதிசயித்தனர். எலியும் பூனையுமாக இருப்பவர்களே இப்படிக் கலக்குகிறார்களே, இருவரும் நண்பர்களானால் எவ்வளவோ செய்வார்கள் போல இருக்கிறதே, என்ற எண்ணத்தை வெங்கடாச்சாரியும் வர்ஷினியும் அவர்களிடமே சொன்னார்கள். இருவரும் ஒன்றும் பேசவில்லை.

நந்தன் அந்தக் கல்லூரியில் வேலை செய்தாலும் அவன் அந்தக் கல்லூரியில் வேலை பார்ப்பது செல்வத்தைத் தவிர அன்று சுற்றுலா போனவர்கள் யாருக்கும் தெரியாமல் இருந்தது ஆச்சரியம் தானே! காரணம், அவர்கள் வருவதற்குள் இவன் சென்று விடுவான். அவர்கள் சென்ற பிறகே மீண்டும் வருவான். ஆனால் எத்தனை நாட்களுக்குத் தான் இது நடந்து கொண்டே இருக்கும்!? முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முடியுமா? ஆனால் கல்லூரியில் வைத்து நந்தன் முதலில் மாட்டவில்லை!

பாகம் - 29

பெங்களூர் செல்வதற்கு இன்னும் பதினைந்து நாட்களே இருந்தன. கலைச்செல்வியின் பிராஜக்டையே மென்பொருளுக்கு எடுத்துக் கொண்டனர். கலைச்செல்வியும் தாராளமாக அவர்களுக்காகக் கொடுத்ததுடன், டாகுமெண்டேசன், ப்ளோசார்ட் என்று அனைத்தையும் செய்து கொடுத்து, அவற்றை அவர்களுக்கு விளக்கவும் செய்தாள். செல்வத்துக்கான ரயில் டிக்கட்டை கல்லூரியிலிருந்தே கொடுத்தார்கள். சாப்பாடு மற்றும் இதரச் செலவுக்கான பணத்தை மொத்தமாக உமா கையில் கொடுத்தார் வெங்கடாச்சாரி. பெங்களூர் செல்லும் நாளும் வந்தது. செல்வம் தனியாகக் கிளம்பி ரயிலில் சென்றான். காலை ரயிலிலேயே குளித்து விட்டு, நேராக கண்காட்சி நடக்கும் இடத்துக்கே சென்று விட்டான். உமாவும் வந்து சேர்ந்தாள் அவள் தோழியின் காரில். அவள் தோழியும் பெரும்பணக்காரி போலும். அன்றைய தினமே கருத்தரங்கு நடைபெற்றது. மிக நன்றாகவே நடைபெற்றது இவர்கள் பங்களிப்பும். மிகவும் திருப்தியுடன் கண்காட்சியிலேயே அவர்களுக்கென வழங்கிய உணவை உண்டனர் இருவரும். இருவருமே அதிகம் பேசிக் கொள்ளவில்லை. காரணம் கண்காட்சிக்கு உமாவின் தோழியும் வந்திருந்ததால் அவளுடனேயே உமா சுற்றிக் கொண்டிருந்தாள். மறுநாள் மென்பொருள் பிராஜக்ட் பற்றிய நிகழ்ச்சிகள் இருந்தன. மாலை 4 மணியானது. உமா செல்வத்திடம் சொல்லிக் கொள்ளக் கூட இல்லை. தோழியுடன் கிளம்பிச் சென்று விட்டாள்!

செல்வத்துக்கு முதலில் உமா சென்றதே தெரியாது. வெகு நேரம் கண்காட்சியில் அவளைத் தேடினான். பின்னர் கார் நிறுத்தும் இடத்தில் இவர்கள் கார் இல்லையென்று தெரிந்ததும் இவனுக்குக் கோபமும் எரிச்சலும் வந்தது. ஏனென்றால் இவன் செலவுக்கென்று பணம் எதுவும் கொண்டுவரவில்லை. தங்குவதற்கும் சாப்பிடுவதற்கும் உமாவிடமே பணம் கொடுத்திருப்பதாக வெங்கடாச்சாரி சொல்லியிருந்தார். இப்படிக் கொடுக்காமல் போய் விட்டாளே என்று மனதுக்குள்ளே நினைத்துக் கொண்டு, எங்கே தங்குவது என்று நினைத்துக் கொண்டே கண்காட்சி வாசலில் நின்று கொண்டிருந்தான். பின்னர் அந்த வீதியிலேயே பெரிய படி இருந்த வீட்டின் படிகளிலேயே அசந்து உறங்கி விட்டான். மறுநாள் கண்காட்சி பாத்ரூமிலேயே குளித்து மீண்டும் பளிச்சென்று ஆகிவிட்டான். இன்றும் உமா சரியான நேரத்திற்கு வந்து விட்டாள்.

மென்பொருள் டெமோவும் நல்லபடியாக முடிந்து கண்காட்சியின் இயக்குநர் இருவரையுமே பாராட்டினார். வெளியே வரும் போது உமாவின் தோழி முன்னால் சென்று கொண்டிருந்தாள். உமா பின்னால் சென்று கொண்டிருந்தாள். உமாவை, "ஒரு நிமிடம்" என்று அழைத்து நிறுத்தினான் செல்வம். அவளும் இவன் எதற்கு நம்மை அழைக்கின்றான் என்று வெறுப்புடன் நின்றாள். HoD உன்கிட்ட பணம் கொடுத்தாரா? என்று அவன் கேட்டதும் தான் உமாவுக்கே நினைவு வந்தது. ஆமாம் என்றாள். நீ பாட்டுக்கு அதைக் கொண்டு போய்விட்டால் நாங்க எங்கே தங்குறது எப்படி சாப்பிடுறது? உங்களையெல்லாம் இரண்டு வேளை பட்டினி போட்டு நாய் மாதிரி தெருப்படியில படுக்கச் சொல்லியிருந்தா தெரியும். எல்லாம் பணம் இருக்குங்குற திமிரு. இன்னைக்கு சாப்பிடுறதுக்காவது பணம் கொடுக்கப் போறியா இல்ல இன்னைக்கும் பட்டினியாவே தான் நான் ஊருக்குப் போகணுமா என்று எகிறிவிட்டான் செல்வம். உமாவுக்கு நிஜமாகவே வருத்தமாயிருந்தது. உடனே பணம் அனைத்தையும் அவன் கையில் கொடுத்து விட்டு கண்ணீர் ததும்பும் விழிகளுடன் அவனிடம் சாரி என்று மட்டும் சொல்லிவிட்டு அவளது தோழியின் காரை நோக்கி நகர்ந்து விட்டாள்.

இவ்வளவு பேசியிருக்கக் கூடாதோ? ஒரு வேளை மறந்து தான் போயிருப்பாளோ என்று செல்வம் நினைக்கத் துவங்கி இருந்தான்.

பாகம் - 30

பெங்களூர் திரும்பியதும் வர்ஷினி தான் செல்வத்தை அழைத்து உமாவிடம் ஏதும் தகராறு செய்தாயா? என்று கேட்டார். இவனுக்கு இதெல்லாம் உங்களுக்கு எப்படித் தெரியும்? என்றான். வெங்கடாச்சாரி சார்கிட்ட உமாதான் சொல்லிக்கிட்டுருந்தா. உங்கிட்ட பணத்தைக் கொடுக்காம மறந்து போய்ட்டாளாம் தோழியோட இருந்த நினைப்புல. நீ கேட்டதும் தான் அவளுக்கே உறைச்சிருக்கு. ரொம்ப வருத்தப்பட்டு சொல்லிக்கிட்டு இருந்தா. அதான் கேட்டேன் என்றார். வர்ஷினியிடம் நடந்ததைச் சொன்னான் செல்வம். நான் ஒன்னும் மனசுல வச்சுக்கல. இது போல எனக்குப் பழக்கம் தான். இருந்தாலும் வேணும்னே கொண்டு போய்ட்டான்னு தான் நானும் நினைச்சேன் என்றான். எப்படி இரண்டு வேளை சாப்பிடாம சமாளிச்ச? என்றார் வர்ஷினி. அதுவா? என்று சிரித்துக் கொண்டே அது தான் ஈரத்துண்டு சாப்பாடு கொண்டு போயிருந்தேன்ல. அது எப்பவும் கையில வச்சிருப்பேன். ஒரு சில நாள் பட்டினியாக் கிடந்தாலும் தாங்கலாம். ஒரு துண்டை தண்ணியில நனைச்சு புளிஞ்சுட்டு வயித்துல கட்டிக் கிட்டோம்னு வைங்க, அப்புறம் 4 மணி நேரத்துக்கு பசியே எடுக்காது தெரியும்ல என்று சொன்ன செல்வத்தைப் பார்த்து கண்கள் கலங்கின வர்ஷினிக்கு. இந்த விஷயத்தை வர்ஷினி கலையிடம் சொல்ல, அவள் உமாவிடம் சொல்ல, உமாவுக்கு மிகுந்த சங்கடமாய் இருந்தது.

உமாவும் கலையும் ஒரு நாள் செல்வத்தை நிறுத்தி உமா அவனிடம் மன்னிப்புக் கேட்டாள். செல்வமும் நான் அன்று அப்படியெல்லாம் பேசியிருக்கக் கூடாது தான். என்னையும் மன்னிச்சுக்கோங்க என்று மட்டும் சொல்லிவிட்டு சென்று விட்டான். இன்னும் கோபம் தீரல போலிருக்கு என்றாள் கலை. அதுக்கு நானென்ன செய்ய முடியும் என்று உமாவும் சென்றுவிட்டாள்.

செல்வமும் அவன் அம்மாவும் அடிக்கடி கோவிலுக்குச் செல்லும் வழக்கம் இருந்தது. மாலை நேரங்களில் பலமுறை செல்வம் வராவிட்டாலும் அவன் அம்மா மட்டுமாவது வந்து விடுவார். ஒரு முறை செல்வமும் அவனது அம்மாவும் வந்த போது கலைச்செல்வியும் அவளது தந்தையைக் காண வந்திருந்தாள். செல்வத்தைப் பார்த்ததும் புன்முறுவல் செய்தாள். செல்வம் அவளை அவனது அம்மாவுக்கு அறிமுகம் செய்து வைத்தான். இவள் தான் கலைச்செல்வி என்றதும், ஓ மூன்றாம் ரேங்கா! என்று அவன் அம்மா கேட்டதும், எல்லாவற்றையும் அம்மாவிடம் சொல்லிவிடுவான் போல் இருக்கிறதே என்று நினைத்துக் கொண்டாள். அவளுக்கும் அம்மாவைப் பார்த்திராததால் அவருடன் ஒட்டிக் கொண்டாள். பின்னர் அடிக்கடி இருவரும் கோவிலில் பார்க்கும் போதெல்லாம் பேசிக் கொள்வதுண்டு.

இவ்வாறு அவர்கள் ஒருநாள் பேசிக்கொண்டிருக்கும் போது தான் உமா தன் தாய் தந்தையுடன் கோவிலுக்குள் வந்தாள். கலையைப் பார்த்ததும் ஒரே தாவலில் அவளருகே வந்தாள். ராஜாத்தி அம்மாளைப் பார்த்தாள். இவர் யார்? என்னும் கேள்வி இருவர் கண்களிலும் இருந்தது. கலைச்செல்வி தான் தீர்த்து வைத்தாள். இது செல்வத்தின் அம்மா என்று உமாவிடமும், உமா என்று ராஜாத்தி அம்மாளிடமும். உமா ஒரு சிரிப்புடன் நிறுத்திக் கொண்டாள். இவள் தான் முதல் ரேங்க்கா என்று கேட்டதும் இன்னுமொருமுறை ஆமோதித்த படியே சிரித்துக் கொண்டாள். அதற்குள் காரை நிறுத்திவிட்டு அவள் தந்தை மணிமாறன் நடந்து வந்து கொண்டிருந்தார். அதோ அவர் தான் உமாவின் அப்பா அம்மா என்றாள் கலைச்செல்வி. ஒரு நிமிடம் அவர்களைப் பார்த்த ராஜாத்தி அம்மாள், சரி எனக்கு நேரமாகி விட்டது பிரகாரம் சுற்ற வேண்டும், நீங்கள் போய் அவர்களுடன் கோவிலுக்குள் செல்லுங்கள் என்ற படி பிரகாரத்தைச் சுற்ற ஆரம்பித்து விட்டார்.

டிசம்பர் மாதத்தில் நன்றாகக் குளிர ஆரம்பித்திருந்தது. மார்கழி 15 ஆகியிருந்தது. இன்று தான் நந்தன் மாட்டப் போகும் நாள். யாரிடம்? எப்படி? எப்போது? எங்கே?

பாகம் - 31

மார்கழி மாதங்களில் இரவு 9 மணி முதல் 10 மணி வரை மதுசூதனன் கோவிலில் ஆன்மீகக் கதைகள் சொல்வதுண்டு. டிவிப் பெட்டியையும் தாண்டி 30 பேர் வரை அவர் பேசுவதைக் கேட்க வருவார்கள். அப்படித் தான் அன்றும் பிரசங்கம் நடந்து கொண்டிருந்தது. மகாபாரதத்தில் கீதை பற்றி சொல்லிக் கொண்டிருந்தார். ஒவ்வொரு சமஸ்கிருத ஸ்லோகத்துக்கும் தமிழ் அர்த்தம் சொல்லி விளக்கிக் கொண்டிருந்தார்.

அன்று பார்த்து வீட்டிற்கு அப்போது தான் வேலை முடித்து வந்த நந்தனையும் கூப்பிட்டார் ராஜாத்தி அம்மாள். சரி என்று நந்தனும் கூடவே வந்தான். இருவரும் சுவாமி தரிசனம் முடித்து வரும் போது பிரசங்கத்தில் உட்காருவோம் என்று ராஜாத்தி அம்மாள் சொல்ல அதற்கும் சரி என்று அவர் அருகில் சென்று அமர்ந்தான் நந்தன்.

ஒரு பத்து நிமிடம் ஆகியிருக்கும். அம்மா வாங்க போவோம் என்றான் நந்தன். இருப்பா பகவத் கீதையைப் பற்றி எப்படி விளக்குகிறார்? வீட்டில் போய் என்ன செய்யப் போற என்றார் ராஜாத்தி அம்மாள். அய்யோ அம்மா, நானும் ஆசிரமத்தில் படிச்சிருக்கேன். எனக்கும் கீதை கொஞ்சம் கொஞ்சம் தெரியும். இந்த ஆளு சொல்றதக் கேட்டா எனக்குத் தெரிகிற கொஞ்ச நஞ்ச கீதையும் தெரியாமப் போகப் போவுது. ஆள விடுங்க. எந்திரிங்க என்றான். பாவம் அவனுக்கு அருகில் அமர்ந்தது அந்தக் கோவிலின் தர்மகர்த்தா என்று தெரியாதல்லவா! அவரும் இவன் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தார். ரொம்ப நாளாக வேலை செய்யும் ஒரு நல்ல அர்ச்சகரை இவ்வாறு அவன் பேசியது பொறுக்கவில்லை. சடாரென்று எழுந்தார். சாமி ஒரு நிமிசம் நிறுத்துங்க என்று சொல்லிவிட்டு. எங்கே நீ சொல்லு பாப்போம் உனக்குத் தெரிந்த கீதையை என்றார். நந்தன் இதை எதிர்பார்க்கவே இல்லை. இல்லை ஐயா, சும்மா தான் சொன்னேன் என்று தப்பிக்கப் பார்த்தான். மதுசூதனனுக்கு முதலில் என்னவென்றே தெரியவில்லை. அப்புறம் தான் தர்மகர்த்தாவே கூட்டத்தில் சொன்னார், இவர் கீதை சொல்வதை விட இதோ இவன் கீதை நல்லா சொல்வானாம். பாப்போம் என்றார் கோபம் கொப்புளிக்க. சரி தான் வந்தது வினை என்று ராஜாத்தி அம்மாள் நினைத்துக் கொண்டார். மதுசூதனன் கோபப்படவில்லை. இந்தச் சின்ன வயதில் கீதை சொல்றாரா தம்பி. வாங்கய்யா என்றார். நந்தனுக்கே வெட்கமாகிவிட்டது இவரையா அந்த ஆளு என்று சொன்னோம் என்று.

இவ்வாறாக, நந்தன் சூழ்நிலை காரணமாக பிரசங்கியாகிவிட்டான். அந்த சமயத்தில் தானா கலைச்செல்வியும் கோவிலுக்குள் நுழைய வேண்டும்? நந்தன் தான் தோன்றித் தனமாகத் தான் பேசியதற்கு முதலில் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான். பின்னர் தான் விவேகானந்தா ஆசிரமத்தில் கீதை பயின்றதாகவும் ஏதோ கொஞ்சம் தெரியும் என்றும், அதைப் பகிர்ந்து கொள்வதாகவும் கூட்டத்திடம் கூறிவிட்டுத் தொடர்ந்தான். அதன் பின் அவன் சாதாரண நந்தனாகத் தெரியவில்லை!

கீதை என்பதைச் சாதாரணமாக நினைத்து விடாதீர்கள் என்று ஆரம்பித்தவன், கிருஷ்ணன் எந்தச் சூழ்நிலையில் கீதையை அருளினானோ அந்த நிலைக்கு அவர்கள் அனைவரையும் முதலில் கொண்டு சென்றான் தனது உணர்ச்சிபூர்வமான பேச்சால். பல நூல்களில் பயின்றதை அப்போது தான் வெளிக் கொணர்ந்தான். இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் அக்ரோணிக் கணக்கான சேனைகளை வைத்துக் கொண்டு அர்ச்சுனன் ஏன் போர் புரிய முடியவில்லை? தர்மத்தைக் காக்க தனது உறவினர்களையே ஒழிக்க வேண்டுமா என்று தானே? என்ற கேள்வியுடன் ஆரம்பித்தவன், பெரியோர்களே! கீதை படிப்பது எப்படி இருக்கவேண்டும் தெரியுமா? இது கிருஷ்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் இடையே நடக்கும் சம்பாஷணை.

கிருஷ்ணன் பகவான். அர்ச்சுனன் சாதாரண மானிடன். சமயங்களில் நான் அர்ச்சுனனாக இருந்து கேள்வி கேட்பேன், நீங்கள் கிருஷ்ணனாக இருந்து பதில் யோசிக்க வேண்டும். நான் கிருஷ்ணனாக இருந்து பதில் சொல்லும் போது நீங்கள் அர்ச்சுனனாக, எதிர்ப்புறம் உறவினர்களையும் லட்சக்கணக்கான சேனைகளைக் கொல்ல வேண்டிய கடமையுடன் இருக்கும் அர்ச்சுனனாகவும் மாறி அடுத்த கேள்வி என்ன கேட்பது என்று யூகிக்க வேண்டும். அப்போது தான் கீதை ருசிக்கும். மறக்கவும் செய்யாது என்று சொன்னவன், இப்போது ஐயா சொல்லிய ஸ்லோகத்தையே எடுத்துக் கொள்வோம் என்று ஒரு மணி நேரம் அந்தக் கூட்டத்தைத் தன் வசம் வைத்திருந்தான். ராஜாத்தி அம்மாளுக்கு மெய் சிலிர்த்தது. மது சூதனனுக்கு ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. கலைச்செல்விக்கோ இவன் நம் கழுத்தை அறுத்தவன் ஆயிற்றே? யார் இவன்? எப்படி இங்கே வந்தான்? இவ்வளவு அருமையாகப் பேசுகிறானே? நம் தந்தை ஏன் கீழே அமர்ந்திருக்கிறார் என்று ஆச்சரியத்துடன் கோவில் தூணில் சாய்ந்து கொண்டே அவன் பேசியதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

பேச்சு முடிந்ததும் அனைவரும் கை தட்டினர். மதுசூதனன் அவனைக் கட்டித் தழுவிக் கொண்டார். உன் பெயர் என்ன தம்பி? என்றார். விவேகாநந்தன் என்று முழுப் பெயரையும் சொன்னான். அதனால் தான் இப்படிப் பேசுகிறாய். கீதோபதேசம் அருமையாகச் சொன்னாய் தம்பி! வாழ்த்துகள் என்றார். அவன் யார் என்று ராஜாத்தி அம்மாளிடம் அனைவரும் விசாரித்தனர். தன் மகன் தான் என்று பெருமையுடன் சொன்னார் ராஜாத்தி அம்மாள்.

அவன் ராஜாத்தி அம்மாளுடன் கிளம்பிச் செல்வதைப் பார்த்ததும் முதல் வேலையாக இதை உமாவிடம் நாளை சொல்லவேண்டும் என்று நினைத்துக் கொண்டாள் கலை.

பாகம் - 32

ராஜாத்தி அம்மாள் வீட்டுக்குச் சென்றதும் நந்தனைப் பார்த்து உனக்கு இவ்வளவு விஷயங்கள் தெரிந்திருக்கிறதே? என்றார். இதெல்லாம் எனக்கு ஆசிரமத்தில் சொல்லித் தந்ததும் பின் நானே படித்ததும் தான் அம்மா என்றான். ராஜாத்தி அம்மாளுக்கும் இவன் கலைச்செல்வி கழுத்தில் தான் காயம் ஏற்படுத்தினான் என்பது தெரியாது. தெரிந்திருந்தால் கோவிலுக்கே அவனை அழைத்துச் சென்றிருக்க மாட்டார். ஆனால் விதி யாரை விட்டது?

மறுநாள் காலை முதல்வேலையாக உமா வந்ததும் வராததுமாக இந்த விஷயத்தைச் சொன்ன கலைச்செல்வி, அவன் செல்வத்தின் அம்மாவுடன் சென்றதையும் சொன்னாள். உமாவுக்குச் செல்வத்தின் மேல் ஏற்கனவே ஒரு சந்தேகம் இருந்தது. அது இப்போது நிரூபணம் ஆனது. நீ ஒன்றும் கவலைப்படாதே, கையும் களவுமாகப் பிடித்து விடுவோம் என்றாள் உமா.

நந்தன் வேலையிலும் படு கெட்டிக்காரனாக இருந்தான். ஒரு நாள் மாலை துப்புரவுப் பணியாளர்கள் அனைவரையும் கல்லூரி முதல்வர் அழைத்தார். நீங்கள் எல்லாம் என்ன வேலை செய்கிறீர்கள்? எப்போது பார்த்தாலும் குப்பையாகத் தான் இருக்கிறது கல்லூரி என்று வசைபாடினார். அனைவரும் தலைகுனிந்து அமைதியாக நின்றனர். நந்தன் மட்டும் அப்படித் தான் சார் இருக்கும் என்றான். அவனை அடக்கினர் கூட இருந்த பணியாளர்கள். முதல்வரோ கோபத்துடன் அவனை முன்னால் அனுப்புங்க என்றார். நந்தன் விறுவிறுவென்று முன்னால் சென்றான். சென்றவன் அவர் முன்னாலேயே தனது பையிலிருந்து ஒரு தாளை எடுத்தான். அதை கன்னாபின்னாவென்று கசக்கினான். இதோ பாருங்க சார் இது என் கையில் இருக்கும் வரை பேப்பர் தான். ஆனா கீழே போட்டதும் குப்பையாகி விடுகிறது. அதன் பின் நான் இதைத் தொடமாட்டேன் ஏதோ துப்புரவுப் பணியாளர் தான் வந்து இதை எடுக்கவேண்டும் என்று நினைக்கும் வரை கல்லூரி இப்படித் தான் இருக்கும் என்றான். முதல்வருக்கு இதற்குள் கொஞ்சம் கோபம் தணிந்திருந்தது. சரி இப்போ என்ன செய்தால் இந்தப் பிரச்னை தீரும்? என்றார். அப்படிக் கேளுங்க சார். யார் குப்பையை உருவாக்குறாங்களோ அவர்களே குப்பையை நீக்கணும். அதற்குத் தகுந்த மாதிரி நாம் தான் மாற்றணும். குப்பை போடுறவங்களே அதைப் பிரிச்சு குறிப்பிட்ட இடங்கள்ல அதுக்குன்னு வச்சிருக்கிற குப்பைத்தொட்டியில் போட்டாங்கண்ணா, குப்பையைக் கூட சொத்தா மாத்த முடியும் சார். இந்தக் குப்பையெல்லாம் கிலோ என்ன விலைன்னு உங்களுக்குத் தெரியுமா? அதோட மதிப்பை நாமெல்லாம் உணர்ந்தா போதும். இயற்கையா கீழே விழுற இலை தழையை நீக்கவும், இந்தக் குப்பைத் தொட்டியில் விழுந்த குப்பையை அப்புறப்படுத்தி முடிந்தா அதைப் பணமாக்கவும் வேணும்னா துப்புரவுப் பணியாளர்கள்ங்குற முறையில் நாங்க உதவமுடியும் என்றான்.

இப்போ நம்ம கல்லூரியை எடுத்துக்கிட்டீங்கன்னா காண்டீன் பக்கத்துல அதற்குத் தகுந்த மாதிரியும் மாணவர்கள் சாப்பிட்ற இடங்கள்ல அதுக்குத் தகுந்த மாதிரியும், மற்ற இடங்கள்ல அங்கொன்னும் இங்கொன்னுமா சில குப்பைத் தொட்டியை வைத்து அதுல மாணவர்களைப் போடச் செஞ்சோம்னா அது போதும். எல்லாம் செய்யலாம், ஆனா இந்தப் பசங்களைக் குப்பைத் தொட்டியில் போய் போட வைப்பது எப்படி? என்றார் முதல்வர். அதுக்கும் வழி இருக்கு சார். பொறுப்பை அவங்க கையில விடுங்க சார். அவங்களும் வளர்ந்தவங்க தானே. அதெல்லாம் கையில எடுத்துப்பாங்க. அதுக்கு நீங்க தான் பொறுப்புன்னு உணர வைக்கணும். உதாரணமா, அடுத்த மாசத்துல ஒரு தேதியை நீங்களே குறிங்க. அன்னைக்கு நம்ம காலேஜிக்கு யாராவது ஒரு பெரியவர் வர்றாருன்னு அறிவிங்க. அது அப்துல் கலாமா இருந்தாலும் சரி, இல்ல பில்கேட்ஸா இருந்தாலும் சரி. கல்லூரியைச் சுத்தமா வைக்க நிர்வாகம் சில நடவடிக்கைகளை எடுக்கப் போகுது. அதைக் கடைப்பிடிப்பதில் உங்களுக்கும் பங்குண்டுன்னு சொல்லுங்க.

அதுக்கப்புறம் பாருங்க. கொஞ்ச நாள் கழிச்சு வெளியிடத்தில் இருந்து ஒருத்தர் வந்தாத் தான் நம்ம காலேஜைச் சுத்தமா வைத்திருக்க வேண்டும் என்று இல்லை. எப்போதும் இப்படியே வச்சிருக்கணும்கிறதை விளக்கத் தான் அப்படிச் சொன்னேன்னு கூட நீங்க மாத்தலாம், அல்லது அந்தப் பெரியவரையே அழைக்க முடிஞ்சா அப்ப ஒத்துக்குறேன் நீங்க பெரியவர் சார்! என்றான். முதல்வர் முகத்தில் சிரிப்பு. ஆமா, உன் பேரென்னப்பா என்றார். நந்தன் சார் என்றான்.

அவன் அவ்வாறு சொன்ன இரண்டே நாட்களில் கல்லூரி முழுதும் பரபரப்பானது! முதல்வர் இவனைத் தேடி வந்தார். இங்கே பாரு நந்தன் நான் நீ சொன்ன படியே ஒருத்தரை அழைத்து விட்டேன். அவர் உண்மையிலேயே இங்கே வர்றார்! என்றார். நல்லது சார். அவர் சென்றதுக்கப்புறம் அதை அப்படியே மாணவர்களின் பழக்கமா மாத்திரணும் என்றான் நந்தன். முதல்வர் அவன் முதுகில் தட்டிக் கொடுத்து தாங்க்ஸ் என்று சொல்லிவிட்டு சென்று விட்டார்.

அன்று கலைச்செல்வி வீட்டில் நடந்தது தான் வேடிக்கை!

பாகம் - 33

அந்தப் பிரசங்கம் நடந்த பிறகு நந்தனால் கோவில் பக்கம் வரமுடியவில்லை. கல்லூரியில் வேலையாகிவிட்டது. ஆனால் ராஜாத்தி அம்மாள் சென்ற போது அவரை மதுசூதனன் பிடித்துக் கொண்டார். உங்கள் பையனை அருமையாக வளர்த்திருக்கிறீர்கள், என்ன அருமையாக அன்றைக்கு பிரசங்கம் செய்தார் தெரியுமா? எங்கே அதற்குப் பின் ஆளையே காணவில்லை? என்றார். ராஜாத்தி அம்மாள் அவரிடம் ஆதியோடந்தமாய் முழுக்கதையும் சொல்லி, அவன் குலம் கோத்திரம் எல்லாம் எனக்குத் தெரியாது. அவன் ஒரு அனாதை என்றும் சொல்லி, அவன் எப்படி இங்கே வந்தான் என்றும் விவரமாகச் சொன்னார். அவருக்கோ ஆச்சரியமான ஆச்சரியம். இப்படியெல்லாம் கூட நடக்குமா? எல்லாம் ஆண்டவன் திருவிளையாடல் என்று சொன்னவர் அவனை மீண்டும் பார்க்கவேண்டும் என்று நான் சொன்னதாகச் சொல்லுங்க என்றார்.

அன்றிரவு சாப்பிட உட்கார்ந்தவர் என்றைக்குமல்லாமல் அன்றைக்கு சாப்பிடும் போது பேச ஆரம்பித்தார். அன்றைக்குக் கோவிலில் பிரசங்கம் பண்ணினானோல்லையோ அவன் தாண்டி விவேகாநந்தன், அவன் ராஜாத்தி அம்மாள் பிள்ளை இல்லையாம். அனாதையாம். அவன் திருடும் போது அந்த அம்மாளின் பையன் இவனைப் பிடிச்சு அவன் நல்லவங்கிறதை எப்படியோ கண்டுபிடிச்சு அவன் வீட்டுக்கே கூட்டி வந்துட்டானாம். நேக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்குடி என்றார். வால்மீகியும் திருடனாய் இருந்தவர் தான். ராமாயணம் சொல்லலியா? அது மாதிரி இந்தப் புள்ளையாண்டான் பாரேன், திருடனா இருந்து திருந்தி வந்திருக்கான் என்றார். கலைச்செல்வியோ இருதலைக் கொள்ளி எறும்பாய் இருந்தாள். என்னைத் தான் அவன் கழுத்தை அறுக்கும் போது செல்வம் பிடித்தான் என்று சொல்லவும் முடியாமல், இவர் அவனைப் புகழ்வதையும் தாங்க முடியாமல், அப்பா சாப்பிடும் போது பேசக் கூடாதுன்னு நீங்க தானே சொன்னேள். இப்போ நீங்களே பேசினா எப்படி என்று பேசாமல் சாப்பிட ஆரம்பித்தாள்.

உமா வீட்டுக்கு கேஸ் சிலிண்டர் மாற்ற வரும் போது ரமேஷைப் பார்த்து விட்டாள்! இவனுக்கு அவளை அடையாளம் தெரியவில்லை. ஏனென்றால் இவன் யாரையுமே பார்க்கவில்லையே ஓட்டுநரைத் தவிர. அவளுக்கு இவனை நன்றாக அடையாளம் தெரிந்தது. ஓஹோ இந்த வேலை தான் பார்க்கிறானா என்று நினைத்துக் கொண்டாள். தவளை தன் வாயால் கெடும் என்பது போல் அவன் சும்மா இருக்காமல் இங்கே பாருங்கம்மா சீக்கிரம் பணம் கொடுங்க, நான் வீடு போய்ச் சேரணும் என்றான். விடுக்கென நிமிர்ந்த உமா அவனைப் பின் தொடர்வது என்று முடிவு செய்தாள். அவன் மீன்பாடி வண்டியில் முன்னால் செல்ல இவள் காரில் அவனைப் பின் தொடர்ந்தாள். கிட்டத்தட்ட 5 கி.மீ.க்கும் மேல் சென்றான். இவளும் விடவில்லை. மெதுவாகப் பின் தொடர்ந்தாள். நேரே வீட்டில் நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்தான் ரமேஷ். காரை நிறுத்தி விட்டு பின்னாலேயே நுழைந்த உமா அங்கே செல்வம், ரமேஷ், நந்தன், ராஜாத்தி அனைவரும் இருக்கக் கண்டாள். கோபத்துடன் இருவரையும் பார்த்து, ஓ, திருடங்க ரெண்டு பேரும் இங்கே தான் இருக்கீங்களா? உங்களுக்கு யாரு செல்வம் தான் அடைக்கலம் கொடுத்திருக்கானா, அதுக்கு இந்த அம்மாவும் உடந்தையா? இன்னும் யாரைக் கொள்ளையடிக்க திட்டம் போட்டிருக்கீங்க என்றாள் படபடவென்று. ராஜாத்தி அம்மாளோ சிரித்துக் கொண்டே உமா முத முதல்ல எங்க வீட்டுக்கு வந்திருக்க காபி சாப்டுறாயாம்மா? என்றார். செல்வம் உடனே இவளுக்கு என்னம்மா நாகரீகம் தெரியும்? இவகிட்ட போய் நாகரீகம் பேசிக்கிட்டு இருக்கீங்க என்றவன், நான் அன்னைக்கே சொன்னேன் இவங்களப் பாத்தா திருடுறவங்க மாதிரி தெரியலனு. திருந்துறதுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்போம்னும் சொன்னேன். அதத் தான் செஞ்சிக்கிட்டு இருக்கேன். அவங்கள மாதிரி ஒரு பொறுப்பான ஆட்கள நீ பாத்திருப்பியா? இப்போ என்ன? உனக்கு போலீஸ் கிட்ட போகணுமா? போய்ச் சொல்லு அவங்ககிட்ட. நீ

என்ன செய்றேன்னு நானும் பாக்கிறேன் என்றான் ஆவேசம் வந்தவனாக.

அப்போ இவங்கள்லாம் திருட முயற்சி செய்யலைங்கிறியா? கலை கழுத்துல அறுத்து ரத்தக் காயம் ஏற்படுத்துனது? என்றாள். இது வரை பேசாமல் இருந்த நந்தன் இப்போது பேச ஆரம்பித்தான். உமா, நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். நாங்கள் எல்லாம் அனாதைகள் தான், திருடர்கள் அல்ல. சமுதாயம் துரத்தியடிப்பதைப் பொறுக்க முடியாமல் முதன் முதலாய் கொள்ளையடிக்க வந்தோம். நல்லவேளையாக செல்வம் மற்றும் உங்களிடம் மாட்டிக் கொண்டோம். செல்வம் போல் ஒரு சகோதரன் கிடைப்பதற்காகவே நாங்கள் அவ்வாறாய் நடந்து கொண்டோம் என்று தோன்றுகிறது. அன்றே நாங்கள் அதற்கான தண்டனை அடைந்து விட்டோம் என்று நினைக்கிறேன். உங்கள் தோழியின் கழுத்தை நான் அறுத்தது நான் என் வாழ்நாளிலேயே செய்த மிகப் பெரிய பாவம். அதற்கான பிராயச்சித்தத்தை நான் எப்படிச் செய்யப் போகிறேன் என்று தெரியாமல் இருந்தேன். இப்போது நீங்கள் எங்களைப் போலீசில் கொண்டு போய் காட்டிக் கொடுப்பதானால் உங்கள் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன், ரமேஷ் ஒன்றுமறியாதவன், அப்பாவி. அவனை விட்டு விடுங்கள். நான் தான் உங்கள் தோழியின் கழுத்தில் காயத்தை ஏற்படுத்தியவன்? என்னை மட்டும் ஒப்படையுங்கள். நான் ஒப்புதல் வாக்குமூலம் தரத் தயாராக இருக்கிறேன். என்று கண்ணீர் மல்கச் சொன்னான். உமாவுக்கு தர்மசங்கடமான நிலையாகிவிட்டது. ராஜாத்தி அம்மாள் தான் அவளருகே வந்து அவளை அமரச் செய்து, இதோ பாரம்மா யாருமே நல்லவருமில்லை யாருமே கெட்டவருமில்லை. சந்தர்ப்ப சூழ்நிலைகள் தான் ஒரு மனிதனை நல்லவனாகவோ கெட்டவனாகவோ காட்டுகிறது என்று நம்புபவள் நான். இந்த நந்தன் கலைச்செல்வியின் கழுத்தைத் தான் அறுத்தான் என்று எனக்கு இப்போது தான் தெரியும். இத்தனைக்கும் நான் அனைத்தையுமே அவள் தந்தையிடம் சொல்லி இருக்கிறேன். உண்மை தானா என்று நீ அவளிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நாங்கள் இங்கே யாரையும் மறைக்கவில்லை. அப்படி நீ நினைத்தால் நந்தனை மட்டுமோ அல்லது ரமேஷ் நந்தன் இருவரையுமோ நாங்கள் ஜெயிலுக்குப் போக அனுமதிக்க மாட்டோம். எங்களையும் சேர்த்து இவர்களும் உடந்தை என்று கூறிவிடு. நான்கு பேரும் ஜெயிலுக்குப் போய்விடுகிறோம் என்றார்.

உமா யோசித்துப் பார்த்தாள். வெகுநேரம் கழித்து ஒரு முடிவுக்கு வந்தவளாய் பேச ஆரம்பித்தாள்.

பாகம் - 34

உமா, இந்த மாதிரி தன் திட்டம் பிசுபிசுத்துப் போகும் என்று நினைக்கவே இல்லை. சரி நான் உங்களை நம்புகிறேன் என்று ஒரே வரியில் சொல்லிவிட்டுக் கிளம்பி விட்டாள். அவர்களும் தடுக்கவில்லை. மீண்டும் வீட்டுக்குத் திரும்பும் போது, செல்வத்தின் அம்மா நம்மை எப்படி அன்புடன் வரவேற்றார்? செல்வமும் எனக்குத் தெரிந்து நல்லவன் தான். ஒரு வேளை திருடர்கள் இருவரும் இவர்களை ஏமாற்றி இங்கே தங்கியிருக்கிறார்களோ என்று எண்ணிய வண்ணம் வீட்டுக்குள் நுழைந்தாள்.

மறுநாளே கலைச்செல்வி வந்ததும் முந்திய நாள் நடந்ததைச் சொன்னாள். கலைச்செல்வியும், என் அப்பாவும் சொன்னாரடி. அவனைப்பற்றி. அதான் என் கழுத்தை அறுத்தவனைப் பற்றி. வால்மீகி அப்படி இப்படீன்னு. எனக்காக அவன் ஜெயிலுக்குப் போறானாமா? என் அப்பாகிட்ட முன்பே சொல்லியிருக்கனும் இந்தக் காயம் எப்படி வந்ததுன்னு. அதைச் சொல்லாம விட்டது என் முட்டாள்தனம் என்றாள். ஆனா பேசுறது பழகுறதப் பாத்தா அவனுக தப்பு செய்றவங்க மாதிரி எனக்கும் தெரியலடி என்றாள் உமா. ஆனால் செல்வத்தின் மேல் அவளுக்கு நல்ல அபிப்ராயம் வந்திருந்தது. அவனைப் பார்த்து புன்முறுவல் செய்தாள். அவனுக்கோ உமாவின் மேல் கோபம் அடங்கவில்லை. என் வீட்டுக்கே வந்துட்டியா நீ என்று நினைத்துக் கொண்டான்.

நந்தனை நல்லவன் என்று நிரூபிக்கும் வாய்ப்பு அன்றே அமையும் என்று எதிர்பார்க்கவில்லை கலைச்செல்வியும்!

அன்று தான் அந்தக் கல்லூரிக்கு அந்தப் பெரியவர் வரும் நாள். கல்லூரியே சுத்தமாய் இருந்தது. எல்லாம் மாணவ மாணவிகளின் கைங்கரியம் தான். அனைவருக்கும் சந்தோசம். பெரியவரை உட்கார வைத்துக் கொண்டே முதல்வர் பேச ஆரம்பித்தார். அன்று நந்தனுடன் நடந்த அனைத்து உரையாடல்களையும் அப்படியே சொல்லி நம் கல்லூரியில் சாதாரண துப்புரவுப் பணி புரிந்தும் கல்லூரியின் மேல் அவன் கொண்ட அக்கறையையும் மாணவர் சமுதாயத்தைப் பற்றி அவன் சரியாகக் கணித்திருந்ததையும் அதைத் தாம் அப்படியே நடைமுறைப் படுத்தியதும் சொல்லிவிட்டு இப்போது மிஸ்டர் நந்தனை மேடைக்கு அழைக்கிறேன் என்று மேடையில் அறிவித்தார். நந்தனுக்கே மிகுந்த சங்கோஜமாய் போய்விட்டது. அனைவரும் கை தட்ட உமாவும், கலைச்செல்வியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள நந்தன் மேடைக்கு அழைக்கப்பட்டான். அவனுக்கு உமா கலைச்செல்வி இருக்கிறார்களா கூட்டத்தில் என்று கூடத் தெரியாது. மைக் பிடித்து பேச ஆரம்பித்தவுடன் தன்னைப் பெற்ற தாய் இந்நேரம் இங்கே இருந்தால் பூரித்திருப்பாள் என்று ஆரம்பித்து, தான் அனாதையானதிலிருந்து கொள்ளையடித்த வரை அனைத்தும் சொன்னான். ஆனால், கல்லூரி சுற்றுலாவின் போது கொள்ளை நிகழ்ந்ததை மட்டும் சொல்லவில்லை. தான் திருந்தி வாழ்வதாகவும், அதற்கு வாய்ப்பளித்த இந்தக் கல்லூரிக்கு நன்றிக் கடன் பட்டிருப்பதாகவும் அனைவரின் நெஞ்சமும் உருகும் வண்ணம் சொல்லிவிட்டு கீழே இறங்கினான். முதல்வருக்கும் இவனின் கதையைக் கேட்டதில் ஆச்சரியம். அப்போது தான் வெங்கடாச்சாரியும் வர்ஷினியும் கூட அவனைக் கூர்ந்து பார்த்தனர். வர்ஷினி செல்வத்தினால் தான் இது சாத்தியம் என்று புரிந்து கொண்டார்.

அன்று அந்தப் பெரியவர் கணினித் துறையைப் பார்வையிட்டதால் கலைச்செல்வியும் இருக்க வேண்டியதாயிற்று, ஏனெனில் அவள் எழுதிய மென்பொருளைப் பற்றி விளக்க வேண்டியிருந்ததால் வர்ஷினி அவளை இருக்கச் சொல்லியிருந்தார். எல்லாம் முடிந்து கிளம்பும் போது மணி இரவு 8 ஆகியிருந்தது. கல்லூரியை விட்டு வெளியேறும் போது தான் கலைச்செல்வி தனியாக நிற்பதைப் பார்த்த முதல்வர் பேருந்திற்காக நிற்கிறாயா என்றார்.

அவளும் ஆமாம் சார். லேட்டாகி விட்டது என்றாள். ஒரு நிமிடம் யோசித்தவர் தூரத்தில் குப்பை அள்ளிக் கொண்டிருந்த நந்தனைப் பார்த்தார். நந்தன் என்று அழைத்தார். இவளை வீட்டில் கொண்டு போய் பத்திரமாய் சேர்த்து விடு என்றார். நான் தனியாகவே போய் விடுவேன் என்று கலைச்செல்வி சொன்னதை அவர் காதிலேயே வாங்கவில்லை. நான் சொல்கிறேன். இவளை வீட்டில் கொண்டு போய் விட்டு விடு என்றார். சரி சார் என்று சொன்னான் நந்தன்.

தனிமையில் இருவரும் பேருந்து நிறுத்தத்தில் காத்திருந்தனர். இருவரும் ஒன்றுமே பேசவில்லை. இப்படி ஒரு சூழ்நிலை வரும் என்று இருவருமே எதிர்பார்க்கவில்லை. பேருந்து வந்தது. இருவரும் ஏறினர். இருவருக்குமே உட்கார இடம் கிடைக்கவில்லை. ஆளுக்கொரு டிக்கட் எடுத்தனர். இறங்க வேண்டிய நிறுத்தம் வந்ததும் இருவரும் இறங்கினர். அவள் இல்லம் அங்கிருந்து 100 மீட்டர் நடையிலிருந்தது. அவள் முன்னே நடக்க ஆரம்பித்தாள். இவன் பின்னால் நடக்க ஆரம்பித்தான்.

கலைச்செல்விக்கு நடப்பதையெல்லாம் பார்க்க சிரிப்பு வந்தது. எவன் தன் கழுத்தை அறுத்தானோ அவனே தனக்குக் காவலாய் வருவது. நந்தன் கையைக் கட்டிக் கொண்டு மெதுவாகப் பின்னால் நடந்து வந்தான். அவன் மனம் அவளிடம் மன்னிப்புக் கேட்டு மன்றாடியது. அது அவளுக்கே கேட்டதோ என்னவோ சட்டென்று திரும்பிப் பார்த்தாள்.

அப்போது தான் அவன் முகத்தை அருகில் பார்த்தாள். ஏற்கனவே நம்மைக் கொள்ளையடிக்க முயற்சி செய்த முகம் இதுவல்ல என்று அவளுக்குத் தோன்றியதோ? எதுவும் சொல்லாமல் சிரித்துக் கொண்டாள். அவனும் அவள் கழுத்தைப் பார்த்துப் பின்னர் அவள் முகத்தைப் பார்த்தான். கண்கள் நான்கும் கலந்தன. இருவர் மனங்களும் பேசிக் கொண்டன. கலைச்செல்வி இந்தப் பாதை இப்படியே நீடிக்காதா என்று நினைத்துக் கொண்டாள். அவனும் தான். ஆனால், பாழாய்ப் போன அவள் வீடு இதோ கண் முன்னே இருக்கிறதே!

பாகம் - 35

உமாவிடம் மறுநாளே நடந்ததைச் சொல்லிவிட்டாள் கலை. உமா அன்று முழுதும் அவளைக் கேலி செய்தே தீர்த்து விட்டாள். கலைச்செல்விக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. அன்று மாலை வேண்டுமென்றே வீட்டுக்குச் செல்லாமல் தாமதித்தாள் உமா. கலையையும் எழ விட வில்லை. இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது தான் நந்தன் அவர்கள் அறையையும் சுத்தம் செய்ய வந்தான். இவர்கள் இருப்பதைப் பார்த்ததும் வெளியே செல்லப் பார்த்தான். ஹலோ என்றழைத்த உமா, இங்கே இரண்டு பேரு உட்கார்ந்துகிட்டு இருக்கோம் எங்கே ஓட்றீங்க என்று அவனை அழைத்து, இவ உங்க கூட ஏதோ பேசணுமாம் என்று சொல்லிவிட்டு, கலையைப் பார்த்து கண்ணடித்த வண்ணம் சென்று விட்டாள். நந்தன் இது தான் சமயமென்று அவளருகில் வந்தான். என்னை மன்னித்துக் கொள் என்றான் அவள் கண்களைப் பார்த்து. கலைச்செல்வியும் அவனைப் பார்த்து உங்களை என்னால் மன்னிக்கவும் முடியாது மறக்கவும் முடியாது என்று கூறினாள். அதை அவள் சொன்ன தொனியைப் பார்த்த அவன் அதில் துளியும் கோபமில்லை என்பதையும் எல்லையில்லா அன்பு இருந்தது என்பதையும் உணர்ந்து கொண்டான். நான் மிகவும் அதிர்ஷ்டசாலி என்றான். கொள்ளையடிக்க முடிவு செய்ததைப் போல் ஒரு நல்ல முடிவு என் வாழ்நாளிலேயே எடுத்ததில்லை. இல்லாவிட்டால் இந்த தேவதையைப் பார்த்திருக்க மாட்டேன் என்றான். அவளும் பதிலுக்கு, பொய்க் கோபத்துடன் கழுத்துக் காயத்துக்கு நன்றி என்றவாறு வெளியேறிக் கிளம்பி விட்டாள். இவ்வாறாக அவர்களின் காதல் பயணம் ஆரம்பித்தது.

நான்காமாண்டு கல்வியும் ஆரம்பித்தது. விடுமுறை நாட்களில் நந்தன் அடிக்கடி கோவிலுக்குச் செல்ல ஆரம்பித்திருந்தான். எந்தச் சாமியைக் கும்பிட என்று உங்களுக்குத் தெரிந்திருக்குமே! கலைச்செல்வி இரண்டாவது பேருந்தையே தேர்ந்தெடுத்து செல்ல ஆரம்பித்திருந்தாள். காரணம், ஏற்கனவே இறுதியாண்டு என்பதால் கொஞ்சம் சுமையும் அதிகமிருந்தது அது போக நந்தனுடனும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருக்கலாமே!

அப்படித்தான் ஒருநாள் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். நந்தன் கொஞ்சம் சிரத்தையின்றி பேசுவது போல் அவளுக்குத் தோன்றியது. ஏங்க என்னாச்சு என்றாள். ஒன்றுமில்லையே என்றான் நந்தன். என்னவோ யோசிக்கிறா மாதிரி தெரியுது என்றாள் கலை. அதெல்லாம் ஒன்னுமில்லை என்றான். இப்போ எங்கிட்ட சொல்லப் போறீங்களா இல்லையா என்று அவள் கேட்டதும் அவன் கண்களில் நீர். பதறி விட்டாள் கலை. என்னாச்சு இப்போ சொல்லுங்க உடனே என்றவுடன், ரமேஷ் அவன் போட்ட காண்டிராக்ட் அவனுக்கே வந்திருக்கு கலை. சந்தோசமான சமாச்சாரம் தானே அதுக்கென்ன இப்போ என்றாள் கலை. அதில்லை, அவன் சேத்து வைச்சதெல்லாம் போட்டுத் தான் டெபாசிட் கட்டியிருக்கான். அது வீட்டு வசதி வாரியத்தோட காண்டிராக்ட். பத்து வீடு கட்டியதும் தான் பணம் கொடுப்பாங்க. அதை வைத்து அடுத்த பத்து வீடு கட்டலாம். நூறு வீடு கட்டச் சொல்லி காண்டிராக்ட். ஆனா, அதுக்கு சாமான் செட்டெல்லாம் கூட கடன்ல வாங்கிறலாம். ஆனா கூலி? அதை ரொக்கமாத் தானே குடுக்கணும். அதுக்கு எப்படியும் ஒரு இருபத்தையாயிரம் ரூபா வேணும். அவ்ளோ பணத்துக்கு நாங்க எங்கே போவோம் கலை. பாவம் அடுத்த வாரம் வேலை ஆரம்பிச்சாகணும். இல்லாட்டி போட்ட டெபாசிட் ஐயாயிரம் ரூபாயும் கைவிட்டுப் போயிரும். அதான் யோசிக்கிறேன். நாங்க இந்த மண்ணுக்கு வந்ததே பாரமோ?

கலை, அவ்வளவு தானே, இந்தாங்க எங்கம்மா செயின். இது ஐந்து பவுன் தேரும். இதை வைத்து ரமேஷைத் தொழில் துவங்கச் சொல்லுங்க என்றாள். எந்தச் செயினை யாருக்காகக் கழட்டிக் கொடுக்க மாட்டேன் என்றாளோ, அதே செயினை அவனுக்கே அவளே கொடுத்தது தானே

விதி? நந்தன், ஹேய்! இது உங்க அம்மாவோட செயின். என்னோட உயிர் மாதிரின்னு சொல்லுவியே, வேண்டாம் இந்தா என்று திருப்பிக் கொடுத்தான். உங்களுக்காக என் உயிரையும் கொடுப்பேன்னு உங்களுக்குத் தெரியணும்ல அதான் என்ற படி கிளம்பி விட்டாள். ஐந்து பவுன் தங்கச் சங்கிலி அவனைப் பார்த்துச் சிரித்தது.

ரமேஷ் அடுத்த வாரமே நினைத்தது போல் வேலையைத் துவங்கி விட்டான்.

பாகம் - 36

கலையை நந்தனுடன் சேர்த்து வைத்ததற்கு நன்றி சொன்னான் உமாவிடம் செல்வம். நாங்களும் நல்லது செய்வோம் என்றாள் பதிலுக்கு உமா! இப்படி எலியும் பூனையுமாகத் தான் இருந்தனர் இருவரும். ஆனால் உமா வீட்டில் நடந்த ஒரு சம்பவம் தான் மொத்தக் கதையையும் மாற்றியது!

அன்று ஞாயிற்றுக் கிழமை. உமா அவளது கணினியில் அமர்ந்து அவளது மென்பொருள் பிராஜக்டை முடித்துக் கொண்டிருந்தாள். டமாலென்ற சத்ததைக் கேட்டு ஹாலுக்கு ஓடி வந்தாள். வீட்டைத் துடைத்துக் கொண்டிருந்த வேலையாள் ஹாலில் மேலே மாட்டியிருந்த பழைய புகைப்படத்தைக் கை தவறி கீழே போட்டு உடைத்து விட்டிருந்தான். ஹாலுக்கு விரைந்த உமா அந்தப் படத்தை எடுத்தாள். அது ஒரு பழைய படம். அடிக்கடி அவளும் பார்த்தது தான். இப்போது தான் புதிதாகப் பார்ப்பது போல் பார்த்தாள். திடீரென்று அவளுக்கு ஒரு பொறி தட்டியது. அந்தப் புகைப்படம் அவள் அப்பா சிறு பிள்ளையாய் இருந்த போது எடுத்தது. என்ன சத்தம் அங்கே என்று தனது ரூமிலிருந்து கேட்ட தந்தைக்கு ஒன்றுமில்லையப்பா, ஒரு போட்டோ விழுந்து விட்டது. புது கண்ணாடி போட வேண்டியது தான் என்ற படி அவரருகில் வந்து அமர்ந்தவள், அவரருகில் நிற்கும் ஒரு பெண்ணைக் காட்டி இது யாரப்பா? என்று கேட்டாள். அதற்கு அவர் இது என் அக்கா தான், ஆனால் நான் சிறு வயதாயிருக்கும் போதே இறந்து விட்டார் என்று சொல்லிவிட்டு பேப்பர் படிக்க ஆரம்பித்து விட்டார். உடனே சமையலறைக்குச் சென்ற உமா, அவளது அம்மாவிடம், அம்மா இது யாரப்பா அப்பாவின் அக்கா? இறந்து விட்டாராமே என்றாள் சந்தேகத்துடன். அப்படியில்லை உமா, இவர் உன் அத்தை தான். இளம் வயதில் உங்க அப்பா வீட்டு டிரைவருடன் ஓடி விட்டாளாம். அன்றிலிருந்து அவளைத் தலை முழுகி விட்டார்கள் உங்க அப்பாவின் குடும்பத்தில் என்றார். இவர் பெயர் என்னம்மா என்றாள் உமா. ஏதோ ராஜாத்தின்னு நினைக்கிறேன் என்றார். அப்போது தான் உமாவுக்கு இவள் தந்தையைப் பார்த்ததும் அன்று ராஜாத்தி அம்மாள் எனக்கு வேலையிருக்கிறது என்று ஓடிவிட்டது ஞாபகம் வந்தது. முதமுதல்ல என் வீட்டுக்கு வந்திருக்க காபி சாப்டுறியாம்மா என்னும் குரலும் உள்ளே ஒலித்தது.

அட இங்கே பார்றா செல்வம்! கடைசியில நான் உன் மாமன் மகளாக்கும்? வாடா என் மச்சான். உன்னை வச்சுக்கிறேன்டா எப்பவும் நெஞ்சுக்குள்ளேயே என்று நினைத்துக் கொண்டாள்.

பாகம் - 37

ரமேஷ் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற ஆரம்பித்திருந்தான். அவன் எப்படி ஒரு இஞ்சினியரிடம் வேலைக்குச் சேர்ந்தானோ அதே போல் அவன் அலுவலகத்தில் வேலைக்குச் சேர்ந்தவள் தான் திருமகள். ஏழ்மையான குடும்பத்திலிருந்து வந்தவள். பெயருக்கும் வசதிக்கும் பொருத்தமில்லாவிட்டாலும், பெயருக்கும் அழகுக்கும் பொருத்தமாகவே இருந்தாள்! ரமேஷ் ஒவ்வொரு வீட்டிற்கு வரைபடம் போடும் போதும், அதில் அவன் காட்டும் ஈடுபாட்டைக் கண்டு வியந்திருக்கிறாள். ஒருநாள் ஏன் சார், நம்ம தான் கட்டிக் கொடுக்கும் 100 வீடும் ஒரே மாதிரி தானே, எதுக்கு ஒவ்வொரு வீட்டுக்கும் தனிக்கவனம் செலுத்துறீங்க என்றாள். இங்கே பாரம்மா ஒவ்வொன்னும் அதே இடத்துலெயே கட்டலியே. அதான். அது போக ஒவ்வொரு வீடும் ஏதோ கட்டிடம் இல்லை. ஒரு குடும்பம் வாழப்போற இடம். நான் இதே வீட்டை எனக்காகக் கட்டினா எப்படித் தரமா, பாத்துப் பாத்துக் கட்டுவேனோ அப்படித்தான் எல்லா வீட்டையும் நான் கட்டுவேன். எனக்கு அதிக லாபம் முக்கியமில்லை. ஆனால் என் கனவு நிறைவேறனும் என்றான் ரமேஷ். திருமகளும் வாய் மூடாமல் இந்த அதிசயப் பிறவியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆனால், அந்த மாதக் கடைசியில் திருமகளுக்கு சம்பளம் தரவில்லை. வரவேண்டிய பணம் வரவில்லை. இன்னும் ஒரு வாரத்தில் வந்து விடும் அது வரை பொறுத்துக் கொள் என்றான் ரமேஷ். அவளுக்கோ குடும்பத்தில் கஷ்டம். கொடுக்கிறதா இருந்தா கொடுங்க. இல்லாட்டி குடுக்க முடியாதுன்னு சொல்லுங்க சார். உங்களப் பார்த்தா பொழைக்கிறவர் மாதிரி தெரியல. உங்க கூடச் சேர்ந்தா உருப்பட முடியுமோ என்னவோ என்றாள். அவன் அவளைப் பார்த்துக் கொண்டே, எனக்காகக் காத்திருக்க மாட்டாயா? என்றான். முடியாது சான்ஸே இல்லை என்றாள் திருமகள். சரிம்மா நாளைக்கு வந்து பணத்தை வாங்கிக்கோ என்று கவலை தோய்ந்த முகத்துடன் சொன்னான் ரமேஷ்.

மறுநாள் விறுவிறுவென்று வழக்கம் போல் வந்து அவள் இருக்கையில் அமர்ந்தாள் திருமகள். ரமேஷ் ஒரு மணல் வண்டிக்காரருக்குக் கொடுக்க வேண்டிய பணத்திலிருந்து எடுத்து அவளிடம் கொடுத்தான். இதோ உன் சம்பளம் என்று வேறெதுவும் பேசாமல் போய் அவன் இருக்கையில் உட்கார்ந்து கொண்டான். மீண்டும் அவனிடமே பணத்தைக் கொடுத்த திருமகள் இருக்கட்டும், நீங்க கொடுக்குறப்போ குடுங்க என்றாள். என்ன திடீர்னு மாறிட்ட என்றான் ரமேஷ் உள்ளூர சந்தோசத்துடன். நேத்து என்னைப் பொண்ணு பாக்க வந்திருந்தாங்க. மாப்பிள்ளைக்கு என்னை ரொம்பப் பிடிச்சுப் போச்சு என்றாள். ஓ. அதான் சந்தோசத்துல திரும்பவும் வேலைக்கு வந்துட்டியா என்றான் இப்போது உள்ளூரக் கவலையுடன்! அவங்க கேட்குற வரதட்சணையைச் சம்பாதிக்கத் தான் வேலைக்கு வந்திருக்கேன் என்றாள். ஓ அப்படியா? என்றான் நிஜமான கவலையுடன்.

மேலும் இரண்டு மாதங்கள் ஓடியது. இப்போது ரமேஷின் கையில் பணம் எஞ்சியிருக்க ஆரம்பித்தது. அவனது திறமையையும் கட்டிடத்தின் தரத்தையும் பார்த்து நிறைய ஆர்டர்கள் வர ஆரம்பித்திருந்தன. திருமகள் இருந்ததால் கணக்கு சரியாக வைத்திருக்க முடிந்தது. ஒருநாள் அவனது அலுவலகத்திற்கு வந்த ராஜாத்தி அம்மாள் இவர்கள் இருவரையும் பார்த்தாள். அன்றிரவு வீட்டுக்கு வந்த ரமேஷிடம், இப்பத்தான் தெரியுது இவன் ஏன் வீட்டுக்கு லேட்டாவே வர்றான்னு, ஜோடிப் பொருத்தம் நல்லா தாண்டா இருக்கு என்றார். அய்யோ அம்மா! அவளுக்கு ஏற்கனவே கல்யாணம் நிச்சயமாயிருச்சி என்றான் ரமேஷ் எரிச்சலுடன்.

ரமேஷ் எடுத்திருந்த காண்டிராக்ட் முடிந்திருந்தது. ஒரு நாள் மாலையில் கல்லூரிக்கு

வந்திருந்தான் ரமேஷ். நந்தனும் கலையும் பேசிக் கொண்டிருந்தனர். இருவரையும் ஒரு சேரப் பார்த்ததில் சந்தோசமடைந்த ரமேஷ் கலைச்செல்வியைப் பார்த்து, சகோதரி, உங்க செயினைக் கொடுத்ததுனால தான் நான் இந்தளவுக்கு உசந்திருக்கேன். இந்தாங்க உங்க செயின். இதை நான் விக்கல. அடமானம் தான் வச்சேன். நாளைக்கு என்னோட புது அலுவலகம் திறந்திருக்கேன். நீங்க தான் குத்து விளக்கேத்தி ஆரம்பிச்சு வைக்கணும் என்றான் ரமேஷ்.

பாகம் - 38

கலைச்செல்விக்கு செயின் திரும்பக் கிடைத்ததில் ரொம்ப சந்தோசம். அவள் தந்தையிடம் கழட்டி வைத்திருக்கிறேன் என்று சொன்ன பொய்யை இனிமேலும் தொடர வேண்டியதில்லை. நந்தனும் இவளைக் காதலுடனும் பெருமையுடனும் பார்த்தான். மறுநாள் ரமேஷ் திறந்த அலுவலகத்தில் அனைவரும் இருந்தனர். கலைச்செல்வி, செல்வம், ரமேஷ், நந்தன், ராஜாத்தி அம்மாள், திருமகள் இவர்களுடன் உமாவும் வந்திருந்தாள்.

மங்களகரமான நேரத்தில் கலைச்செல்வியைக் குத்துவிளக்கு ஏற்றச் சொன்னான் ரமேஷ். அவள் ராஜாத்தி அம்மாளைப் பார்க்க அவரும் கண்ணாலேயே அனுமதியளித்தார். கலைச்செல்வி நிறைந்த மனதுடன், பாந்தமாக குத்துவிளக்கேற்றி வைத்தாள். ரமேஷ் இரண்டு எட்டு முன்னே வந்து அம்மா உங்கள் எல்லோர் முன்னிலையிலும் சொல்கிறேன், உரிய சமயத்தில் சகோதரி தந்த பணத்தில் தான் இந்த அலுவலகமே திறக்க முடிந்தது. எனவே இதற்கு செல்வி கன்ஸ்டரக்ஷன்ஸ் என்று பெயர் வைத்திருக்கிறேன். இதன் முதலாளியம்மா என்றுமே கலைச்செல்வி தான். நான் என்றும் சம்பளம் வாங்கும் பணியாளாகவே இருப்பேன். ஆனால், அதிக சம்பளம் எடுத்துக் கொள்வேன் என்றான் கண்ணடித்தவாறு. என் கனவு மெய்ப்படும் அம்மா. ஒருநாள் நமது நிறுவனம் கட்டிய கட்டிடங்கள் இங்கே பேர் சொல்லும் என்றான்.

கலைச்செல்வி இதெல்லாம் வேண்டாம், என் நகையைத் தான் திருப்பிக் கொடுத்து விட்டீர்களே என்றாள். இருந்தாலும் ரமேஷ் ஒப்புக் கொள்ளவில்லை. ராஜாத்தி அம்மாளும் ரமேஷ் சொல்வது தான் சரி. நீங்கள் இன்று போலவே என்றும் ஒற்றுமையாய் இருந்தால் சரி தான் என்றார்.

உமாவும் செல்வமும் சகஜமாகப் பேசிக் கொள்ள ஆரம்பித்திருந்தனர். உமா ராஜாத்தி அம்மாள் மட்டும் இருக்கும் நேரத்தில் ஒரு நாள் வீட்டுக்குச் சென்றாள். தான் கண்டறிந்த உண்மையைச் சொன்னாள். ராஜாத்தி அம்மாளும் தான் தம்பி மணியை அடையாளம் கண்டதாக ஒத்துக் கொண்டார். அத்தை அத்தை என்று சொந்தம் கொண்டாட ஆரம்பித்தாள் உமா. ராஜாத்தி அம்மாள் மணிமாறன் பற்றிய அனைத்து விஷயங்களையும் உமா மூலமாகத் தெரிந்து கொண்டார். ஆனால் மணிமாறனை மட்டும் உடனே காண ஒத்துக் கொள்ளவில்லை. செல்வம் படித்து ஒரு நல்ல வேலையில் அமரட்டும் நானே வந்து உன்னை என் மகனுக்குப் பெண் கேட்பேன் உரிமையுடன் என்று சொல்லிவிட்டார். உமாவால் வேறு ஒன்றும் சொல்லமுடியவில்லை.

ராஜாத்தி அம்மாளின் மனதில் ஒரு கவலை தோன்றியிருந்தது. மதுசூதனன் நந்தனைத் தன் மருமகனாக ஏற்றுக் கொள்வாரா என்பதே அது.

பாகம் - 39

ஒருநாள் ஆமா எவ்வளவு தான் வரதட்சிணை கேட்டார் உனக்கு கணவரா வரப் போறவர் என்று கேட்டான் ரமேஷ் திருமகளைப் பார்த்து. என்ன சார் திடீர்னு என்று கேட்டாள். இல்லை சும்மாத் தான் என்றான் ரமேஷ். இத்தனை பிசியிலும் நம்மைப் பற்றிய நினைப்பு கூட இருக்கா என்று நினைத்து உள்ளூரச் சிரித்துக் கொண்டாள் திருமகள். முதல் மாதம் முடிந்ததும் தன் சம்பளமாக ஐயாயிரம் ரூபாய் செலவெழுதிக் கொள்ளச் சொல்லி விட்டு, அந்தத் தொகையை விவேகானந்தா ஆசிரமம், தஞ்சாவூருக்கு அனுப்பச் சொன்னான் ரமேஷ். வித்தியாசமாகப் பார்த்தவளை, முதல் சம்பளத்தை என்னை வளர்த்து ஆளாக்கிய ஆசிரமத்துக்கு முழுசா கொடுப்பேன்னு நினைச்சிருந்தேன். மாசா மாசம் முடிஞ்சதை அங்கே அனுப்பனும். என்னை மாதிரி எத்தனை ரமேஷை உருவாக்க முடியுமோ உருவாக்கனும். இப்போதைக்கு இது தான் என் கனவு என்றான் ரமேஷ்.

நிசமாவே நீங்க ரொம்ப நல்லவர் தான் சார் என்றாள் திருமகள். சரி சரி உன் வேலையப் பாரு என்றான் ரமேஷ். ஒரு நாள் மிகவும் தாமதமாகி விட்டது அலுவலகத்தைப் பூட்ட. என்ன உன்னைத் தேடி யாருமே வரமாட்டாங்களா என்றான் ரமேஷ். ஆமா, ஒண்டிக்கட்டையத் தேடி யாரு வாராங்க என்றாள். என்ன சொல்ற என்றான் ரமேஷ். சார் நாங்க நல்லா வாழ்ந்த குடும்பம். நான் பொறந்ததும் எந்த நேரத்துல எனக்கு திருமகள்னு பேரு வச்சாங்களோ தெரியல. நான் ஒரு அதிர்ஷடக்கட்டை. என் அப்பாவுக்கு கடன் ஏறிக்கிட்டே போயி வியாபாரம் நொடிச்சுப் போச்சு. மஞ்சக் கடுதாசி கொடுத்துட்டாரு. இந்த ஊருக்குப் பொழைக்க வந்தோம். அவருக்கு பிசினஸ் தவிர உடம்பு வளஞ்சு வேலை பாத்ததில்ல. ஒருநாள் மூட்டைப்பூச்சி மருந்தக் குடிச்சிருவோம்னு எல்லோருக்கும் கொடுத்துட்டாரு போல. அதிலும் நான் அதிர்ஷடக்கட்டை தான். என்னை மட்டும் காப்பாத்திட்டாங்க டாக்டருங்க. ஏதோ படிச்சதை வச்சு இதோ நானே சம்பாதிச்சிக்கிறேன். நானே சாப்பிட்டுக்கிறேன் என்றாள். சீக்கிரமே உனக்குக் கல்யாணம் நடக்கும் பாரேன் என்றான் ரமேஷ். சார் அப்படி ஏதும் ஆசைய நான் வளர்த்துக்கல. பாவம் நான் எங்கே போனாலும் அதிர்ஷடமே இருக்காது சார். எதுக்கு ஒரு குடும்பத்தைச் சீரழிக்கணும் நான் போயி என்றாள். இப்போ நீ இங்கே வந்த. அதிர்ஷ்டம் இல்லாமலா போச்சு? நானும் அதிர்ஷடக் கட்டை. நீயும் அதிர்ஷ்டக் கட்டை. இந்த மாதிரி ஏதாவது அதிர்ஷ்டக்கட்டையோட சேர்ந்தன்னு வைய்யி அதிர்ஷ்டம் தன்னால வரும் என்றான் ரமேஷ். இதுவும் நல்லாத் தான் இருக்கு, கேட்க என்றாள் திருமகள்.

ராஜாத்தி ஒருநாள் நந்தனையும் அழைத்துக் கொண்டு தைரியமாகக் கேட்டே விடுவது என்ற முடிவுடன் மதுசூதனனின் வீட்டுக்குச் சென்றார். நந்தனைப் பார்த்ததும் மதுசூதனனுக்கு மகிழ்ச்சி. முதன் முதலில் வீட்டுக்கு வருகிறான் அல்லவா? கலை இங்கே பார் யார் வந்திருக்கிறார்கள் என்று காபி கொண்டு வா என்று அழைத்தார். கலைச்செல்வி சமையலறைக்குள் இருந்து வெளியே வந்து பார்த்து நந்தனைப் பார்த்ததும் இன்ப அதிர்ச்சி அடைந்தாள்.

காபி குடித்து முடிந்ததும், ராஜாத்தி அம்மாள் மெல்ல ஆரம்பித்தார். நந்தனைப் பற்றி உங்களுக்கு எல்லாமே தெரியும். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அப்பா அம்மா இல்லாத பையன். இப்போது என் மகன். ரொம்ப நல்ல பையன். ஆசிரமத்தில் வளர்ந்தவன். படித்தவன். இதெல்லாம் தான் எனக்கே தெரியுமே, ஏற்கனவே சொல்லியிருக்கேளே என்றார் மதுசூதனன் சிரித்துக் கொண்டே. தம்பியின் பேச்சை நாள் முழுதும் கேட்டுக் கொண்டே இருக்கலாம். அவர் பேசியது தான் இன்னும் என் காதுக்குள்ளேயே ஒலிக்கிறதே என்றார்.

இந்தப் பையன் கொள்ளையடிக்கவும் முயற்சி செய்தான். அப்போ நடந்த அசம்பாவிதத்தில காயம் ஏற்பட்டது என்று தயங்கினார் ராஜாத்தி அம்மாள். அம்மா, நான் ஒன்னு சொல்றேன் கேளுங்கோ, என் கணிப்பு மட்டும் சரியா இருந்தா இந்தப் புள்ளையாண்டான் காயமேற்படுத்துனது கலைச்செல்விக்கு. சரி தானா என்றார். மூவருமே விக்கித்துப் போனார்கள். அம்மா, நான் பொண்ணப் பெத்துட்டேனோல்லயோ, என்னைக்கு இவரைப் பத்திப் பேச்செடுத்தேனோ அன்னைக்கே பேச்சை வெடுக்கென்று முறித்தாள். அப்போதே எனக்கு சந்தேகம் வந்தது. அப்புறம் இப்போதெல்லாம் இவள் தன்னிலையிலேயே இல்லை. மிதந்து கொண்டே இருக்கிறாள். இந்த வயதுக்கே உரிய விஷயங்கள் தானே அம்மா. இவளது அம்மா இருந்திருந்தால் இதையெல்லாம் சரியாகப் பார்த்திருப்பாள் என்றார்.

நான் வந்த வேலை சுலபமாகவே முடிந்தது ஐயா. கலைச்செல்வியும் நந்தனும் காதலிக்கிறார்கள். இவர்களைச் சேர்த்து வைப்பது உங்கள் பொறுப்புத் தான் என்றார். கலைச்செல்வி அழுது கொண்டே அப்பா என்னை மன்னித்து விடுங்கள். இவர் மிகவும் நல்லவரப்பா. கட்டி வைத்தால் இவருக்கு என்னைக் கட்டி வையுங்கள். இல்லாவிட்டால் நான் உங்களைக் கவனித்துக் கொண்டு இங்கேயே இருந்து விடுகிறேன் என் வாழ்நாள் முழுதும் என்றாள்.

மதுசூதனன் சிரித்துக் கொண்டே, உன் மேல் தவறேதும் இல்லையம்மா. எல்லாம் அவன் செய்யும் செயல். நான் உன் தாயை இழந்து திக்கற்றவனாயிருந்த போது இந்த ஜாதி மக்களா வந்து என்னைப் பார்த்துக் கொண்டனர்? இந்த ஆண்டவன் தான் பார்த்துக் கொண்டான். இறைவன் முன்னிலையில் அனைவரும் சமம் என்று நினைப்பவன் நான். இவளது படிப்பு முடியட்டும். நல்ல நாளாய்ப் பார்த்து திருமணத்தை நடத்தி விடுவோம் என்றார் மதுசூதனன். நந்தன் என் மகளைக் கண்கலங்காமல் பார்த்துக் கொள்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது என்றார் கண்கள் பனிக்க. நந்தனும் கலைச்செல்வியும் சேர்ந்து மதுசூதனனின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டனர்.

ஹூம். இன்னும் என் தம்பியை மட்டும் சமாளிக்கணும் என்று நினைத்துக் கொண்டார் ராஜாத்தி அம்மாள்.

பாகம் - 40

அன்று இரவே திருமகளுக்கும் தனக்கும் நடந்த பேச்சை அம்மாவிடம் ஒப்பித்தான் ரமேஷ். நான் தான் அன்னைக்கே சொன்னேனே, உங்க ஜோடிப் பொருத்தம் பிரமாதமா இருக்குன்னு. என்னவோ சொன்ன? சரி சரி. அவளையே உனக்கு முடிச்சு வைக்கிறேன். போதுமா என்றார் ராஜாத்தி அம்மாள். ரமேஷ் சிரித்துக் கொண்டான்.

இறுதியாண்டுத் தேர்வும் முடிந்தது. பட்டம் பெற்ற கையோடு வேலை தேடிச் சென்றான் செல்வம். உமா அவளது அப்பாவை நச்சரித்து, கலைச்செல்வியையும் பார்ட்னராகப் போட்டு ஒரு மென்பொருள் நிறுவனத்தை ஆரம்பித்தாள். என்ன பெண்களாய்ச் சேர்ந்து நிறுவனம் நடத்துவதா என்று கேட்டவர்களிடம் வழக்கம் போல் அவள் தந்தை, என் மகள் பின்னே எப்படி இருப்பா? இன்னொருவனுக்குக் கீழே போய் உத்தியோகம் பார்ப்பான்னு நினைக்கிறீயா? அவள நான் அப்படி வளர்க்கல என்று டயலாக் பேசிக் கொண்டு இருந்தார்.

ஆறு மாதம் ஒரு அலுவலகத்தில் பணி புரிந்து நல்ல அனுபவங்களைப் பெற்றான் செல்வம். விடுமுறைக்கு வந்திருந்த செல்வத்தை அழைத்துக் கொண்டு உமாவிடம் கூடச் சொல்லாமல் மணிமாறன் வீட்டிற்குள் நுழைந்தார் ராஜாத்தி அம்மாள். நுழைந்ததும் மணி என்று அழைத்த தன் அக்காவைப் பார்த்ததும் முதலில் வியப்பும் பின்னர் வேதனையும் கொண்ட மணிமாறன் என்ன அக்கா இப்போது தான் உனக்கு நம் வீட்டு வாசலுக்கு வழி தெரிந்ததா என்றார். ராஜாத்தி அம்மாள் சிரித்துக் கொண்டே எனக்கென்ன மணி நான் எப்பவும் போல நல்லா இருக்கேன் என்றார். மாமா எங்கே என்று கேட்ட மணிக்கு வானைக் காட்டிய ராஜாத்தி அம்மாள் அது ஆச்சு 18 வருசம் என்றார். இது என் பையன் செல்வம். பி.இ. படிச்சிருக்கான். சென்னையில உத்தியோகம் பார்க்கிறான் என்றார். சரி என்னக்கா திடீர்னு இப்ப வந்து என்னைப் பாக்குற என்ன விசேசம் என்றார் வந்தவரை உட்காரக் கூடச் சொல்லாமல். அது ஒன்னுமில்லை மணி. நான் அன்னைக்குப் போகும் போது என் தாய் வீட்டுச் சீதனத்தை விட்டுட்டுப் போய்ட்டேன் அதை வாங்கிட்டுப் போகலாம்னு வந்திருக்கேன் என்றார். ஓ. சொத்துல பங்கு வேணும்னு சொல்றியா என்றார் இளப்பமாக மணிமாறன். இல்லை மணி. உன் சொத்தையே வாங்கிட்டுப் போக வந்திருக்கேன் என்று புதிர் போட்டார் அக்கா! என்ன தான் சொல்ற நீ என்றார் மணிமாறன். இன்னுமா புரியல. உன் மக உமாவை என் மகன் செல்வத்துக்கு பொண்ணு கேட்டு வந்திருக்கேன். அவ தான் நான் கேட்ட சீதனம் என்றார் ராஜாத்தி அம்மாள். என் மகளை எப்படி வளர்த்திருக்கேன்னு உனக்குத் தெரியுமா? அவ வந்து உன் வீட்டுல அடுப்படி வேலை பார்ப்பான்னு நினைச்சிக்கிட்டு இருக்கியா என்றார். இங்கே பாரு மணி. என்னைப் போலத் தானே என் மருமகளும் இருப்பா. அவளுக்கும் மனசுன்னு ஒன்னு இருக்குல்ல. அவ மனசுலயும் யார் இருக்கான்னு கேட்டுப் பாரு. வீணா என்னை விரட்டி விட்ட மாதிரி அவளையும் விரட்டி விட்டுடாத. ஆனா அன்னைக்கு இந்த ராஜாத்திக்கு யாரும் இல்ல. இன்னைக்கு என் மருமக உமாவுக்கு நான் இருக்கேன். அவ்வளவு தான் சொல்லிப்புட்டேன். வாடா செல்வம் என்றபடி அவள் வீட்டுக்குச் சென்று விட்டாள்.

உமா அலுவலகம் விட்டு வந்ததும் தான் ராஜாத்தி அம்மாள் வந்ததே அவளுக்குத் தெரிய வந்தது. மணிமாறனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. தன் மகளை எக்காரணம் கொண்டும் நரகத்தில் தள்ளி விடக் கூடாது என்று நினைத்தார். உமா அவரருகில் வந்து உட்கார்ந்தாள். அப்பா கவலைப்படாதீங்க. நான் ஒன்னும் ராஜாத்தி அத்தை இல்லை, காதலிச்சவனுடன் ஓடிப் போக. ஆனா அதுக்காக என்னை வேற ஒருத்தருக்குக் கட்டிக் கொடுத்துடலாம்னு கனவுல கூட நினைக்காதீங்க. நான் கனவிலேயும் நனவிலேயும் வாழப் போறது செல்வத்தோட தான். அதுவும் உங்க அனுமதியோட தான் நடக்கும். அது கனவா

நனவான்னு நீங்களே முடிவு பண்ணுங்க. அது வரைக்கும் காத்திருக்கேன் என்றாள். மணிமாறன் தன் மகளை வழக்கம் போல் பிரமிப்புடனும் பெருமையுடனும் பார்த்தார்.

அன்று மாலையே மணிமாறனும், உமாவும், அவள் தாயும் செல்வத்தின் வீட்டுக்கு வந்தனர். உள்ளே நுழைந்த மணிமாறன், தன் அக்கா இருக்கும் வீட்டின் நிலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டார். ராஜாத்தி அம்மாள் சிரித்துக் கொண்டே, எனக்கு ஒரு மகன்னு நினைச்சியா? கனவு போல வீட்டைக் கட்டுற ஒரு மகன் இருக்கான். இன்னொருத்தன் மனசால தெய்வம். அந்த வீட்டைக் கோவிலா மாத்துவான். இது ரமேஷ், இது நந்தன் என்று அறிமுகப் படுத்தி வைத்தார். அக்கா நான் நீ கேட்ட சீதனத்தைக் குடுக்குறதுன்னு முடிவு பண்ணிட்டேன் என்றார் மகிழ்ச்சியுடன்.

அடுத்த முகூர்த்தத்திலேயே மூவரின் திருமணங்களும் நடைபெற்றன.

செல்வமும் உமா கலைச்செல்வியின் நிறுவனத்தில் இணைந்து, மூவரும் சேர்ந்து அந்த மென்பொருள் நிறுவனத்தை விண் முட்ட வளர்த்தனர். பல இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்தனர்.

ரமேஷ் தான் கனவு கண்டது போல் மாட மாளிகைகளைக் கட்டிக் கொண்டிருந்தான்.

வெங்கடாச்சாரியும் வர்ஷினியும் வழக்கம் போல் சண்டையிட்டுக் கொண்டிருந்தனர்.

நந்தன் அமைதியாகக் குப்பையைப் பெருக்கிக் கொண்டிருந்தான்.

சுபம்.